# அரிஸ்டாட்டிலின்
# ஆட்சிக் கலை

# ஆட்சிக் கலை

**3**

**அரிஸ்டாட்டில்**

★

**கொடுமுடி ராஜகோபாலன்**

UNIVERSITY EXTENSION LIBRARY
14 AUG 1960
MADURAI

**ஸ்டார் பிரசுரம்**

திருவல்லிக்கேணி
சென்னை-5

மேலக்கோபுரத் தெரு
மதுரை

ஆட்சிக் கலை—3
முதற் பதிப்பு: செப்டம்பர், 1957
உரிமை பதிவு

விலை ரூ. 2·00

STAR PUBLICATIONS

TRIPLICANE
MADRAS-5

★

WEST TOWER ST.
MADURAI

தமிழன் அச்சகம், பாலாஜி நகர், சென்னை-14

# முன்னுரை

"ஆட்சிக் கலை" என்ற நூல் வரிசையில், இந்த "அரிஸ்டாட்டிலின் ஆட்சிக் கலை" என்னால் எழுதப்பட்ட மூன்றாவது நூலாகும்.

இந்த வரிசையில், இந்த நூல் கொஞ்சம் தாமதமாகவே வந்திருக்கிறது! நானே இதற்குப் பொறுப்பாளி; அதற்காக வாசகர்கள் என்னை மன்னிக்க வேண்டும்.

அரிஸ்டாட்டில், உலக அரசியல் சிந்தனையாளர்களின் வரிசையில் உன்னத ஸ்தானத்தை வகிக்கிறார். லட்சிய வாதமும், பிரத்தியட்ச நோக்கும் கலந்திருக்கும் அவரது அரசியற் கலை; ஆட்சிக் கலையைப் பற்றி நாம் கண்டிப்பாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்நூல் தோன்றியுள்ளது.

"ராஜாங்கமே எல்லாவற்றிற்கும் மேலானது" என்கின்ற அவரது தத்துவமும், அத் தத்துவத்தை நிலைநாட்ட அவர் கையாளும் தர்க்கவாத சாகஸத் திறமையும் மிகவும் சுவாரஸ்யமாக இருக்கின்றன. அவரது பல கருத்துக்களையும் நான் என்னால் இயன்ற மட்டில் எடுத்துக் கூற முயன்றிருக்கிறேன்.

அரிஸ்டாட்டில் முற்றிலும் கிரேக்க நாட்டின் திருஷ்டியிலேயே எல்லாப் பிரச்னைகளையும் பார்த்திருப்பதால், அவர் சில இடங்களில் பெரும் பிற்போக்காளராக நமக்குக் காட்சியளிக்கிறார்! அவரோ 2000 வருஷங்களுக்கு முன்பு வாழ்ந்தவர்; நாமோ 20-வது நூற்றாண்டில் வாழ்கிறோம். இந்த உண்மையை உணர்ந்துகொண்டு, அரிஸ்டாட்டிலின் கருத்துக்களை ஆராய்ந்தாலன்றி நாம் அவரைப் பற்றிச் சரியாகப் புரிந்துகொள்ள இயலாது. ஆயினும் அவர், எல்லாக் காலங்களுக்கும் பொருந்தவல்ல பேருண்மைகளையும் கூறியிருக்கிறார்.

இந்நூலை எழுதி முடிப்பதற்கு எனக்கு உதவி செய்தவர்களில் முதன்மையானவர் எனது அன்பார்ந்த நண்பரும், "தினமணி" உதவி ஆசிரியருமான **ஸ்ரீ என். பி. ஸ்ரீரங்கன்** அவர்களேயாகும். அவர் தமது உதவியையும் உழைப்பையும் நல்கியிராவிட்டால் நான் இவ்வளவு சீக்கிரமாக இந்த நூலை எழுதியிருக்க முடியாது. ஆங்கிலத்தில் நான் தயாரித்து வைத்திருந்த பல குறிப்புகளையும் அவரே மொழிபெயர்த்துத் தந்துதவினார். அவருக்கு என் மனப் பூர்வமான நன்றியைச் செலுத்திக் கொள்ளுகிறேன். மேலும், எனக்கு வேண்டிய ஆங்கிலப் புத்தகங்களைத் தந்து, என்னை உற்சாகப்படுத்திய சென்னை சர்வகலாசாலை அரசியல்துறைத் தலைவரும், பேராசிரியருமான **ஸ்ரீ ஆர். பாஸ்கரன்** அவர்களுக்கும், பல புத்தகங்களைப் படித்து எனக்கு ஆங்கிலத்தில் குறிப்புகள் எடுத்துத் தந்துதவிய ராஜதானிக் கல்லூரி, அரசியல் விரிவுரையாளர் **மிஸ்டர் ஜமீல் அகமது** அவர்களுக்கும், என்னுடைய இந்த நூல் 'கையெழுத்துப் பிரதி' வடிவத்தில் இருந்தபோது அதைச் சரிபார்த்து 'எடிட்' செய்துதவிய **ஸ்ரீ ரா. ஸ்ரீ. தேசிகன்** அவர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முடிவில், இந்நூலை உயர்ந்த முறையில் வெளியிட்டுள்ள **ஸ்டார் பிரசுரத்தாருக்கும்** என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்னை
30-8-1957

**கொடுமுடி ராஜகோபாலன்**

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# பொருளடக்கம்

1 கிரேக்க அரசியல் தத்துவத்தின் அடிப்படை 9

2 ஸ்பார்ட்டாவின் அரசியல் அமைப்பு 15

3 கிரேக்க அரசியல் ஞான வளர்ச்சியில் ஏதென்ஸின் பங்கு 20

4 அரிஸ்டாட்டிலின் காலமும்–வாழ்க்கை வரலாறும் 24

5 அரிஸ்டாட்டிலின் ஒழுக்கவியல் 37

6 அரிஸ்டாட்டிலின் அரசியல் 59

7 பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும் 104

8 அரிஸ்டாட்டிலை கண்டிப்பவர்-ஆதரிப்பவரின் சீல் முக்கிய வாதங்கள் 120

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

## முதல் அத்தியாயம்

# கிரேக்க அரசியல் தத்துவத்தின் அடிப்படை

கிரேக்க நாடு பண்டைப் பெருமை வாய்ந்த நாடுகளில் ஒன்ருகும்; நாகரிகம் முதிர்ந்த இனத்தவரைக் கொண்டிருந்த நாடாகவும் அது கொண்டாடப்படுகின்றது.

கிரேக்கரின் மூதாதையரான ஹெல்லானிய இனத்தில் மாபெரும் சிந்தனையாளர்கள் உதித்திருந்தனர். மனிதனுடைய அரசியல் திறமையில் உச்சிமுதல் அடிவரையில் மட்டுமின்றி அதன் ஆழத்தையுங்கூட ஆராய்ந்துபார்த்த சிறந்த சிந்தனைச் செல்வர்களை அவர்களில் காணலாம். அவர்கள் அரசியல் கொள்கைகள் பலவற்றை வரையறுத்திருந்தனர். அக் கொள்கைகள் எக்காலத்துக்கும்—எந்நிலைமைக்கும் பொருத்தமாயிருப்பதுதான் தனிச் சிறப்பாகும். அரசியல் வாழ்க்கையின் பொது அம்சங்களைத் தீர்மானிப்பதற்கு அக் கொள்கைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஹெல்லானிய எண்ணங்கள் யாவும், அவர்களுடைய ஸ்தாபனங்களிலிருந்துதான் உருவெடுத்தன; உலகம் பூராவிலும் பரவிப் படர்ந்தும் விட்டன.

பண்டைய கிரேக்கரின் அரசியற் கருத்துக்களை உருவாக்கிய ஸ்தாபனங்கள் மூவகைப்படும்:—

(1) ஹெல்லானிய பொது ஸ்தாபனங்கள்
(2) ஸ்பார்ட்டாவின் அரசியல் அமைப்பு
(3) ஏதென்ஸின் அரசியல் அமைப்பு

## ஹெல்லானிய பொது ஸ்தாபனங்கள்

ஹெல்லானியரின் ("ஹெல்லாஸ்" என்று அழைக்கப் படுகின்றவர்கள்) பொது ஸ்தாபனங்களின் தன்மையைப் பற்றி அறிந்துகொள்ளவேண்டுமானால், நாம் கிரேக்க நாட்டின் மிகப் பழைய காலத்துச் சரித்திர வரலாற்றின் ஏடுகளைத் திருப்பவேண்டும். இந்த வரலாறு கி. மு. 700 ஆண்டுகளுக்கும் முந்தியது. கிரேக்க நாடோவெனில் மலைகளும், பள்ளத்தாக்குகளும் நிறைந்த நாடாகும். இந்தப் பூகோள அமைப்பு அவர்களுடைய பொது ஸ்தாப னங்களை உருவாக்குவதற்குப் பெரிதும் காரணமாயிருந் திருக்கிறது.

ஹெல்லானிய சமுதாயம் பூராவும் ஒரே ஏற்பாட்டின் கீழ் வந்ததல்ல. தனித்தனி 'பாளையப்பட்டு' களாக இருந்து வந்த சிறுசிறு சமூகங்களின் தொகுதியாக உருப்பெற்றதே யாகும். மலையும்—காடும்—மேடும்—பள்ளமும் அவர் களைத் தனித்தனிச் சமூகங்களாகப் பிரித்து வைத்திருந்தன.

ஒவ்வொரு சமூகமும் தனித் தனியாக இயங்கிற்று. ஒன்றுக்கொன்று சம்பந்தம் அற்று இருந்தது. இத்தகைய தனித்தனிச் சுயேச்சையான அரசியல் சமூகங்களே நகர ராஜ்யங்களாக (City states) உருவாயின. இந்த நகர ராஜ் யங்களின் பழமையான ராஜாங்க அமைப்பு **முடியாட்சியே** யாகும். "மன்னன் தெய்வாம்சப் பரம்பரையில் வந்தவன்" என்று மக்கள் நம்பிய காலமது! அரசுரிமை தந்தையிட மிருந்து மகனுக்குப் பரம்பரையாக வருவதாகும் என்ற கருத்தும் அப்பொழுது வேரூன்றியிருந்தது. "மன்னனே குரு; நீதிபதி; சேனுதிபதி" - இவ்வளவு ஆழ்ந்த நம் பிக்கை பிரதிபலிக்கின்ற ராஜாங்க அமைப்பாக முடி யாட்சி விளங்கிய காலமது!...

கி. மு. எட்டாம் நூற்றாண்டின் மத்தியில் காலம் மாறியது. முடியாட்சியின் மதிப்பு மங்கலாயிற்று.

மன்னர்களின் யதேச்சாதிகாரம் வளர்ந்ததும் அதை யெதிர்த்த பிரபுத்துவ வர்க்கத்தின் ஆதிக்கம் ஓங்கியது. இதன் விளைவாக முடியாட்சி மறைந்தது. அதிகாரத்தைக் கைப்பற்றிய பிரபுத்துவ வர்க்கம் "பிரபுத்துவ ஆட்சி" என்ற ராஜாங்க முறையைத் தோற்றுவித்தது.

கி. மு. ஏழாம் நூற்றாண்டில் இந்தப் பிரபுத்துவ ஆட்சியே, ஹெல்லானிய மரபின் முக்கியமான அரசியல் அம்சமாக விளங்கியது. ஆனால், இந்தப் பிரபுத்துவ வர்க்கத்தினர் உண்மையான அல்லது தூய அரசியல் அதிகாரத்தைச் செலுத்தினார்களென்று சொல்வதற்கில்லை. இதற்கான காரணத்தைக் காண்பதில் சிறிதுகூடச் சிரமமில்லை.

ஹெல்லானிய மக்களிடையே நிலவிநின்ற தனித் தனிச் சமூகமென்ற குறுகிய மனப்பான்மை நீடித்ததே இதற்கான முக்கியகாரணமாகும். அவர்களிடையே அரசியல் ரீதியில் சிந்திக்கும் உணர்ச்சி மிகவும் குறைந்து காணப்பட்டது; குடும்பக் கருத்தும்-குலப்பற்றுமே மேலோங்கி யிருந்தன.

ஒருவிதப் 'பட்டையக்கார' மனப்பான்மை அவர்களைப் பிடித்துக்கொண்டு விட்டது! சில குடும்பங்களே-சில குலங்களே உயர்ந்தவை எனக் கருதப்பட்டன; அவற்றின் தலைமையையே பெரிதென மதிக்கும் கருத்து நிலவியது; இந் நிலையில் இந்தப் பிரபுத்துவ ஆட்சி முறை எந்த நகர ராஜ்யத்திலும் எவ்வாறு நன்கு பரிபாலனம் செய்திருக்க முடியும்?...சமூகத்தின் சகல சமூக-பொருளாதார-அரசியல்-மத விவகாரங்களையும் இந்த ஆட்சிமுறை ஸ்தாபனமே நிர்வகித்து வந்ததென்பது உண்மையே யாயினும், இதை அரசியல் ரீதியிலான ராஜாங்கம் என்று கூறும் அளவிற்கு இதற்கு யோக்கியதை இருக்கவில்லை.

இந்தப் பிரபுத்துவ ஆட்சியின் செல்வாக்குக் குறைய ஆரம்பித்தபோதுதான் ஒரு சில செல்வந்தர்களின் கை ஓங்க ஆரம்பித்தது. முடிவில் பிரபுத்துவ ஆட்சி மறைந்தது. பணக்காரர்களின் ஒரு சிறு சுயநலக் கும்பல் அதிகாரத்தைப் பிடித்துக்கொண்டது. இந்தக் கும்பலாட்சியின் விளைவாக முறைபிறழ்ந்த ஆட்சியும் தோன்றிவிட்டது! பிரபுத்துவ வர்க்கத்தின் சீர்கேடான நிலைமைகள் - பிழைகள் - திறமையின்மை - பேராசையும் ஒருங்கே உருவெடுத்தாற்போல் ஒரு சிறு கும்பலின் யதேச்சாதிகாரம் பயங்கர சொரூபத்துடன் கிளம்பிவிட்டது! தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரனாகிவிட்டனர்! சகிக்க முடியாத மோச நிலைமையே தோன்றியது.

ஹெல்லானிய மக்கள்வாழ் நாட்டில் இருந்த ஒவ்வொரு நகரராஜ்யமும் கொடுங்கோலின் சர்வாதிகாரப் பிடியில் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தது என்றே கூறவேண்டும்! ஆயினும், ஸ்பார்ட்டாவின் நகர ராஜ்யம் மட்டும் இந்த நிலைமைக்கு மாறாகவும் - விதிவிலக்காகவும் விளங்கியது. இந்த நிலைமையில்தான் மீண்டும் முடியாட்சியைப்பற்றி மக்கள் நினைக்கலாயினர். சுயநலக்கும்பலாட்சி அல்லது யதேச்சாதிகார ஆட்சியை மக்கள் வெறுக்கத் தலைப்பட்டனர். பலாத்காரத்தை மட்டுமே நம்பியிருந்த ஆட்சிமுறைக்கு மக்களுடைய ஆதரவு இல்லாமற் போயிற்று. மதஸ்தாபனங்களும் -, சமூகஸ்தாபனங்களும் ஒருங்கே சேர்ந்துகொண்டு யதேச்சாதிகாரக் கொடுமையை எதிர்த்தனர். இவ்வளவு எதிர்ப்பையும் தாங்கமுடியாமல், கடைசியில் யதேச்சாதிகார ஆட்சியும் வீழ்ந்தது.

யதேச்சாதிகார ஆட்சியின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்த மற்றொரு அம்சத்தையும் கவனிப்போம். யதேச்சாதிகார ஆட்சி முதலில் பிரபுத்துவ வர்க்கத்தையே கொடுமைப்படுத்தியது. பின்னர், பிரஜைகள்மீதும் தன்னுடைய அடக்குமுறைப் பாணத்தைத் தொடுத்தது.

இதன் காரணமாக, தம்முடைய "பொதுப் பகைவனை" யதேச்சாதிகார ஆட்சியை ஒழிப்பதற்குப் பெரும்பாலான பொதுமக்களும் - சிறுபான்மையினரான பிரபுக்களும் ஒன்றுசேர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்தக் கூட்டு எதிர்ப்புச் சக்தியின் விளைவாக, ஹெல்லானிலிருந்து யதேச்சாதிகாரிகள் ஒருவர்பின் ஒருவராய் விரட்டியடிக்கப்பட்டனர்!

கிரேக்கருக்கு இத்தருணத்தில்தான் புதிய அரசியல் அனுபவம் ஏற்பட்டது! ஜனநாயகத்துக்கும் - சுயநலக் கும்பலாட்சிக்குமிடையே போராட்டம் எழுந்தது. பிரபுத்துவ வர்க்கமும் - பொதுஜனத் தொகுதியும் சேர்ந்ததால் யதேச்சாதிகாரம் ஒழிந்தது என்பது உண்மையே. ஆனால், இதற்குப்பின் எவ்வித ஆட்சிமுறை தோன்றியது ?...பிரபுக்களும், பிரஜைகளில் செல்வாக்குப் பெற்றவர்களும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற நினைத்தனர். தங்களுடைய பரம்பரை பாத்தியதையான ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி, பழைய மாதிரி பெருமையுடன் – சலுகையுடன் வாழவேண்டுமென்ற உணர்ச்சியுடன் பிரபுத்துவம் கிளம்பியது.

புதிய அரசியல் உணர்ச்சியின் விளைவாகத் தோன்றிய பல கருத்துக்கள் மக்கள் மனத்திலே ஆழ்ந்துவிட்டதை இவர்கள் உணரவில்லை! யதேச்சாதிகார ஆட்சியின்கொடுங்கோன்மையிலுங்கூட மக்களிடையே சுபிட்சமும், அறிவு வளர்ச்சியும், பண்பாடும் உன்னத நிலைமையில் இருந்தன என்பதை இங்கே குறிப்பிடவேண்டும். கொடுங்கோன்மையை எதிர்க்க, பொதுமக்கள் பிரபுத்துவ வர்க்கத்துடன் சேர்ந்தாலும், அவர்கள் இந்த வர்க்கத்தின், ஆட்சிக்காலத்தில், பிரபுக்கள் எப்படியெல்லாம் கேவலமாக நடந்துகொண்டார்கள், பாசாங்கு செய்தார்கள் என்பதை மறந்துவிடவில்லை. ஆகையால், இந்தப் பிரபுத்துவம்

மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற எத்தனித்தபோது தான், பொதுமக்கள் இவர்களைத் தீவிரமாக எதிர்த்தனர். இந்தப் போராட்டமே ஜனநாயகத்துக்கும் - பிரபுத்துவத் துக்கும் இடையே நடைபெற்ற போராட்டமாகும். போராட்டம் பெரும் புரட்சியாக "ஆ" வென்று எழுந் ததும், நியாயமும் பிறந்தது. இந்தப் 'போர்க்களம்'த்திலே தான் கிரேக்க சிந்தனைக்குப் புதிய தெம்பும்-தெளிவும் ஏற் பட்டன. அதன்விளைவாக, அரசியல் ஞான வளர்ச்சிக்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் தரவல்ல மிகவும் உயர்ந்த கருத்தும்பிறந்தது. அதன் எதிரொலியே ஸ்பார்ட்டாவி லும் ஏதென்ஸிலும் ஒலித்தது!

## இரண்டாம் அத்தியாயம்

# ஸ்பார்ட்டாவின் அரசியல் அமைப்பு

*இரேக்க ஞான வளர்ச்சியை உருவாக்குவதற்குக் காரணங்களாயிருந்த–படிப்படியாக வளர்ந்த ஆட்சிமுறைக் கருத்துக்களும், ஏற்பட்ட மாறுதல்களும் இதுவரை ஆராயப்பட்டன. இவ்விதப் பரிணமத்திற்கு உதவியாகவிருந்த* ஸ்பார்ட்டாவின் *அரசியல் அமைப்பைப்பற்றியும்,* ஏதென்ஸின் *அரசியல் அமைப்பைப்பற்றியும் இனி ஆராய்வோம். இவ்விரண்டு அமைப்புக்களுமே குறிப்பிடப்பட வேண்டியவையாகும்!*

*ஸ்பார்ட்டாவில் ராஜாங்கத்துக்கு ஆதாரமாயிருந்தது சமூகமேயாகும். இந்த ராஜ்ய மக்கள் கீழ்க்கண்ட வரிசையில் மூன்று வகுப்பினராக இருந்தனர் :*

1. ஸ்பார்ட்டானியர்
2. பெரியோயிகோய்
3. ஹேலாட்டுகள்

*இந்த மூவகை வர்க்கத்தினருள் ஹேலாட்டுகளே பெரும்பான்மையினராக இருந்தனர்; ஆயினும், இவர்களேதாம் சமூகத்தின் கடைநிலையில் இருந்தனர். குடியானவர்களும்–அடிமைகளும் இந்த வர்க்கத்தையே சேர்ந்தவர்களாயிருந்தனர். இவர்களின் உழைப்பாலேயே சமூகம் பூராவும் பிழைத்திருந்தது. இப்படிப்பட்டவர்களுக்

குத்தாம் எத்தகைய பிரஜா உரிமையோ அல்லது அரசியல் உரிமையோ கிடையாது!

பெரியோயிகோய் வகுப்பினர் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். அவர்களுக்கு முழுப் பிரஜா உரிமையும் இருந்தது. ஆயினும், அவர்களுக்கிருந்த பிரஜா உரிமையும் ஸ்தல ஸ்தாபன ஆட்சி சம்பந்தப்பட்ட மட்டிலுமே என்று கட்டுப்படுத்தப்பட்டதா யிருந்தது. நாட்டின் கைத்தொழில்—வர்த்தகம் பூராவும் அவர்கள் வசம் இருந்தன. ஆனல், நாட்டின் பொது அரசியல் வாழ்வில் அவர்களுக்கு அதிகமான பங்கு கிடையாது.

எனவே, ஸ்பார்ட்டாவின் அரசியல் வகுப்பினர் ஸ்பார்ட்டானிய வகுப்பினரே என்பது தனியாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது! அவர்களோவெனில் சிறுபான்மை வகுப்பினராக இருந்தனர். ஆயினும், அரசியல் அதிகாரமெல்லாம் அவர்கள்வசமே இருந்தன! தம்மிடமிருந்த அதிகாரத்தை அவர்கள் விட்டுவிடத் தயாராயில்லாதவர்களாக, அவ்வளவு அதிகார வெறி பிடித்தவர்களாயிருந்தனர். அவர்களுக்கு அரசியலில் ஈடுபட்டு அதிகாரத்தை வகிப்பதைத் தவிர வேறு ஒரு தொழிலும் கிடையாது! இந்த ஸ்பார்ட்டானிய மக்களுக்குக் கட்டுப்பாடான வாழ்க்கை முறைகளை விரிவாகவும்-தெளிவாகவும் வகுத்துக் கொடுத் தவர் லிகர்கஸ் என்று தெரியவருகிறது. அரசியல் உணர்ச்சியுள்ள ஆளப்பிறந்த சமூகம் அவர்களேதாம் என்ற எண்ணத்தை ஊட்டியவர் இவரேயாகும்! சிறிய கடமை முதல் பெரிய கடமை வரையில் அவர்களுக்குக் கடமைகளையெல்லாம் வரிசைப்படுத்திக் கொடுத்தவர் இவரேயாகும்!

குழந்தைகளுக்கு ஏழு வயது நிரம்பியவுடனேயே அவர்கள் பெற்ருேரிடமிருந்து பிரிந்துவிடுவார்கள். அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பு முழுதும் ராஜாங்கத்தைச் சேர்ந்துவிடும். கடுமையான தேகப்பயிற்சி அவர்களுக்குத்

தரப்படும். இந்தத் தேகப் பயிற்சி முறைகள் அவர்களுடைய முழு நேரத்தையும் கவர்ந்துகொள்ளும். உயர்ந்த வலிமைகொண்ட தோள்களையுடைய தேகக்கட்டு வாய்ந்தவர்களாக இருக்கும் ரீதியில் அவர்கள் வளர்க்கப்படுவார்கள். நாளடைவில் இதுவே அவர்களுக்கு ராணுவப் பயிற்சியாகி விடவேண்டும் என்பது ராஜாங்கத்தின் நோக்கமாகும். பெண்கள் பிற்காலத்தில் வீரத் தாய்மார்களாகித் திடகாத்திரமான சரீரத்தையுடைய குழந்தைகளைப் பெறவேண்டுமென்ற நோக்கத்துடன் அவர்களுக்கும் தகுந்த தேகப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஒவ்வொரு ஸ்பார்ட்டனும், வலுவான தேகக் கட்டுடன் இருக்கும் வரையிலும், பெரும்பாலும் ராணுவ வீரனாகவே இருப்பான்; உடல் தளர்ந்துவிடும்போது நீதி பரிபாலனப் பொறுப்பை ஏற்பான்; நிர்வாகத்துக்கு ஆலோசனை கூறுவதிலும் பங்குகொள்வான்.

சமூகத்துக்கு இருக்கவேண்டிய குணப் பண்புகளைப் போஷிப்பதற்காகப் பலவித ஸ்தாபனங்களும் இந்த வகுப்பாரிடையே இருந்துவந்தன. அவைகளில் மிகவும் முக்கியமானதாக விளங்கியதே அவர்களின் **பொது உணவளிப்பு முறையாகும்.** ஒவ்வொரு வயதுவந்த ஸ்பார்ட்டானிய ஆண்மகனும் தன் சகாக்களுடன் பொது உணவுச்சாலையில்தான் உணவு அருந்தவேண்டும் என்பது மீற முடியாத கடமையாக விதிக்கப்பட்டிருந்தது. பொது உணவு விடுதியில் நீதி பரிபாலகர்களின் மேற்பார்வையில் இவர்கள் யாவரும் உணவு அருந்த வேண்டும். ஆடம்பரமற்ற உணவே, எவ்வித ஏற்றத் தாழ்வுமின்றி எல்லோருக்கும் இங்கே வழங்கப்படும். ஸ்பார்ட்டானிய குடும்பங்களிலும் எவ்வித ஏற்றத் தாழ்வுக்கும் இடம் தரக்கூடாது என்ற விதிமுறையே அமுலில் இருந்தது. அவர்கள் அந்நியருடன் நெருங்கிய தொடர்பு கொள்ளக்கூடாது என்றும் விதிக்

கப்பட்டிருந்தது. அரசியல் ஸ்தாபனத்தைவிட இந்தச் சமூக அமைப்பு முறையே கிரேக்கருடைய கருத்துக்களைப் பெரும் அளவுக்கு வளர்ப்பதற்குக் காரணமாயிருந்த தெனலாம். ஆயினும், அவர்களின் அரசியல் அமைப்பு எவ்வாறிருந்தது என்பதை ஆராய்வது அவசியமாகிறது.

ஸ்பார்ட்டாவின் அரசியல் கோபுரத்தின் உச்சியில் **இருமன்னர்கள்** சிகரம்போல இருந்தனர். இந்த அம்சம் மிக முக்கியமானது என்பதைக் கவனிக்க வேண்டும். ஒருவர், மற்றவரைத் தவறு செய்ய விடாமலிருக்க வேண்டும்; ஒருவருக்கு மற்றவர் கண்காணிப்பவராக இருக்கவேண்டும்; ஒருவர் போருக்குப் போகுங்கால் மற்றவர் ராஜாங்க பரிபாலனத்தைக் கவனிப்பவராக இருக்க வேண்டுமென்ற லட்சியத்துடன் வகுக்கப்பட்ட இம்முறையை “**சமன் அரசியல் திட்டம்**” (Balanced Constitution) எனலாம்! இந்த இருமன்னர்களும் அதிகாரம்—அந்தஸ்தில் சரிநிகர் சமானமானவர்களேயவர். அடுத்த நிலையில், “**செனட்**” சபை இருந்தது. இச்சபையில் இருபது அங்கத்தினர்களிருந்தனர். அவர்கள் ஆயுள் **அங்கத்தினர்களாம்**!...மூன்றுவது நிலையில், “**பொதுச் சபை**” என்ற ஒன்றிருந்தது. இதில் எல்லா ஸ்பார்ட்டானியரும் அங்கம் வகித்தார்கள். கடைசி நிலையில், “**பஞ்சாயத்து**” இருந்தது. இது “**எப்பார்ஸ்**” (Eppors) என்று அழைக்கப்பட்டது. இதன் ஐந்து அங்கத்தினர்களும் ஆண்டுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர்.

மன்னர்களின் அந்தஸ்து உயர்ந்ததேயாயினும் அவர்களுக்கு அவ்வளவு அதிகாரம் தரப்படவில்லை! செனட் சபையே பல்வேறு நிர்வாகக் கடமைகளையும் நிறைவேற்றி வந்தது. பெரிதும் நீதிபரிபாலன வகையைச் சேர்ந்த அதிகாரத்தை இச்சபையே வகித்து வந்தது. பொதுச் சபையோவெனில் எல்லாச் சமயத்திலும் குறிப்பிடத்தக்கவாறு கூட்

டம் நடத்தியதாகச் சொல்வதற்கில்லை. எனவே, ஸ்பார்ட்டானிய அரசியல் அமைப்பு முறையின் உயிர் நாடியாக இருந்து வந்த ஸ்தாபனம் "எப்பார்ஸ்" என்று அழைக்கப்பட்ட பஞ்சாயத்து சபையேயாகும். இப்பஞ்சாயத்தே முடிவாக நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு பொதுக் கொள்கைகளை வகுத்தது. இக்காலத்தில் நாம் காண்கின்ற **மந்திரி சபைக்கு** இந்த 'எப்பார்ஸை' ஒப்பிடலாம்!

ஸ்பார்ட்டானிய ராஜாங்கம் பிரபுத்துவத் தன்மை வாய்ந்ததாகும். ஏனெனில், பொதுமக்களிடையே பெரும்பான்மையினராக இருந்த இரண்டு வகுப்பினர் அரசியல் வாழ்விலிருந்து பூரணமாக ஒதுக்கப்பட்டிருந்ததால்தான் பிரபுத்துவ வர்க்கம் அரசியல் வாழ்வில் ஆதிக்கம் செய்யக் கூடிய நிலையை அடைந்திருந்தது.

நாளடைவில், ஸ்பார்ட்டாவில் நிலப்பிரபுக்களின் எண்ணிக்கை வரவரக் குறையத் தொடங்கியது. இதன் விளைவாக, ஸ்பார்ட்டாவின் வரலாற்றுப் போக்கே மாறி விட்டது. பஞ்சாயத்தில் ஆதிக்கம் வகித்து வந்த ஆளும் வர்க்கத்தினர் சுருங்கலாயினர். ஸ்பார்ட்டானிய அரசியல் அமைப்பைக் கலப்பட ஆட்சி முறைக்கு ஒப்பிடலாம். இதில் ஓரளவு முடியாட்சியும்—ஓரளவு ஜனநாயகமும் கலந்திருந்தன. ஆயினும், இந்த ஆட்சி முறையை அதி தீவிர சுயநலக் கும்பலாட்சியென்றே சொல்ல வேண்டும்! இந்த ஆட்சி முறையைத்தான் **பிளேட்டோ, "அறிவியல் பிரபுத்துவ ஆட்சி"** (Intellectual Aristocracy) என்று கருதி, ஆதரித்தார்போலும்!

மூன்றும் அத்தியாயம்

# கிரேக்க அரசியல்ஞான வளர்ச்சியில் ஏதென்ஸின் பங்கு

ஏதென்ஸின் அரசியல் அமைப்பு, ஒவ்வொரு அம்சத்திலும், ஸ்பார்ட்டானிய முறையிலிருந்து மாறுபட்டே இருந்தது. ஸ்பார்ட்டாவில் அதிதீவிர சுயநலக் கும்பலாட்சி ராஜாங்க முறை இருந்ததென்றால். ஏதென்ஸில் அதிதீவிர ஜனநாயக ராஜாங்க முறை (Extreme Democracy) இருந்ததெனலாம்.

ஏதென்ஸில் சமூக அமைப்பு எவ்வாறு இருந்தது என்பதைப்பற்றி இங்கு அறிந்துகொள்ளவேண்டுவது அவசியமாகிறது. சமூகம் இரண்டு வர்க்கங்களாகப் பின்வருமாறு பிரிக்கப்பட்டிருந்தது.

(1) சுதந்திர புருஷர்கள்

(2) அடிமைகள்

சுதந்திர புருஷர்களிலும், பிரபுக்கள் - பாமரர்கள் என இருவகையினர் பிரிக்கப்பட்டு இருந்தனர்.

ஆரம்பத்தில் அரசியல் அதிகாரம் பூராவும் பிரபுத்துவ வர்க்கத்திடமே இருந்ததாக ஆதிவரலாறுகள் கூறுகின்றன. கி. மு. ஏழாம் நூற்றாண்டில் அங்கே பெரும் புரட்சி ஏற்பட்டது. அந்தப் புரட்சிக்குப்பின், பிரபுத்துவ வர்க்கத்தின் ஏகபோக அரசியல் ஆதிக்கம் முறிந்து வீழ்ந்தது. அரசியல் அதிகாரத்தில் பாமரர்களுக்கு ஓரளவுபங்கு

கிடைத்தது. ஆயினும் அவர்களின் சொத்துரிமை அடிப் படையிலேயே அவர்களுக்கு அதிகாரத்தில் பங்குதரப்பட் டது என்பதை முக்கியமாகக் கவனிக்கவேண்டும்! பதவிக் கான தகுதி, வருமான அடிப்படையில் தீர்மானிக்கப் பட்டது. சமூகம் நான்கு தரங்களாகப் பிரிக்கப்பட்டது. அவரவர் வருமானத்தைக்கொண்டு நான்கு அந்தஸ்துகள் அமைந்தன. அதிக வருமானத்தைப் பெற்றவர்களே உயர்ந்த பதவிகளைப் பெறமுடியும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. கடைசிநிலையில் இருந்த குறைந்த வருமானக்காரர்கள் உயர்ந்த பதவிகளுக்கு வர முடியாது என்ற விதியும் செய்யப்பட்டது. ஆயினும், பிரபுக்கள் பாமரர்கள் ஆகிய இரு சாராருக்குமே அரசியல் சமத்து வம் அளிக்கப்பட்டது. என்பது குறிப்பிடத்தக்கது. ஏதென்ஸின் ராஜீய வாழ்வில் இம்மாதிரியான அரசியல் சீர்திருத்தங்களை வகுத்தவர் **ஸோலன்** என்று தெரிய வருகிறது. ஸ்பார்ட்டாவின் பெரியோயிகோய்களுக்கு (ஏதென்ஸின் பாமரர்களை ஒத்தவர்கள்) அரசியலில், பிர புக்களுடன் சமத்துவமாக இருக்க அதிகாரமோ அல்லது உரிமையோ அளிக்கப்படவில்லை என்பதை இங்கு குறிப் பிடவேண்டும்!

ஏதென்ஸின் அரசியல் அமைப்பின் இறுதிநிலையில் பின்கண்ட அம்சங்கள் காணப்பட்டன:

**பிரஜைகளின் பொதுச்சபை** நடுநாயகமாக அமைந்திருந் தது. ராஜாங்கத்தின் உயர்ந்த அரசியல் ஸ்தாபனம் இதுவேயாகும். அதன் முன், ஆலோசனைக்கு வரும் எல்லா விஷயங்களிலும் முடிவான தீர்ப்பைக் கூறும் அதிகாரம் அதனிடமே இருந்தது.

**செனட்சபை** ஐந்நூறு அங்கத்தினர்களைக் கொண்ட டதாகும். ராணுவ விவகாரங்களைத் தவிர மற்ற எல்லா "ஸிவில்" அதிகாரங்களையும் இச்சபையே நிர்

வகித்து வந்தது. பொதுச்சபையிலிருந்து இத் தனிச் சபைக்கு அங்கத்தினர்கள் "திருவுளச் சீட்டு" முறை அல்லது சீட்டுக் குலுக்கி யெடுக்கும் முறை வழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றொரு கடமையையும் இத் தனிச் சபை நிறைவேற்றி வந்தது. பொதுச் சபைக்கு முன் வரவேண்டிய விஷயங்களின் அட்டவணையைத் தயாரிக்கும் பொறுப்பை இத்தனிச்சபையே கவனித்து வந்தது.

ராணுவ விவகாரங்களையும் - ராஜதந்திர நடவடிக்கைகளையும் தளபதிகள் கவனித்துவந்தனர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட "போர்டு" ஒன்றின் அங்கத்தினர்களாகவிருந்து இந்தக் காரியங்களை தளபதிகள் கவனித்து வந்தனர்.

நீதிபரிபாலன அதிகாரம் "சிகார்டெரீஸ்" (Sikarteris) என்ற பொதுஜன நீதிமன்றங்களின் வசமிருந்தது. இப் பொதுஜன நீதிமன்றங்கள் தேர்வு முறைமூலம் வந்தவை என்பது குறிப்பிடத்தக்கவை! பொதுச்சபையிலிருந்து 5000 பிரஜைகள், சீட்டுக் குலுக்கிப் போடும் முறையில் பொறுக்கியெடுக்கப்படுவார்கள். இந்த 5000 பேரும் தனித்தனிக் குழுக்களாகப் பிரிக்கப்படுவார்கள்; எல்லா முக்கிய நீதிபரிபாலன விவகாரங்களும் இப்படிப்பட்ட குழுக்களிடமே ஒப்படைக்கப்பட்டன. இக்குழுக்களே "சிகார்டெரீஸ்" என்று அழைக்கப்பட்டன; இதற்குப் "பிரஜா நீதி மன்றங்கள்" என்று பொருள் ஆகும்.

ஏதென்ஸின் அரசியல் அமைப்பின்கீழ் ஒவ்வொரு அரசியல்அதிகாரத்திலும்ஒவ்வொருபிரஜைக்கும் ஏதாவதொரு வகையில்சமவாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது.அங்கே பிரஜா உரிமையுள்ள அனைவரும் ஜனநாயகத்தை அனுபவித்து வந்தனர். ஆனாலும் இந்த நூற்றாண்டின் ஜனநாயகக் கண்

ணோட்டத்தின்படி, ஏதென்ஸின் ஜனநாயகத்தை மதிப் பிடும்போது அதை ஜனநாயகம் என்றே அழைக்க முடி யாது! ஏதென்ஸிலே அந்நாளில் சமூகத்தில் பெரும் பான்மையினராகவிருந்த அடிமைகளுக்கும்-அந்நிய நாட்ட வருக்கும் எவ்வித அரசியல் உரிமையும் தரப்படாதிருந்த போது அங்கே நிலவியிருந்த அரசியல் அமைப்பை எப்படி ஜனநாயக அமைப்பு என்று அழைக்கமுடியும்?

ஆயினும், பண்டைய கிரேக்கரின் அரசியல் கருத்துக் களும்—அவைகளின் காரணமாக மாறி மாறி எழுந்த அர சியல் ஸ்தாபன முறைகளும் குறிப்பாக, ஸ்பார்ட்டா—ஏதென்ஸ் நகர ராஜ்யங்களில் நிலவி நின்ற ராஜாங்க முறைகளும் அரசியல் ஞான வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளன என்பதை எவரும் மறுக்க முடியாது.

தான் வாழும் காலத்திய சூழ்நிலையும், பண்டைநாளில் தனது மூதாதையர் ஆற்றிய வீர தீரச் செயல்களின் ஐதீ கங்களும், அவர்கள் சிந்தனையில் தோன்றிய எண்ணங் களும், அக்காலச் சூழ்நிலையில் தோன்றிய ஸ்தாபனங்களும், பழக்க வழக்கங்களும், தோன்றி மறைந்த ராஜாங்கங் களும்—இவை யாவும் சேர்ந்துதான் ஒரு சிந்தனையாளனின் கருத்துக்களை உருவகப்படுத்துகின்றன என்பதை 'அரிஸ் டாட்டிலின் ஆட்சிக் கலை'யைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புவோர் அனைவரும் நன்முகப் புரிந்து கொள்ள வேண்டும். கிரேக்க மண்ணில் பிறந்து, அத்தாய் ஊட் டிய ஞானப் பாலைப்பருகி வளர்ந்த அரிஸ்டாட்டிலின் சிந்தனை வளர்ச்சிக்கு, அம் மண்வாடையே அதிகச் சத் துள்ள எருவாகப் பயன்பட்டிருக்கிறது என்பதைப் படிப் போர் மறந்துவிடக் கூடாது! இந்தத் திருஷ்டியில்தான் அரிஸ்டாட்டிலைப் பற்றிப் படிக்கவேண்டும்.

## நான்காம் அத்தியாயம்

# அரிஸ்டாட்டிலின் காலமும் வாழ்க்கை வரலாறும்

(கி. மு. 384—322)

அரிஸ்டாட்டில், அரசியல் அறிஞர் மட்டுமல்ல; பௌதிகம், இயற்கை இயல், தத்துவஞானம் முதலிய உயரிய சாத்திரங்களுக்கும் வழிகாட்டியவர்; அவர், கிரேக்க ஞானியான **பிளேட்டோ** காலத்தவர்; அந்தத் தத்துவ மேலோனின் ஞானப்புதல்வர். பிளேட்டோவிடம் குருகுலவாசம் செய்தவராயினும், அரிஸ்டாட்டில், தமது குருநாதனின் கருத்துக்கள் அனைத்தையும் அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை. பிளேட்டோவின் கருத்துக்களுக்கு மாறுபட்ட பல கருத்துக்களை மிகத் துணிவுடன் தெளிவுற எடுத்துரைத்த மெய்ஞ்ஞானியாவார் அரிஸ்டாட்டில்.

அரிஸ்டாட்டில், கி. மு. 384-ல், கிரீஸ் தேசத்தில், சால்ஸ்டைஸ் தீபகற்பத்தின் வடகிழக்குக் கடற்கரையில் உள்ள **ஸ்டாகிரா** எனப்படும் சிறிய நகரில் பிறந்தார். இந்த நகரம் இப்போது **ஸ்டாவ்ரோ** என்று அழைக்கப்படுகிறது. அவரது தந்தை நிகோமாக்கஸ் (Nicomachus) ஒரு பிரபல வைத்தியராயிருந்தார். மாஸிடோனிய மன்னன் **அமின்டாஸின்** அருமை நண்பராகவுமிருந்தார். அவருடைய அன்னையின் பெயர் **பெயஸ்டிஸ்** எனப்படும்.

அரிஸ்டாட்டில் தமது இளம்பிராயத்திலேயே ராஜ குடும்பத்துடன் நெருக்கமான உறவு கொண்டிருந்தார். தமது இளம்பருவத்திலேயே அவர் தம் பெற்றோர்களை இழந்துவிட்டார். அதனால் அவர் **பிராக்ஸெனிஸ்** என்ற உற வினர் ஒருவர் வீட்டில் சில காலம் வளர்ந்துவர நேர்ந்தது. தமது பதினெட்டாவது வயதில், அரிஸ்டாட்டில் ஏதென்ஸில் இருந்த பிளேட்டோவின் குருகுலத்தில் சேர்ந்தார். அறிவுச்சுடர் வீசி நின்ற-பண்பு மிகுந்திருந்த அந்தக் குருகுலத்தில்தான் அரிஸ்டாட்டில் ஞானக்கண் பெற்றார் என்றாலும் மிகையில்லை! அங்கே, அவர் இருபது ஆண்டுகாலம் பயின்றார். பிளேட்டோவின் சித்தாந்தம் அவருக்கு வழிகாட்டியாக அமைந்ததற்குக் காரணம் அவருடைய இந்த நீண்டகால குருகுல வாசமேயாகும். இந்த இருபது ஆண்டு காலமும் அவர் வெறும் மாணவராக மட்டும் தமது காலத்தைக் கழிக்கவில்லை! அக்காலத்தில் கிரேக்க நாட்டின் கல்விக் கழகங்கள், வெறும் எழுத்தறிவூட்டும் பள்ளிக்கூடங்களாக மட்டும் இருக்கவில்லை: சமுதாய நல உணர்ச்சியும், அடிப்படைக் கருத்தொற்றுமையும், சீரிய லட்சியநோக்கும் கொண்டவர்களின் ஆராய்ச்சிசாலைகளாகவும் அவை புகழ் பெற்று விளங்கின என்று அறிகிறோம். உதாரணமாக, பிளேட்டோவின் குருகுலத்தையே எடுத்துக்கொள்வோம். இங்கே பலர், பிளேட்டோவின் சீடர்களாக அவரிடம் பாடம் கேட்டறிந்தனர்; பலவிஷயங்களை ஆராய்ச்சி செய்தனர். அவர்கள் எல்லோரும் கற்றுக்கொண்ட இயற்கை விஞ்ஞான அறிவியல் துறையிலே, அரிஸ்டாட்டில் அவர்களையெல்லாம் காட்டிலும் அதிக தூரம் முன்னேறியிருந்தார். சீரிய சிந்தனைச் செல்வர்களையும், நிபுணர்களையும், மாமேதைகளையும் அந்தக் காலத்துக் கிரேக்க நாட்டுக் கல்விக் கழகங்கள் தோற்றுவித்தன என்றும் அறிகிறோம்.

கி.மு. 348-7ல், பிளேட்டோவுக்குப் பின், **ஸ்பியூஸிப்பஸ்** (Speusippus) என்பவர், பிளேட்டோவின் குருகுலத்தின்

அத்யட்சகராக வந்தார். அவர் காலத்தில்தான், அரிஸ் டாட்டில் அந்தக் குருகுலத்தைவிட்டு வெளியேறினார். ஸ்பி யூஸிப்பஸ் காலத்தில், குருகுலத்தில் தத்துவ ஞானத்திற்கு இருந்து வந்த முக்கியத்துவத்தைக் குறைத்து, கணித சாஸ் திரத்துக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டபோது, அரிஸ் டாட்டில் இதை வன்மையாகக் கண்டித்தார். அவருக்கு அங்கே தொடர்ந்து இருக்க மனமில்லை. தவிரவும் ஏதென் ஸில் மாஸிடோனியர் மீது வெறுப்பு அதிகரித்தது. அரிஸ் டாட்டிலுக்கு இச் சம்பவம்அதிக வருத்தத்தைத் தந்தது. அந்நிலையில்தான், அவரது குருகுலத் தோழனும், **மைஸியா வின்** சிற்றரசனுமான **ஹெர்மியஸ்** என்போன், அவரைத் தன் ஊருக்கு வந்துவிடுமாறு அழைத்தான். அரிஸ்டாட்டி லும் அங்கே சென்றார். அங்குதான் அவர், ஹெர்மியஸின் ஸ்வீகாரப் புதல்வியாகிய **பைதியாஸை** மணந்தார். ஒரு பெண் மகவைப் பெற்றுவிட்டு அவள் சிறிது காலத்திற் குள்ளேயே இறந்துவிட்டாள். மீண்டும் அவர், இரண்டாம் முறையாக, **ஹெர்பில்லிஸ்** என்பவளைத் தமது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். ஆனால், அவர்களுடைய தாம்பத்யம் சட்டப்படி ஏற்பட்டதல்ல !... அவள் மூலம் அவர் பெற்ற மகனே, **நிக்கோமாக்கஸ்** என்ற பெயருடன் விளங்கிய வராவார்.

அரிஸ்டாட்டில், பின்பு **மிடிலீனில்** குடியேறினார். தாம், முன்பு வசித்து வந்த **அஸ்ஸாஸிலும்**, மிடிலீனிலும் அவர், உயிரியல் ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். தமது இயற்கையியல் நூலில் இதைப்பற்றி அவர் அடிக் கடி குறிப்பிடுவதைக் காணலாம்.

கி. மு. 343-2ல் மாஸிடோனிய மன்னன் **பிலிப்**, அரிஸ் டாட்டிலை, தனது மகன் அலெக்ஸாந்தருக்கு ஆசிரியராக இருக்குமாறு அழைத்தான். அரிஸ்டாட்டிலும் இந்தப் பதவியை மிக மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

அலெக்ஸாந்தருக்கோ வயது பதின்மூன்றுதான். கிரேக்க இலக்கியத்தைப் பற்றித் தனது குமாரன் நன்றாகத்தெரிந்து கொள்ளவேண்டும் என்பதே மன்னன் பிலிப்பின் விருப்பமாகும். அதற்காகவே, அவன் அரிஸ்டாட்டிலைத் தன் மகனுடைய ஆசிரியராக நியமித்தான். ஆனால், அரிஸ்டாட்டிலோ இந்த வாய்ப்பை வேறு விதமாகப் பயன்படுத்திக் கொண்டார். அலெக்ஸாந்தரை ஆட்சிக் கலையில் தேர்ந்தவனாக ஆக்கிவிடவேண்டும் என்பதே அவருடைய பேரவாவாக இருந்தது. அதனால், அவர் இளவரசன் அலெக்ஸாந்தருக்கு மன்னரின் கடமைகள்—ஆட்சிக் கலையின் சிறப்புகளைப் பற்றி நன்கு புகட்டினார்.

"முடியரசு", "காலனிகள்" எனப்படும் அவரது ஒப்பற்ற நூல்கள் அலெக்ஸாந்தருக்காகவே அவரால் இயற்றப்பெற்றன. அத்தோடு அவருடைய ஆர்வம் நின்றுவிடவில்லை. அரசியல் திட்டங்களின் தொகுப்பொன்றை, அலெக்ஸாந்தருடன் இருக்கும்போதே, தயாரித்துவிடவேண்டுமென்று அவர் திட்டமிட்டார்.

கி. மு. 340ல் அலெக்ஸாந்தர், மன்னரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டான். அத்துடன், அவனுடைய குருகுல வாசமும் முடிவுற்றது. ஆயினும், கிரேக்க அரசியல் வாழ்வில் அரிஸ்டாட்டிலுக்கு இருந்த செல்வாக்கு அதன் பிறகும் நீடித்தது என்றே சொல்லவேண்டும். அலெக்ஸாந்தரும் அவரிடம் மிகுந்த அன்பும், மரியாதையும் காட்டினன். மன்னன் பிலிப்போவெனில் அவருடைய ஆழ்ந்த ஞானத்தில் லயித்திருந்தான். ஆண்டிபேட்டர் என்போன் அரிஸ்டாட்டிலின் உற்ற நண்பன்; கிரேக்க அரசியலில் உன்னத ஸ்தானத்தை வகித்து வந்தவன்; அலெக்ஸாந்தரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன்; அதனால், அவன் ஆசியாவில் ராஜப் பிரதிநிதியாக அமர்த்தப்பட்டான்.

கி. மு. 335-4ல் - பிலிப் மன்னனின் மரணத்திற்குப் பின், அரிஸ்டாட்டில் ஏதென்ஸுக்கு வந்தார். அந்த அழகிய நகரத்துக்கு வெளியில், ஒரு குரு குலத்தைத் தொடங்கினார். அங்கிருந்துதான், அவர் பல ஆராய்ச்சி நூல்களை உலகினுக்கே தந்தார். தினந்தோறும், அவர் காலை வேளையில் தமது சீடர்களுடன் உலாவப் போவார். அப்பொழுது அவர்களுக்கு அரிய தத்துவங்களைப்பற்றியெல்லாம் எடுத்தோதுவார் ; மாலை வேளைகளிலோ, குரு குலத்தில் அவர் எளிய பாடங்களை ஏராளமான பேர்களுக்குப் போதிப்பார். தர்க்க சாத்திரம், பௌதிகம், தத்துவ ஞானம், வியாகரணம், அரசியல் முதலியன அவருடைய தினசரி போதனைத் திட்டத்தில் இடம் பெற்றிருந்தன.

அரிஸ்டாட்டில் ஏராளமான சுவடிகளையும் திரட்டலானார். பூகோளப் படங்களைச் சேகரித்து வந்தார். பிற்காலப் பெரிய நூலகங்களுக்கு அவரே விடிவெள்ளியாக இருந்தாரென்றே கூறவேண்டும். அதுமட்டுமா? இயற்கையியல், விஞ்ஞானம் முதலியவற்றைப் போதிப்பதற்கு உதவவல்ல பலபொருள்கள் - கருவிகளின் காட்சிசாலை ஒன்றை அவர் உருவாக்கினார். இக் காட்சிசாலைக்குரிய அல்லது ஏற்ற பொருள்களைச் சேகரிக்க அவருடன் அலெக்ஸாந்தரும் நெருங்கி ஒத்துழைத்தான். அரிய விஞ்ஞானப்பொருள்களை அவ்வப்போது அரிஸ்டாட்டிலுக்குச் சேகரித்துத் தந்துகொண்டிருக்குமாறு அவன் வேடர்கள், மீனவர்கள், குறவர்கள் முதலியோருக்குக் கட்டளையிட்டான். அவனே எண்ணூறு அரிய பொருட்களை அவருக்குத் தேடித் தந்தான்.

அவரது குருகுலமே அவருடைய ஆராய்ச்சி நிலையம் ; பரிசோதனைக் கேந்திரம். விஞ்ஞான ஆராய்ச்சியோடு மட்டும் அவர் நின்றுவிடவில்லை. ஆட்சிக்கலையைப் பற்றி, அங்கே அவர் தீவிரமாக ஆராய்ச்சி செய்யலானார். ஒரு

மாதிரித் திட்டத்தின்கீழ்,பத்து நாட்களுக்கு ஒரு மாணவன் வீதம், குருகுல நிர்வாகத்தை நடத்தி வருமாறு செய்தார். மாதமொரு விவாத அரங்குக்கு ஏற்பாடு செய்தார். இவ் விதமாக அவருடைய குருகுல அத்யட்சகர் 'ஆட்சி' நடை பெற்றது. இக்காலத்தில் அவர் தயாரித்த குறிப்புக்களே அவருடைய பலதுறை நூல்களாகும். மேலும், அவர் பல சாத்திரங்களைப் பாகுபடுத்தி ஒழுங்குபடுத்தி அமைத் தார். அவருக்கு முன், தர்க்க சாத்திரம் முறைப்படுத்தப் பட்ட சாத்திரமாக இருக்கவில்லை! அவருடைய குருகுலம் ஒரு லட்சிய கேந்திரமாகவே விளங்கியது. அங்கே கமழ்ந்த லட்சியவாத மணமும், அது எழுப்பிய அரசியல் உணர்ச்சி யும், அது காட்டிய வழியும் - இவை யாவுமே, அன்றாட இகலோக வாழ்க்கையைச் செம்மையாக உருவாக்கும் தன்மை வாய்ந்தவையாக இருந்தன.

கி. மு. 323 ல் அலெக்ஸாந்தர் காலமானான். அவனுக் குப்பின், மாஸிடோனியரை எதிர்க்கும் கிளர்ச்சி ஏதென் ஸில் தலைதூக்கியது. இக்கிளர்ச்சி வலுக்கவே, அரிஸ் டாட்டில், தமது குருகுலத்தை **தியோபிரேஸ்டஸ்** வசம் ஒப்புவித்துவிட்டு, **சால்ஸிஸிற்குச்** சென்றுவிட்டார். இங்கே தான் அவர் தமது கடைசிக் காலத்தைக் கழித்தார். கி. மு. 322-ல் அவர் உயிர்துறந்தார்.

அவர் விட்டுப்போன உயிலைப்பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். அவரது நன்றியறிவுக்கும் அன்புக்கும் அது எடுத்துக்காட்டாகும். தமது உறவினர்களுக்கு ஜாக்கிர தையாக வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுத்திருந்தார். அடிமைகளின் விடுதலைக்கும் வழி செய்திருந்தார். அந்த உயிலில் இந்த ஏற்பாடுகளே மிக முக்கியமாக வலி யுறுத்தப்பட்டிருந்தன.

அரிஸ்டாட்டில் நகைச்சுவை படைத்தவர். பழக்க வழக்கங்களால் அவர் துறவியாகவிருக்கவில்லை. கிரேக்க

அரசியல் ஞான வளர்ச்சிக்கு அவர் ஆற்றியுள்ள சேவை மகத்தானதாகும்; அத்துடன், இதர அறிவுத் துறைகளிலும் அவர் கண்ட ஆராய்ச்சி நிறைந்த கருத்துக்களுக்குத் தனியான முக்கியத்துவம் உண்டு.

உலக சிந்தனையாளர்களில் ஒருவராக மதிக்கப்படுகின்ற அரிஸ்டாட்டில், தலைசிறந்த இந்திய ராஜதந்திரியான கௌடில்யரின் காலத்தவரேயாவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

## அவரது நூல்களின் விவரம்:

அரிஸ்டாட்டில் ஆட்சிக்கலை பற்றியும், மனித மாண்புகளைப்பற்றியும், அரசியல் திட்டங்களைப் பற்றியும், புரட்சி பற்றியும் என்னென்ன கூறியிருக்கிறார் என்பதை ஆராய்வதே இந்நூலின் நோக்கமே யாயினும், இங்கே, இந்த கிரேக்க அறிவாளியின் பரந்த அறிவாற்றலை விளக்குகின்ற பல நூல்களைப்பற்றிக் கூறுவது பொருத்தமேயாகும். அவரோ பல துறைகளில் தமது ஆழ்ந்த கருத்துக்களை, தீவிர ஆராய்ச்சிகளுக்குப் பின் எடுத்துக் கூறியிருக்கிறார்; பல நூல்களைத் தயாரித்திருக்கிறார். அவைகளைப்பற்றி இங்கே கூறுவதால், வாசகர்களுக்கு அவருடைய நிறைந்த அறிவாற்றலைப்பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்ற உணர்ச்சியில்தான், அவருடைய பூரா நூல்களின் விவரத்தைத் தந்திருக்கிறேன்.

அரிஸ்டாட்டிலின் நூல்களை மூன்று முக்கிய வகைகளாகப் பிரிக்கலாம். முதல் தொகுதியை அவராகவே வெளியிட்டார். இரண்டாவது பகுதியில் அவரது விஞ்ஞான ஆராய்ச்சிக் குறிப்புக்களின் தொகுப்பு வருகிறது. அவருடைய விஞ்ஞான நூல்களெல்லாம் மூன்றாவது

பகுதியாக இருக்கின்றன. "அதிநியன் பொலிடியா" என்கின்ற அவரது ஆதி நூல் மூன்றும் பகுதியைச் சேர்ந்ததாகும். கி. மு. மூன்ருவது நூற்ருண்டைச் சார்ந்த இந்நூலை **டயோஜெனிஸ் லார்டியஸ்** என்பவர் தொகுத்தார். இந் நூலில் பெரும்பாலும் சம்பாஷணைகளே நிறைந்திருக்கின்றன. மேலும், "**பொலிடிகஸ்**," "**ஸோபிஸ்டிஸ்**," "**மெனிக்ஸெனஸ்**," "**ஸிம்போஸியம்**" முதலிய அவருடைய நூல்களும் சம்பாஷணை வடிவிலேயே அமைந்துள்ளன. "**கிரைலஸ்**" எனப்படும் அவரது நூலும் இதே வடிவில்தான் இருக்கிறது. ஆத்மாவைப்பற்றிய அவரது "**யூடெமஸ்**" என்கிற நூலும் ஆத்மீக விசாரணையைச் சம்பாஷணை மூலமே செய்கிறது. "**பிராட்ரெப்டிகஸ்**" என்ற அவருடைய, தத்துவார்த்த ஞானத்தை விளக்குகின்ற நூல் பிரசங்க வடிவில் இருக்கிறது. இம் முறையைப் பின்பற்றியே பிற்காலத்தில் வாழ்ந்த **ஐயாம்பிளிகஸ், ஸெஸிரோ** முதலானோர் தத்துவ நூல்களை எழுதினர்கள். அரிஸ்டாட்டில் பின்னுளில் தான் தமது "**தத்துவ தரிசனம்**" என்ற வேதாந்த நூலை எழுதினர். அந்நூல் மூலம் அவர், "உலகம் அழிவற்றது" என்பதை நிலைநாட்ட முனைந்திருக்கிருர்! அதே காலத்தில் தான் அவருடைய "**தத்துவ**" நூலும் (Metaphysics) இயற்றப்பட்டது.

மாஸிடோனிய மன்னனுடன் இருந்த காலத்தில், அவர், அலெக்ஸாந்தருக்காக, "**அலெக்ஸாந்தர் அல்லது காலனி வாதிகள்**" என்ற நூலை முறைப்படுத்தி எழுதினர். "**முடியரசு**" பற்றிய நூலொன்றையும் அவர் மிகத் திறமையுடன் எழுதியிருக்கிருர். நீதி, கவிகள், செல்வம், பிரார்த்தனை, நற்குடிப் பிறப்பு, கல்வி, ஆனந்தம் இவைகளைப் பற்றியும் அவர் விளக்கியிருக்கிருர். "**நெரிந்தஸ்**," "**ஈரோடிகஸ்**" என்ற பெயர்களில் அவர் சில நூல்களையும் இயற்றியிருப்பதாக நாம் அறிகிருேம். அந்த நூல்களின் வெறும் பெயர்கள் மட்டுமே கிடைத்துள்ளன!

அவர் பல கவிதைகளையும் எழுதியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அவைகளில் மூன்றே மூன்று கவிதைகளே கிடைத்துள்ளன !

அவர் எழுதியதாகச் சொல்லப்படும் இருநூறு நூல்களின் பெயர்கள், மூன்று பழைய ஜாபிதாக்களில் காணப்படுகின்றன. கி. மு. ஆறும் நூற்றாண்டிலிருந்து வளர்ந்து வரும் தர்க்க சாத்திரத்தைப்பற்றிய அவரது சில நூல்கள் கிடைத்துள்ளன. "**ஆர்கானன்**" என்கிற அவரது நூல் சிந்தனைக் கருவியைப் பற்றியதாகும். "**டி இண்டர் பிரடேஷனே**" என்கின்ற நூல், அரிஸ்டாட்டிலால் எழுதப்பட்ட நூலன்று என்று சிலர் சந்தேகப்பட்ட போதிலும், அந்த நூலின் நடையும், இலக்கண அமைப்பும் அவருடையது போலவே இருக்கின்றன. "**பிரயர்,**" "**போஸ்டீரியர் அனலிடிக்ஸ்,**" "**டாபிக்ஸ்,**" "**ஸொபிஸ்டிக் எலெஞ்சி**" முதலியன அவரது நூல்களேயாகும்.

அவரது பௌதிக நூல் வரிசையில், "**பிஸிக்ஸ்**", "**டி கேயிலோ**", "**டி ஜெனரேஷன்-எட்-கரப்ஷனே**", "**மீடிரியாலாஜிகா**" முதலியன உள்ளன. பௌதிகத்தை அவர் இரண்டு பிரிவுகளாகத் தொகுத்தாரென்று தெரியவருகிறது. இவ்வரிசையில் உள்ள அவரது முதல் நான்கு புத்தகங்களை அவரே, "**பௌதிகம் அல்லது இயற்கை**"யைப் பற்றிய நூல்களென அழைக்கிறார். அவரது 5, 6, 8-வது நூல்கள் '**இயக்கவியல்**' பற்றியதாம். அவரது 7-வது நூலை, வெறும் பூர்வாங்கக் குறிப்புகளின் தொகுப்பென **யூடெமஸ்** என்பவர் சாதிக்கிறார். அவரது 4-வது நூலான "மீடிரியா லாஜிகா" '**வானவியலை**'ப்பற்றியதாகும்.

அடுத்ததாக அவருடைய மனோதத்துவ நூல்களைக் குறிப்பிடவேண்டும். "**டி ஆனிமா**", "**பர்வா நேசுராலியா**" என்ற தொகுப்பு நூல்களில் அவர் மனித சுபாவங்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்திருக்கிறார்.

இயற்கை வரலாற்றைப்பற்றியும் அவர் நன்கு ஆராய்ந்து எழுதியிருக்கிறார். "ஹிஸ்டாரியா அனிமாலியம்" என்ற தொகுதியில், 7, 8, 21-30, 9, இந்நூல்கள் அவரால் சுயமாக எழுதப்பட்டவையல்ல. பல விவரங்கள்-தகவல் களின் திரட்டாகவே இவை இருக்கின்றன. விஞ்ஞானத் தத்துவங்களை விளக்குகின்ற அவருடைய பிந்தைய நூல் களுக்கு, இத் தகவல்களும், விவரங்களும் பெரிதும் அவருக்கு உதவியாயிருக்கின்றன. "டி பார்டிபஸ் அனிமா லியம்" என்ற நூலில் அவர், உயிரியல் தத்துவத்திற்குப் பீடிகை போட்டிருக்கிறார். "டி மோடு அனி மாலியம்" என்கிற நூல், அவர் பெயராலிருக்கும் போலி நூலாகும் என்று கருதப்படுகிறது! ஆனாலும், இந்த நூலின் நடையும் அவருடைய நூல் நடையை ஒத்தேயிருக்கிறது. "டி இன்ஸெஸ்ஸுஸ் அனிமாலியம்", "டி ஜெனரேஷன் அனி மாலியம்" முதலிய நூல்கள் அவரால் இயற்றப்பட்ட வையே. தாவரங்களைப்பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதியிருப்பதாக அவரே கூறியிருக்கிறார். ஆனால் அது அழிந்தொழிந்து விட்டது!

"பிராப்ளம்ஸ்" எனப்படும் நூல் அரிஸ்டாட்டிலின் கருத்துக்களிலிருந்து பிறந்த நூலாகும். கணக்கியல், பார்வை இயல், இசை, உடற் கூறு, வைத்தியம் முதலியன பற்றிய பல விஷயங்கள் இதில் இடம்பெற்றிருக்கின்றன. மாணவர்களைப் பல கலைத்துறை ஆராய்ச்சிகளில் ஈடுபடுத் திய அரிஸ்டாட்டிலின் போதனைத் திறமையையும், தீர்க்க திருஷ்டியையுமே இவை யாவும் எடுத்துக் காட்டுகின்றன. இசைப் பிரச்னையை அவர் மிகவும் சுவாரஸ்யமாக ஆராய்ச்சி செய்திருக்கிறார்.

தத்துவஞானம்பற்றிய அவரது நூல்கள் பத்தென, ஹெசிகியஸ் என்பவரின் ஜாபிதாவிலிருந்து தெரியவரு கிறது. இவைகளில் முதலாவது நூலே அரிஸ்டாட்டில்

எழுதவில்லை எனப்படுகிறது. பாக்கி நூல்கள் யாவுமே அவரால் எழுதப்பெற்ற நூல்கள் என்றும், ஒழுங்குற அமைக்கப்பட்ட முழு நூல்களேயாகும் என்றும் கூறப் படுகிறது.

"நிகோமாக்கியன் எதிக்ஸ்", "மாக்னு மாரலியா", "யூடிமியன் எதிக்ஸ்" ஆகிய நீதி நூல்கள் யாவும் அரிஸ் டாட்டிலின் படைப்புகளேயாம். முதல்-மூன்றாவது நூல் களின் பெயர்களைக் கொண்டு, அவற்றை நிகோமாக் கஸனும், யூடிமஸனும் எழுதினார்கள் என்று கூறுவாரு முண்டு! இந்தக் கூற்றுக்கு ஆதாரமேயில்லை. இந்த இரண்டு நீதி நூல்களையும் அவ்விருவரும் தொகுத்துத் தான் வெளியிட்டனரே யொழிய, இவைகளை அவர்களே எழுதிவிடவில்லை. அப்படியிருந்தும் இந்த நூல்களின் மூல ஆசிரியர்கள் அவர்களே என்று விடாமல் வற்புறுத் திக்கொண்டிருப்பதில் அர்த்தமேயில்லை! பரிமேலழகர் நச்சினார்க்கினியர் ஆகிய உரையாசிரியர்களை திருக்குறளின் மூல ஆசிரியர்கள் என்று சொல்லுவாருமுண்டோ?...

"அரசியல்" (Politics) எனப்படும் நூல், சிறிது கூடச் சந்தேகமின்றி, அரிஸ்டாட்டிலால் எழுதப்பட்ட உயரிய ஆராய்ச்சி நூலேயாகும். அதில், தனித்தனிக் கட்டுரைகள் பல உள்ளன. 158 கிரேக்க மாகாணங்களின் அரசியல் அமைப்புகளைப்பற்றிய விவரங்களை, தமது "அரசியல் அமைப்புகள்" என்கின்ற நூலில் அரிஸ்டாட்டில் விளக்க மாக எடுத்துரைத்திருக்கிறார். ஆனால், உலகத்தின் துர திருஷ்டத்தின் காரணமாக அந்த ஒப்பற்ற நூல் காணாமற் போய்விட்டது! 1890ல் அதில் ஒரு பகுதியான, ஏதென் ஸின் அமைப்புப்பற்றிய விவரம் மட்டும் ஏட்டுச் சுவடி யாகக் கிடைத்தது.

அரிஸ்டாட்டிலின் நூல்களை யெல்லாம் முழு இலக் கியப் படைப்புகளெனக் கருதலாமா, கூடாதா என்பது

பற்றி நெடுநாளாகவே சர்ச்சை இருந்து வருகிறது. "அவைகள் எல்லாம் அவரால் அவரது மாணவர்களுக்குப் போதிப்பதற்காக மட்டும் தயாரிக்கப்பட்ட வெறும் குறிப்புக்களே" என்று ஒரு சாரார் வாதிக்கின்றனர்: "அவரது பிரசங்கங்களிலிருந்து அவருடைய மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறிப்புக்களின் தொகுப்பே அவைகள்" என்று மற்ருெரு சாரார் வாதிக்கின்றனர். ஆயினும், "அவருடைய பெரும்பாலான நூல்களில் காணப்படும் நடை, இலக்கியச் செறிவு, சொற்கட்டுக் கோப்புக்களிலிருந்து, அவையெல்லாம் வெறும் குறிப்புக்கள் அல்லவென்று புலனுகின்றது" என்று இன்னும் சிலர் வாதிக்கின்றனர். ஆனுல் ஒன்று மட்டும் திண்ணம்! அவர் தமது குருகுலப் பேருரைகளை யெல்லாம் முன்கூட்டியே ஒழுங்குப்படுத்தியும், வரிசைப்படுத்தியும் அமைப்பதில் வல்லவராக இருந்திருக்கிருர் என்றே தெரியவருகிறது! சில வேளைகளில் அவர், பேருரை நிகழ்த்தியபின், அதிலே தாம் வெளியிட்ட கருத்துக்களை யெல்லாம் தொகுத்து, வகுப்புக்கு வராத மாணவர்களுக்காகவென்று எழுதியும் வைத்திருக்கலாம்!

அரிஸ்டாட்டில் விட்டுச் சென்ற அரிய நூல்களை யெல்லாம் "**பண்டையப் பொக்கிஷங்கள்**" என்றே கூற முடியும். தமது குருநாதன் பிளேட்டோவின் "**பரலோக சித்தாந்த**" நிலையிலிருந்து அவர், "**இகலோகப் பிரத்தியட்ச வாழ்வு நிலைக்கு**" மாறிய பரிணமப் போக்கினை அவரின் நூல்களினூடே காணலாம்! வெறும் கற்பனை உலகம் தரும் இன்ப லாகிரி போதையில் ஆழ்ந்துவிட அரிஸ்டாட்டிலின் ஆராய்ச்சி மனம் விரும்பவில்லை. நேருக்கு நேர் தெரிகின்ற இயற்கையிலும்—அதன் பரிணமப் போக்கிலும், சமுதாய வரலாற்றிலும் காணப்படும் உருவான, செய்திகளிலேதான் அவர் நிறைந்த வாழ்வைக்

கண்டார். அதிலே ஊக்கமும் ஆக்கமும் கொண்டார். உலகை அவர் உலகமாகவே கண்டார்! உலகுக்கு அப்பால் அல்லாமல், அதை உலகிலேயே நின்று கண்டார்! இது தான், அரிஸ்டாட்டில் வாழ்ந்த அந்த வாழ்வின் பொருளாகும்!

## ஐந்தாம் அத்தியாயம்

# அரிஸ்டாட்டிலின் ஒழுக்கவியல்

அரிஸ்டாட்டிலைப் பொருத்தமட்டில் ஒழுக்கவியல் என்பது சமூகவியலேயாகும்; அரசியல், என்பது ஒழுக்கவியலேயாகும். இந்த அம்சத்தை நாம் நன்கு புரிந்துகொண்டால்தான், ஆட்சிக்கலையைப்பற்றிய அவரது குறிக்கோளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும்.

மனிதனுக்கு நன்மையைப் பயக்கவல்ல வழியைக் காட்டுகின்ற செயல் - தத்துவமே ஒழுக்கவியல் என்பதாகும். 'லட்சியமும், சாதனமும் ஒழுக்கமுறையைச் சார்ந்திருக்க வேண்டும்' என்பதுதான் அரிஸ்டாட்டில் வற்புறுத்தியிருக்கும் செயல் நெறியாகும்.

அவர் சமூக விஞ்ஞானத்தின் ஒரு பாகமாக ஒழுக்கவியலைக் கருதவில்லை. மனிதனின் குணவியல் ஆராய்ச்சிதான் ஒழுக்கவியல் என்பது அவருடைய அபிப்பிராயம். அரசியலை, ஒழுக்கவியல்—அரசியல் என்று தனித்தனியாகப் பிரித்துப் பார்க்க அவர் விரும்பவில்லை.

அவரது ஒழுக்கவியல் விமர்சனத்திலே தனி மனிதன், சமூகத்தின் அங்கமாகக் காட்சியளிக்கிறான். அவரது அரசியல் தத்துவ விமர்சனத்திலோ பிரஜைகளின் நல்வாழ்க்கையே ராஜாங்கத்தின் ஜீவனைக் காட்சியளிக்கிறது.

"ஒவ்வொரு கலையும், ஒவ்வொரு ஆராய்ச்சியும், ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு தேர்வும் ஏதோ ஒரு

நன்மையை நாடுவதாகவே அமைகிறது. இங்கேதான், நன்மை என்பதற்குப் பொருத்தமான இலக்கணமும் பிறக்கிறது. எல்லாப் பொருள்களும் நாடும் குறிக்கோள் எதுவோ, அதுவே நன்மையாகும்.''—இது அரிஸ்டாட்டிலின் வாக்கு. ஒழுக்கவியல்பற்றிய அவரது கொள்கையின் அடிப்படைச் சூத்திரம் இந்த வாக்கில் பிரதிபலிக்கிறது. மனிதனுக்கு எச்செயல் மூலம் நன்மை ஏற்பட முடியுமோ அச்செயல்தான் தருமச் செயல் என்று அவர் சாதிக்கிறார்.

'ஒரு செயலுக்கு ஒரு குறிக்கோளே சாத்தியமாகும்; ஆயினும், அதுவே மற்றொரு குறிக்கோளை எட்டுவதற்கான வழியாக அமையலாம். இவ்விதமாக, ஒன்றைப் பற்றியொன்று வெவ்வேறு நிலைகளில் இறுதி லட்சியத்தை அடையலாம். எனவே ஒவ்வொரு செயலுக்கும் தனியான மதிப்புண்டு' என்ற இந்தக் கூற்றை அரிஸ்டாட்டில் ஏற்க மறுக்கிறார். எல்லாச் செயல்களுக்கும் ஓரே இறுதி லட்சியம் இருப்பதாகவே அவர் நினைக்கிறார். ஒழுக்கவியல் என்பது விஞ்ஞானமல்ல. அதனால் எதையும் அறுதியிட்டுத் தீர்மானிக்க இயலாது. ஆயினும், ஒழுக்கவியலைக் கண்டிப்பான தன்மையில்லாத தத்துவ வழி என்று கூறிவிடுவதற்கில்லை. அதை அசல் விஞ்ஞானம் என்று சொல்ல முடியாதென்றாலும், அதன் செயல் போக்கைச் செயல் விஞ்ஞானம் என்று கூறுவதில் தவறில்லை! எந்தச் செயல் சிறந்த நலனை அளிக்கவல்லது என்று கூற முடியாவிட்டாலும், ஒரு குறிப்பிட்ட நிலைமையில், நாம் என்ன செய்யவேண்டும் என்பதற்கு வழிகாட்டும் தன்மை அதற்குண்டு.

ஒழுக்கவியல் தத்துவத்தின் ஆதாரக் கொள்கைகள் யாவுமே நமது நடத்தைகளின் போக்கிலேயே, தரத்திலேயே விவரமாக அடங்கியுள்ளன. இந்த நடத்தை வரிசை

யிலிருந்தே செயல்களைப் பொறுக்கியெடுத்துப் பயன்படுத்த வேண்டும். ஒழுக்கத்தின் தத்துவம் முழுதும் இத் தேர்வு முறையில்தான் இருக்கிறது. ஒழுக்க விதிகளின்பொதுக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளும் பயிற்சி மாணவனுக்கு இருக்க வேண்டும். இப் பொதுக் கோட்பாட்டை ஒரு இனத்தின் விவேகமே திரட்டுகிறது. இத் திரட்டிலிருந்து தான் முதல் கொள்கைகளை வகுத்துக்கொள்ள வேண்டும். வழி வழியாக வரும் இக் கோட்பாடுகளை ஆராய்ந்தறிந்து, ஒன்றை மற்ருென்றுடன் ஒப்பிட்டுப் பார்த்து, குறைகளை நீக்கி, சாரத்தை அறிந்துகொள்ள வேண்டும். முதலில் நமக்கு நம்பிக்கை வேண்டும்; பிறகு ஆராய்ந்தறியும் திறனை உபயோகிக்க வேண்டும். தர்க்கவாத முறையைப் பின்பற்றி உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

## மனித வாழ்க்கையின் குறிக்கோள்

தம்முடைய முந்தையரின் பல கருத்துக்களிலிருந்தே, அரிஸ்டாட்டில் மனித வாழ்க்கையின் குறிக்கோளைத் தேர்ந்தெடுக்கிருர். கிரேக்கர்களின் பேச்சு மொழியில், "**நல்ல மேதை காவலில்**" என்ற பொருள்தரும் ஒரு சொற்ருெடர் இருக்கிறது. மகிழ்ச்சியைக் குறிக்கும் பொருள் கொண்ட இச் சொற்ருெடரை அரிஸ்டாட்டிலும் குறிப்பிடுகிருர். இன்பம் என்பது ஒருவித உவகை உணர்ச்சியே யாகும்; இதற்கு நிரந்தரமான குணம் இல்லை. இதை ஒரு **விதச் செயலாகக்** கருதி, அரிஸ்டாட்டில், "**இன்பம்**" என்பதற்கு ஸ்திரத்தன்மை - ஆழம்-புனிதம் முதலியவைகளைக் கற்பிக்கிருர். இச் செயலுக்கு, இன்பத்தைத் துணைப் பொருளாகவும் ஆக்குகிருர்.

இன்ப வாழ்க்கை என்பது என்ன? பெரும்பாலோர் இன்பத்தையே விரும்புகிருர்கள்; ஆனுல், இது அடிமைகள் அல்லது மிருகங்களின் விருப்பமேயாகும்! உயர்ந்தவர்கள்

கௌரவத்தைத் தேடுகிறார்கள்; இது அரசியல் ரீதியிலான வாழ்க்கையின் நோக்கமாகும்! அரசியல் வாழ்க்கையின் குறிக்கோளே இதுதான். மற்றும் சிலர் செல்வத்தைத் தேடுகிறார்கள்; இது சாதனமேயன்றிக் குறிக்கோளல்ல. இவர்களில் எல்லாம் தலைசிறந்தவரே தவத்தைப் புரிகின்றவர்கள்!

மனிதனுக்கு நன்மையானது என்பது பரவலான நன்மையே யாகும். ஆயினும் இந்த நன்மை அவனுக்கு முடிவான நன்மையாக இருக்க வேண்டும். இதைப்பற்றிய சிந்தனை, அவனுடைய தினசரி வாழ்விற்கு உதவும் ரீதியில் இருக்க வேண்டும். 'நன்மைக்காகவே நன்மையை நாட வேண்டுமே யொழிய, வேறொன்றுக்குச் சாதனமாக இருப்பதற்கல்ல! இது தன்னிறைவு உள்ளதாகவும் அமைய வேண்டும்.'—இவ்விரண்டும் இன்பத்தின் அறிகுறிகளாகும்.

இன்பம் என்பது என்ன? மனிதனுக்கு மிகுதியான திருப்தியை அளிப்பது எது? என்று எழும் கேள்விக்குக் கிடைக்கும் பதிலிலிருந்தே இன்பம் எது என்பதைக் காண அரிஸ்டாட்டில் முற்படுகிறார். ஆனால், அந்த விசாரணையில் ஈடுபடும் அவரையே அது மற்றொரு கேள்வியில் கொண்டு போய் விட்டுவிடுகிறது! மனிதனுடைய தனியான பணி என்ன?...பிறத்தலும்—வளர்தலும் மிருகஜாதி, தாவர வர்க்கம் ஆகிய அனைத்திலுமே காணப்படுகிறது. மனிதனும் பிறக்கிறான்; வளர்கிறான்; ஆயினும், அவனுக்கு மற்றவைகளுக்கு இல்லாத தனிப்பட்ட பணியொன்று இருக்கிறது. இவனுடைய பணி, மற்றவைகளுடைய பணியைச் சேராத ஒரு தனிப்பட்ட பணியாகும். எனவே, அவனுக்கு மேன்மையான ஒரு பணிக்கேற்ற தனியான திறமையும் உண்டு. "அதற்கொரு திட்டம் அல்லது நியதி இருப்பதாக" அரிஸ்டாட்டில் கூறுகிறார். இந்தத் திட்டத்

தைப் புரிந்து கொள்ளும் "உட்-புலன்" ஒன்று உள்ளது. மனிதனுடைய உடலில் உள்ள இந்த உட்-புலனறிவின் ஜீவனே இன்பமாகும். அந்த இன்பமோவெனில் செயல் தன்மையுள்ளதாக இருக்க வேண்டும்; குணத்திற்குப் பொருந்தியிருக்க வேண்டும்; அந்தக் குணமோ நற்குண மாக அமைந்திருக்க வேண்டும்; அது உயிர் உள்ளளவும் இருக்கவேண்டும்.

நற்குணத்திலிருந்தே நற்செயல்கள் பிறக்கின்றன. இன்பம் அதற்குத் துணை வருகிறது. சுபீட்சம் அதற்குப் பூர்வாங்க நிலையாக இருக்கும். அரிஸ்டாட்டில் மற்ருெரு உண்மையையும் புறக்கணிக்கவில்லை. "வறுமையிலும் செம்மை ஒளிவீசும்", என்கிருர் அவர். குணத்திற்கேற்ற செயலாக இன்பத்தை வரையறுத்த அரிஸ்டாட்டில் குணத் தின் தன்மையைப் பற்றியும் ஆராய்கிருர்: "காவலிற் புலனை ஆட்படுத்திய மனிதனிடம், வாழ்க்கை நியதியை அனுசரித் துக் கொண்டுபோகும் ரீதியில் உள்ள விருப்பத் திறனே அக்குணத்தின் தன்மையென அவர் எடுத்துரைக்கிருர்.

## குணத்தின் நற்பண்பு

நற்குணம் எப்படி உருவாகிறது, எந்தப் பொருளில் உருவெடுக்கிறது, எந்தவிதத்தில் வெளித்தெரிகிறது என்பனபற்றி யெல்லாம் அரிஸ்டாட்டில் விவரிக்கிருர்: "நற்குணம் மனிதனுக்கு இயற்கையாக ஏற்படுவதுமல்ல; அவனுடைய சுபாவத்தில் இல்லாததுமல்ல. அதற்கான திறமையுடன் தொடங்கி, பழக்கத்திஞல் அது பக்குவ மடைகிறது. வீடுகட்டிக் கொத்தஞவது போலவும், வீணை மீட்டிப் பாடகஞவது போலவும், இதேபோன்ற பல செயல்களிஞல் குணத்தின் பல நிலைகள் உண்டாகின் றன. ஆயினும், அளவுக்கு மீறிய பழக்கமோ அல்லது குறைவான பழக்கமோ கூடாது. நடுத்தர முறையே

சாலச்சிறந்தது" என்று கூறி, ஒரு மையவழிக்கு இங்கு வித்திடுகிறார் அரிஸ்டாட்டில்!

நற்செயலைக் கண்டு மகிழ்வதும், தீச்செயலைக் கண்டு வேதனையுறுவதும் மனிதனுடைய உள்ளத்தை எடுத்துக் காண்பிக்கும் உணர்ச்சிகளேயாம். இன்பத்தை மட்டுமே நாட விரும்புவதும், வேதனையைத் தவிர்க்கவே நினைப்பதுவும் தீச்செயலுக்குத்தான் வழி செய்கின்றன; அதே சமயம், தீச்செயலிலிருந்து மனிதனைக் காப்பதுவும் வேதனையெனும் உணர்ச்சியேயாகும்! எந்த நிலையிலும், இன்பமும், துன்பமும் அனுபவிக்கும் உணர்ச்சிகளை ஒடுக்கவே கூடாது. இவ்விரண்டையும் பரிபக்குவமான அளவிற்கு அமைத்துக்கொள்வதே சிறந்த சாகஸமாகும்.

நற்செயல்களைச் செய்வதன்மூலம் நல்லவராக முடியுமா? வலியத் தோற்றுவிக்கப்படும் நற்செயல்கள் என்றும் நல்ல சுபாவத்தின் காரணமாக எழும் நற்செயல்கள் என்றும் அரிஸ்டாட்டில் நற்செயல்களைப் பாகுபடுத்திக் காட்டுகிறார். தான் நன்றே செய்வதாக உணர்ந்து நன்மை செய்யும்போதுதான் அவனைக் குணசீலன் என்று நாம் கருதுகிறோம். முழு நற்செயலுக்கு இரண்டு அம்சங்கள் உண்டு. நியாயமான செயலைப் புரிவது: அதை நல்லெண்ணத்துடன் புரிவது: இவையே அவ்விரு அம்சங்களாகும்.

திறமையைச் சரிவரப் பயன்படுத்துவதன் மூலம் வளருகின்ற மனோநிலையைச் சார்ந்ததே நற்குணமாகும். தார்மீகக் குணம் என்பது பரிபூரண நிலை ஆகாது. தார்மீக ரீதியில் குணசீலனாக இருப்பதற்கு ஒருவனுக்கு விவேகம் இருக்க வேண்டும்; அல்லது அவன் விவேகம் உள்ளவர்களைப் பின்பற்றுபவனாக இருக்க வேண்டும். குணம் அல்லது உணர்ச்சி, திறமை அல்லது மனப்பான்மை இவற்றில் ஏதாவது ஒன்று உள்ளவனாக அவன் திகழவேண்டும்.

குணசீலனுக்கு அனுபவசாத்தியமான விவேகம் இருந்தால், அத்தகையோனிடம் தார்மீகப்பண்பு முழுச்சிறப்புடன் விளங்கும்.

இத்துறையில், அரிஸ்டாட்டில் ஒரு மைய வழியை வற்புறுத்துவதின் காரணத்தை இனி ஆராய்வோம்.

அதிதீவிரநிலைகளைத் தவிர்ப்பது மனிதனுக்குப் பத்திரமானதென்பதற்காக அக்கொள்கையை அரிஸ்டாட்டில் வற்புறுத்தவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். இதற்கு மாருக இந்த மையவழியை அவர் ஒரு தத்துவமாகவே வலியுறுத்துகிருர் என்பது குறிப்பிடத்தக்கது. துறவறத்துக்கு எதிரிடையான தத்துவமாக அதை அவர் வகுத்துள்ளார் என்றே கொள்ளவேண்டும்.

குணம் சில சமயம் சிறந்து உச்சநிலையை எட்டுகிறது; சிலசமயம் தாழ்ந்து, கீழே போய்விடுகிறது. எனவே, நற்குணமும், தீக்குணமும் வெவ்வேருனவையாகும். தீக்குணத்திற்கு அதிகமாகப் பணிகிறவர்களே, அதை எதிர்க்கவும் செய்கிருர்கள்; இது இயற்கையாகும். எனவே, இப்படிப்பட்டவர்கள் தீக்குணத்தைவிட மிதத்தன்மையையே அதிகமாக எதிர்ப்பவர்கள் ஆகிருர்கள்.

## தன்னிச்சையான செயலும்—தேர்வுமுறையும்

மனிதன், அவனது செயலுக்கு எந்த நிலையில் பொறுப்பாளியாகிருன்? மனிதனுடைய தன்னிச்சையான செயல்களுக்காக அவன் ஒன்று புகழப்படுகிருன்; அல்லது இகழப்படுகிருன். நிர்ப்பந்தத்தின் விளைவாகவோ அல்லது அறியாமையிஞலோ அவன் புரியும் செயல்கள் எல்லாம் சுயேச்சையான செயல்களாகா. நிர்ப்பந்தத்தின் கீழ் ஆற்றப்படும் செயல்களில் செயலாற்றுபவனுக்கு இஷ்டபூர்வமான பங்கு கிடையாது! தடுக்க முடியாத

வெளிச் சக்தியின் உந்துதலினுல் அவன் உடல் இயங்கு கிறது; அவ்வளவுதான்! ஆபத்தில் ஆற்றப்படும் செயல் களில், தன்னிச்சையான நடவடிக்கைகளின் சாயல் உள் ளது! அத்தகைய செயல்களைக் "கலப்படச் செயல்கள்" எனலாம். அச்சத்தால் செய்யப்படும் செயல்களையும் இவ்வகையில் சேர்க்கலாம். ஆயினும், இவற்றில் மன்னிக்க முடியாத செயல்களுமுண்டு; புகழக்கூடியவையுமுண்டு. வெளித் தூண்டுதலின் விளைவாக, மகிழ்ச்சிக்காகவோ அல்லது உன்னத நோக்கங்களுக்காகவோ இயற்றப்படும் செயல்கள் யாவுமே தன்னிச்சையான செயல்களேயாம்.

தன்னிச்சையான செயலில், செயல்புரிபவனே முக்கிய மான பாத்திரமாக விளங்குகிறுன். ஏனெனில், அவனே யல்லவோ அச்செயலை, தன் விருப்பப்படியே செய்கிறுன்! அச் செயல்,சமய சந்தர்ப்பங்களை உணர்ந்து செய்யப்பட்ட செயலேயாயினும், தன்னிச்சையான செயலேயாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்களைப்பற்றி அவர் கூறு வதைக் கவனிப்போம்.

குழந்தைகள், மிருகங்கள் - இவை ஆற்றும் செயல் கள் தன்னிச்சையானவையே. ஆயினும், இச் செயல் களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்கள் என்று அழைக்க முடியாது. விருப்பம், பசி, அறிவு, ஆவல், எண்ணம்- இவற்றிலிருந்து தோன்றுகின்ற செயல்களைத் "தேர்ந் தெடுக்கப்படும் செயல்கள்" என்று மற்றவர்கள் மதிக்கி றுர்கள். ஆயினும், அரிஸ்டாட்டில் இந்தச் செயல் தேர்வை மிகத்தெளிவாக வரையறுக்கிறுர் :

1. முடியாததை விரும்பலாம்; ஆனுல் அதைத் தேர்ந்தெடுக்க முடியாது.
2. தனது சொந்தச் செயல் பலத்தால் முடியாத காரியத்தைச் செய்ய விரும்பலாம்; அதையும் தேர்ந்தெடுக்க முடியாது.

3. விருப்பம் என்பது குறிக்கோளாகும்; தேர்ந்தெடுத்தல் என்பது சாதனமாகும்.

எது ஒருவனுடைய சக்திக்கு எட்டக்கூடியது, எதைச் சாதிக்க முடியும் என்பன பற்றித் தீர யோசித்த பின்பே செயலில் இறங்க வேண்டும். சாதனத்தைப் பற்றியே சிந்தனை யிருக்கவேண்டுமேயன்றி, முடிவான குறிக்கோளைப்பற்றியல்ல! அரிஸ்டாட்டில் இதைப்பற்றிக் குறிப்பிடுவது போல,

"விருப்ப பூர்வமான நியாயத்தில் அல்லது நியாயமான விருப்பத்தில் **செயலுக்கு அடிப்படை மனிதனே!**" இந்த உண்மையை நன்கு கவனித்தே—தீர யோசித்தே, தன் சக்திக்குட்பட்ட செயலையே மனிதன் தேர்ந்தெடுக்க வேண்டும்.

"இந்த விஷயத்தில், அரிஸ்டாட்டில், தமக்கு முந்தி வாழ்ந்திருந்தவர்களைக் காட்டிலும் முற்போக்காகச் சிந்தனை செய்திருக்கிறார்." செயல் தேர்தலை அவர் சாதனமாகக் கொள்கிறார். குணத்தைச் சார்ந்த செயல்கள் எவையும் தன்னிச்சையானவையும், தேர்ந்தெடுக்கப்பட்டவையுமாகும். ஆகையால் நற்குணமும், தீக்குணமும் அவனவன் சக்திக்குட்பட்டவையே யாகும்! 'எல்லா மனிதர்களும் தத்தம் நன்மையை நாடியபோதிலும், அவர்களுக்கு எது நன்மை என்று தோன்றுகிறதோ அதற்கு அவர்கள் பொறுப்பாளிகளல்ல' என்று கூறுவாருமுண்டு. அரிஸ்டாட்டில் அப்படிக் கூறுவாருக்குப் பின்வருமாறு பதில் அளிக்கிறார் :

"மனிதன் அவனது ஒழுக்க நிலைக்குப் பொறுப்பாளியெனில், அவனுக்கு நன்மையெனத் தோன்றும் நிலைக்கும் அவனே பொறுப்பாளியாகிறான். அவன் அவ்விதம் இல்லையெனில், நற்குணம் என்பது தீயகுணத்தைவிடத் தன்னிச்சையானதெனக் கூறமுடியாது. ஒவ்வொரு மனிதனுடைய இறுதிக் குறிக்கோளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நிர்ணயமோவெனில் இயற்கையாகவோ அல்லது வேறு வழியாகவோ ஏற்பட்டதாகுமே யொழிய, தேர்ந்தெடுக்கப்பட்டதல்ல.'' அரிஸ்டாட்டில் இந்த **அரசியல் நீதியின் மூலம்,** சுதந்திர சங்கற்பக் கருத்துக்குக் கிட்டத் தட்ட பக்கத்தில் நெருங்குகிருர்! ஆனல், இக்கருத்தைப் பூர்த்தி செய்யாமல் விட்டுவிடுகிருர். தமது நற்செயல்களுக்குமட்டும் பொறுப்பேற்றுக் கொண்டு, தவறுகளைத் தட்டிக் கழிக்கும் மனிதர்களுக்குப் பதில் அளிக்கின்ற ரீதியில் அவருடைய இந்த அரசியல் நீதி அமைந்திருக்கிறதேயன்றி, சுதந்திர சங்கற்பக் கருத்தைப் பூரணமாக வலியுறுத்துவதாக அமைந்திருக்கவில்லை!

## தார்மீகக் குணங்கள்

அரிஸ்டாட்டில் இப்போது குணங்களைப்பற்றிய விவரமான ஆராய்ச்சி மூலம், தமது "நடுத்தரக் கொள்கை'' அல்லது மையவழியின் தராதரத்தை உரை கல்லில் உரைத்துப் பார்க்கப் புகுகிருர்.

குணம் என்பது, ஒருவகை உணர்ச்சியைக் கட்டுப் படுத்துவதும், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் சரியான முறையில் செயல்படுவதுமான ஒரு செயற் போக்காகும்! குணங்களைப் பின்வருமாறு பாகுபாடு செய்யலாம்:

1. பயம், மகிழ்ச்சி, கோபம் ஆகிய – "கீழ்த்தர" உணர்ச்சிகள் தோன்றும்போது மனிதனுக்கு ஏற்படுகின்ற மனப்பான்மையை யொட்டிய **மூவகைக் குணங்கள்.**

2. சமூகத்தில் செல்வத்தையும்–பதவியையும் நாடும் மனிதர்கள் சம்பந்தப்பட்ட **நான்கு வகைக் குணங்கள்.**

3. சமூகப் பழக்கத்தால் ஏற்படும் மூவகைக் குணங்கள்.

4. குணங்கள் என்றே சொல்லக்கூடாத இருவகைத் தரங்கள்:

இந்த இருவகைத் தரங்கள் சங்கற்ப நிலையைச் சார்ந்தவையல்ல. இவைகளே நடுத்தர உணர்ச்சி நிலைகளாம். ஆயினும், இவைகளில் உணர்ச்சியைக் குறிக்கின்ற சங்கற்பம் எதுவுமிருக்காது. இவைகள், "உள்ளத் தூண்டுதலால் ஏற்படுகின்ற குணங்கள்" என்று யூடிமியன் ஒழுக்கவியல் நூலில் கூறப்பட்டுள்ளது. இத் தரங்களின் அடிப்படையில்தான் மிதவாதம், நீதிமுறை இவைபற்றிய அரிஸ்டாட்டிலின் விளக்கவுரைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

அரிஸ்டாட்டில் பல லட்சியங்களை விரிவாக ஆராய்ந்திருக்கிறார். அவை ஆத்மீகச் சிறப்பைப் பெறவல்ல வாய்ப்பையும் அளித்திருக்கிறார். நடுத்தரக் கொள்கையைத் தீவிரமாக வற்புறுத்தும் போக்கில், அவர், அதரும அம்சங்களின் குறுக்கீடுகளையும் அம்பலப்படுத்தியிருக்கிறார். வீரம் அல்லது தைரியம், தன்மானம், நகைச்சுவைபற்றிய அவரது இலக்கணங்கள் பாராட்டத் தக்கனவாக உள்ளன. வீரம் அல்லது தைரியம் பற்றிய அவரது ஆராய்ச்சியுரை இணையற்றதாகும்; இலக்கியச் சுவை மிகுந்ததாகும்.

வீரம் அல்லது தைரியம்பற்றி அவர் ஆராய்வதைக் கவனிப்போம்.

எல்லாத் தீமைகளையும் கண்டு அஞ்சுவது இயற்கை தான். சில விஷயங்களில் பயம் கொள்ளுவது நியாயமே. ஆயினும், இப் பயத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வது வீரமாகாது; வறுமை, வியாதி, குடும்பத்துக்கு ஏற்படும்

அவச்சொல்—இவைகளைக் கண்டு அஞ்சக்கூடாது; ஆனால், அவற்றை அடக்கிக்கொள்வதில் தைரியமில்லை; எல்லாவற்றையும்விட, கொடுமையான பயமே மரணபயமாகும்! அப் பயத்தை விடுவதற்கே தைரியம் வேண்டும். மரணம் எனில், கடலில் விழுவது அல்லது வியாதியால் சாவது அல்ல; மிகவும் உன்னதமான மரணத்தையே அது குறிக்கிறது! போர்க்களத்தில் மரணமடைவது வீரம் அல்லது தைரியமாகும். வீரனும் பயப்படுவான்; ஆனால் அவ்வுணர்ச்சியை அவன் அடக்கிக் கொண்டுவிடுகிறான். நற்குணத்தைச் சார்ந்திடும் லட்சியத்துக்காக அவன் எப்போதும் மரணத்தைத் தழுவ முன் வருவான்; ஏனெனில் அவன், தார்மீக முறையில், லட்சியத்தை எய்த, தகுந்த சாதனத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் போது, அவனை மரணபயம் பீடிப்பதில்லை. நற்செயலின் "மேன்மை"யைச் சிந்திப்பதாலேயே அவனுக்கு இந்தச் செயல் சக்தி ஏற்படுகிறது.

இந்தத் தார்மீக வீரம் அல்லது தைரியத்தைத் தவிர வேறு ஐந்துவகை வீரங்களைப் பற்றியும் அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார்:

1. கௌரவங்களையுடைய அபாயங்களை எதிர்த்து நிற்கும் துணிவெனும் அரசியல் வீரம் அல்லது தைரியம்.

2. ராணுவப்படை வீரர்கள் தங்கள் தொழிலில் காட்டுகின்ற அனுபவ வீரம் அல்லது தைரியம்.

3. கோபம் அல்லது வேதனையிலிருந்து எழுகின்ற வீரம் அல்லது தைரியம் - இது இயற்கையானது; இந்த வீரத்தை நல்ல நோக்கத்திற்குப் பயன்படுத்தினால், இது உண்மை வீரமாக, தைரியமாகக் கருதப்படும்.

4. ஏமாற்றத்தின் விளைவாக எழுகின்ற வீரம் அல்லது தைரியம்.

5. அறியாமையினால் விளைகின்ற வீரம் அல்லது தைரியம்.

"மிதவாதம்" பற்றிய அவருடைய அபிப்பிராயங்களையும் ஆராய்வோம்:

இது இன்ப-துன்பங்களைச் சார்ந்த குணமாகும்! ஆயினும், இது இன்பத்துடன்தான் அதிகத் தொடர்பு கொண்டிருக்கிறது; மேலும், மகிழ்ச்சியை அனுபவிக்காததால் ஏற்படுகின்ற வேதனைத் தொடர்பையும் இது கொண்டிருக்கிறது. இந்நிலையில்தான் "மிதவாத"த்தின் மூலம் வெளிப்படுகின்ற நடுத்தரக் கொள்கை முறிந்து விடுவதைக் காண்கிறோம்.

தன்னடக்கத்திற்கு எதிரிடையானது தன்னடக்கமில்லாமை ஆகும்; குறைபாடு என்பது கெட்ட குணமன்று; குறைபாடு, சுபாவமான உணர்வின்மையின் விளைவால் ஏற்படுவதாகும்; துறவு என்பது, உணர்ச்சிக்குக் கீழ்படிவதல்ல: ஒரு விதி செய்துகொண்டு, அதற்குக் கட்டுப்படும் நீதியில் உணர்ச்சியை அடக்கிக் கொள்ளும் நிலையே துறவு நிலையாகும்!

## பெருந்தகை மாண்பு

தகுதியான பெருமையையோ அல்லது தன்மானத்தையோ இந்நிலை குறிக்கிறது. குணங்களுக்குள் இதற்குத் தனியான மதிப்பும் சிறப்புமுண்டு. ஒருவரை, பெருந்தகை மாண்புள்ளவர் என்று எப்போது அழைக்கிறோம்? பாசபந்தங்களையும், துறவையும் சமமாகப் பாவிப்பவரையே பெருந்தகை மாண்புள்ளவராக ஏற்போம். எந்தவிதப் புகழும் அல்லது நல்லவர் அளிக்கும்

அத்தனை கௌரவங்களுங்கூட அவருடைய அடக்கம் நிறைந்த உணர்ச்சியிலோ,வாழ்விலோ எவ்விதச் சலனத்தையும் ஏற்படுத்தா. அவர் அபாயத்தை வரவேற்பவரல்லர். ஆயினும், ஆபத்து வருங்கால் அவர் தம் உயிரையும் பொருட்படுத்தமாட்டார். தம்மிடம் நன்மையைப் பெறுகிறவர்களிடம் பரிவுகாட்டுவார். புகழைத் தேடி அவர் ஓடுபவரல்லர். ஆனாலும், உன்னதச் செயலைச் செய்யவே விரைவார். அவர் காட்டுகின்ற அன்பிலோ அல்லது அவர் கொள்ளுகின்ற பகையிலோ அல்லது அவரது சொல்லிலோ, செயலிலோ இவை எதிலுமே ரகசியமிருக்காது.

## நீதிமுறை:

நீதிமுறையை, அரிஸ்டாட்டில், இருவகைப்படுத்திக் கூறுகிறார் :

1. சட்டப்படியான நீதிமுறை.
2. எது நியாயமானதோ—சமமானதோ அந்த நீதி முறை.

கிரேக்கர்கள், பின்னுளில் நீதியெனில் தருமம் என்றனர்!

சாதாரண வழக்கில், பிரதிவாதி தனி நபருக்கே தவறு இழைக்கிறான் ; ஆனால், கடுங் குற்றச்சாட்டு வழக்கிலோ, எதிரி, நகரம் பூராவுக்குமே தவறு இழைப்பவனாக இருக்கிறான். "சட்டம் மனித வாழ்க்கை பூராவையும் பரிபாலிக்க வேண்டும்" என்கிறார் அரிஸ்டாட்டில். ஏனெனில், எல்லா மனிதரும் உன்னத நோக்கத்துக்காகவே செயல் புரிவதென்ற மன உறுதியைப் பெற்றுவிட முடியாது; சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பது மூலம் நீதிக்கு எல்லோரும் மதிப்பைத் தருவதில்லை; இந்த நீதியே நற்குணமாகும் என்ற கருத்தை எல்லோரும் கொள்வதில்லை.

ஆகவே, "குறிப்பிட்ட நீதி"யை அரிஸ்டாட்டில் முக்கியமாக வற்புறுத்துகிறார். நல்ல பொருள்களை ஒருவன் அளவுக்கு மீறி எடுத்துக் கொண்டால் அவனை, நீதிக்கு மதிப்புத் தரும் மனிதனாகப் பாவிக்க முடியாது. பேராசையே பெரும் துர்க்குணமாகும். இதைக் குறிப்பாக "அநீதி" என்று அழைக்கலாம்!

அவருடைய "குறிப்பிட்ட நீதி"யும் இருவகைப்படும்:

1. பிரஜைகளிடையே செல்வத்தையும், கௌரவத்தையும் வினியோகிக்க வழிசெய்கின்ற **வினியோக பூர்வ நீதி.**

2. மனிதருக்குள் உறவு முறைகளை ஒழுங்குபடுத்த உதவுகின்ற **சீர்திருத்த நீதி.**

மற்றொரு—மூன்றும் வகை நீதியைக் கூட, பின்னாளில் அரிஸ்டாட்டில் சேர்த்திருக்கிறார். இதை, **விகிதாசார பூர்வ நீதி** என்று அழைக்கலாம். விகிதாசாரப்படியிலான சில எண்ணிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட உறவுகளைப் பற்றியது இந்த நீதியாகும். இம்மூவகை நீதிகளும் பல்வேறு லட்சியங்களை நிலைநாட்டுகின்றன. மேலும், விகிதாசாரத்தையோ அல்லது பரஸ்பரத் தன்மையையோ பொறுத்தில்லாமல், வேறு விதங்களிலும் பல நீதி லட்சியங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன.

வினியோக பூர்வ நீதி யென்பது, கிரேக்கர்களுக்குத் தனிப்பட்டதொரு அம்சமாகும். அவர்கள், பிரஜைகளை ராஜாங்கத்தின் பங்குதாரர்களாக மதித்து வந்தனர். புது ராஜ்யத்தில் பிரஜைகளிடையே நிலத்தைப் பகிர்ந்து கொள்ளும் வழக்கம் இருந்தது. அவர்கள், ஒவ்வொருவரும் நிலத்தைப் பகிர்ந்து கொள்ளுவதற்காக எவ்வளவு முதல் போடுகிறார்களோ அந்த விகிதாசார அடிப்படையில் லாபத்தையும் அவர்களுக்குப் (பங்குதாரர்களுக்கு)

பகிர்ந்து விநியோகிக்கும் முறையை அரிஸ்டாட்டில் சிந்தித்திருக்க வேண்டும்!

சுதந்திர அந்தஸ்து, செல்வம், நற்குடிப் பிறப்பு அல்லது நற்குணத்தை அளவுகோலாகக் கொண்டு பதவிகளையும், கௌரவங்களையும் விநியோகிக்கும் அரிஸ்டாட்டிலின் " **நீதி** " அவரது " **அரசிய** "லில் முக்கியமாகத் திகழ்கிறது! " பதிலுக்குப் பதில் " பெறும் **பரிவர்த்தனை நீதி** அல்லது **வர்த்தக நீதி**யையும் அரிஸ்டாட்டில் எடுத்துக் காட்டுகிறார். இதை அவருடைய **பொருளாதார நீதி** என்று கூட அழைக்கலாம். அரிஸ்டாட்டில், அரசியலைப் போலவே, பொருளாதாரத் துறையிலும் வழிகாட்டியாக இருந்திருக்கிறார் என்பதையே இது காட்டுகிறது!

அரிஸ்டாட்டிலின் **ராஜதந்திரி**, கௌரவங்களையும், பதவிகளையும், வெகுமதிகளையும் பகிர்ந்தளிக்கிறான்; அவருடைய **நீதிபதி** நஷ்டஈடுகளைத் தீர்மானிக்கிறான்! அவருடைய **உற்பத்தியாளன்** அல்லது **விவசாயி**, நியாயவிலைக்குத் தன் பண்டங்களை விற்கிறான்! இம்மூவகை மக்கட் பிரிவினரும் நீதிமுறைப்படி நடப்பதாக அரிஸ்டாட்டில் சித்திரிக்கிறார்! அரிஸ்டாட்டில், இங்கும் தமது நடுத்தரக் கொள்கையை நிலைநாட்டத் தவறவில்லை! அநீதியாக நடப்பது, அநீதியாக நடத்தப்படுவது — இவற்றுக்கிடையில் நடுநிலையாக நடப்பதுதான் நீதியெனும் செயல் ஆகும்.

அரசியலுக்குட்பட்ட நீதியைப்பற்றியும், அரசியலுக்குப் புறம்பான நீதியைப்பற்றியும் அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார்.

சுதந்திர ராஜாங்கத்தில், சுயதேவைப் பூர்த்தியை நிலைநாட்டும் நோக்கத்துடன் சுயேச்சையாகவும், சமமான பங்குதாரர்கள் என்ற உணர்ச்சியுடனும் வாழ்ந்து வருகின்றவர்களுக்குள் இருந்துவரும் நீதியை, **அரசியலுக்**

குட்பட்ட நீதியென அரிஸ்டாட்டில் கருதுகிறார். இரண்டாவதாக, இயற்கையான நீதிக்கும் சம்பிரதாய நீதிக்கும் இடையே நடுத்தரமாக இருக்கின்ற நீதியாகும். இதற்குள் எல்லோரும் ஒப்புக்கொள்ளும் உரிமைகளும், கடமைகளும் உள்ளன. அத்துடன், ராஜாங்கம் சட்டமூலம் விதிக்கின்ற உரிமைகளும், கடமைகளும் உள்ளன.

நீதிமுறையை, சம்பிரதாயமாகக் கொள்வதை அரிஸ்டாட்டில் அடியோடு எதிர்க்கிறார்.

நீதிமுறையின் "ஜீவன்" என்னவென்பதையும் அரிஸ்டாட்டில் குறிப்பிடாமல் இருக்கவில்லை. அவர், கிரேக்க நியாயஸ்தலங்களைக் கருத்திற்கொண்டு தமது நீதிமுறைவழியை வகுத்தாரென்றாலும், அவருடைய நீதி லட்சியம் ஒழுக்கத்தைச் சார்ந்ததாகவே இருப்பதைக் காண்கிறோம். வெறும் சட்டத்தை மட்டும் அவரது நீதி முறை வற்புறுத்தவில்லை! சட்டநீதியைக் காட்டிலும், நியாயமே மேம்பட்டதென்று அவர் கருதுகிறார். "சட்டம் தவறு செய்யும் போக்கில் திருந்தியும் விடுகிறது" என்பது அவருடைய அறிவுரையாகும்!

## அறிவியல் குணங்கள்

தார்மீக குணங்களை வரையறுத்த அரிஸ்டாட்டில், அறிவியல் குணங்களையும் சித்தாந்தப் படுத்தத் தவறவில்லை.

நியாயப்படி நடப்பவனே குணவான்! குணத்திற்கேற்ப நடக்கும் ஆத்மாவின் செயலே இன்பமாகும். செயலுக்குக் கர்த்தாவான மனிதன், ஆசையும் - பகுத்தறிவும் கலந்தவன்; சத்தியம் என்பது லட்சியமாகும்; அதை நாடுவதற்குக் குணமே சாதனமாக இருக்க வேண்டும்.

நன்கு ஆலோசிக்கும் தன்மையே அனுபவ விவேகமாகும். எது நன்மை? எது தீமை என்பதைக் கண்டறிய

உதவுகின்ற உண்மையான மனோநிலையைத்தான் இந்த அனுபவ விவேகம் குறிக்கிறது. விஞ்ஞானத்தின் கோட்பாடுகளை உடனே கண்டுகொள்ளும் தன்மை சூட்சும அறிவில் அடங்கியுள்ளது. தர்க்க நியாயத்தைக்கொண்டு இந்தத் தன்மையைப் பெற்றுவிட முடியாது. சூட்சும ஞானமும், விஞ்ஞான உணர்வும் கலந்த நிலைக்குத்தான் தத்துவ விவேகம் என்று பெயர். உயர்ந்த லட்சியங்களை நோக்கி உருவாகும் இந்த நிலையின் சக்தி அற்ப சொற்பமல்ல!

நியாயமான விதி எப்படி உருவாகிறது என்பதையும் அரிஸ்டாட்டில் தெளிவாகச் சொல்லுகிறார். அனுபவத்தால் உயர்ந்த விவேகிகளின் ஆழ்ந்த ஆலோசனைகளின் விளைவாக உருவாகின்ற செயல்வழி மூலமே, மனித வாழ்க்கையின் லட்சியத்தை எய்தலாம். அதுவே சரியான விதியாகும்; அதையொட்டி நடப்பதே தார்மீகக் குணப் பண்புமாகும்!

## புலனடக்கமும், அடக்கமின்மையும்

கெட்ட விருப்பங்களுக்கு இடங்கொடாமலிருக்கும் குணப்பண்பையே மிதவாதம் குறிக்கிறது. அமித வாதமோவெனில்-உணர்ச்சி வேகத்திற்குப் பணிந்துவிடும் ஒரு தீய உணர்ச்சிப் போக்காகும்.

புலனடக்கம் என்பது, புலன்களின் கட்டுப்படாத உணர்ச்சிகளையெல்லாம் விதிக்குக் கீழ் கட்டுப்படுத்துவதாகும். உணர்ச்சி வேகம் தாங்காமல் பாசத்தாலோ அல்லது பலவீனத்தாலோ பணிந்துவிடுவதே புலன் அடக்கமின்மையாகும். புலனை அடக்க வொண்ணாதவன், தனது செயல் தீயது என்று தெரிந்தே, அச் செயலிலேயே ஈடுபடுகிறான். அரிஸ்டாட்டில் இதுபற்றிக் கூறுகையில், "புலனை அடக்க வொண்ணாதவன் அல்லது புலனடக்கமில்லாதவன்

அறிவு தவறியதன் விளைவாக, தான் அவ்வாறு நடக்கவில்லை என்பதையோ, பலவீனமான சங்கற்பத்தின் விளைவாகவே அவ்வாறு நடக்க நேரிடுகிறது என்பதையோ, அறிந்து கொள்ளவில்லை'' என்று குறிப்பிடுவதைக் கவனிக்க வேண்டும்!

## இன்பம்

புலன்கள் யாவுமே ஆரோக்கிய நிலையில் இருக்கையில், நன்மையை நாடிச் செயல் ஆற்றுகையில் ஒருவித உவகை உண்டாகிறது. அதுவே இன்ப உணர்ச்சியாகும். ஆயினும் அந்த உணர்ச்சியும் சிந்தனைக்குப் பொருந்தியிருக்க வேண்டும். சிந்தனைக்குப் பொருந்தி இருக்கின்ற அந்த உவகை உணர்ச்சியிலேதான் இன்பம் புன்னகை தவழக் காட்சி தருகிறது! எல்லா இன்பங்களும் இன்பமாக இருப்பதற்குக் காரணம், அவற்றின் நன்மை அம்சமேயாகும்; அவை இன்பங்கள் என்பதால் மட்டும் அல்ல. இதை நல்ல மனிதன் முடிவு செய்ய முடியும்!

## நட்பு

கிரேக்கரிடையே நட்புக்கு விரிவான இலக்கணம் உண்டு. 'இரண்டு பேரிடையே பரஸ்பரம் ஏற்படும் எந்தக் கவர்ச்சியும் நட்பின் வடிவமாகும்' எனக் கிரேக்கர்கள் கருதுகிறார்கள். அரிஸ்டாட்டிலின் ஒழுக்க முறை பூராவும் தனி நபரிடம் குடிகொண்டிருக்கிறது; அவருடைய நீதி முறையிலும், பிறருடைய உரிமைகளுக்கு மதிப்புத் தரும் கோட்பாடு வலியுறுத்தப்பட்டிருக்கிறது. நண்பன் ஒருவன் தன்னிடம் காட்டும் அன்பைக் காட்டிலும் அவன் அந்த நண்பனிடம் வைக்கவேண்டிய அன்பே அவசியமானது என்ற நீதியும் வகுக்கப்பட்டிருக்கிறது! "தன்னுடைய மகிழ்ச்சிக்கான சாதனமே நட்பு எனக் கொள்

வதைவிட, நட்புக்காகவே நட்பு எனக் கருதி நல்லெண்ணங் காட்டி வாழ்வதே பெருமையான வாழ்வாகும். சிறந்த வாழ்க்கைக்கு உதவிபுரியும் நட்பே மேலான நட்பாகும். இளமையில் யோசனை சொல்வான்; முதுமையில் காக்க வருவான்; வளரும் தருவாயில், உத்தமச் செயல்களைப் புரிய வாய்ப்பளித்து, சீரிய சிந்தனைக்குத் துணைபுரிவான். அவனே உத்தம நண்பன் ஆவான்.''

''நல்லவனை, நல்லவன் என்பதற்காக நேசிப்பதுதான் நட்புக்கு அடிப்படை'' என்பது அரிஸ்டாட்டிலின் துணிபு.

''தான்'' என்னும் மனோநிலை, தேக்கநிலையைக் குறிப்ப தன்று; அதற்கு மாருக, இந்த நிலை இடைவிடாமல் விரிந்துகொண்டே போகும் இயக்கத்தன்மை வாய்ந்த தாகும். தன்னுடை நண்பனையே தனது ''புறச் சொரூபம்'' என்று மனிதன் மதிக்கலாம். அல்லது தன்னில் ஒரு அங்க மாகவே கூடக் கருதலாம். இவையெல்லாம் அவனுடைய வியாபகநிலையையே குறிக்கின்றன! ஒருவனது நண்பன் அவனது வியாபகம் அல்லது விஸ்தாரமே எனலாம்! இங்கே அரிஸ்டாட்டிலின் பகுத்தறிவு பரிமளிப்பதைப் பாரீர்! மனிதனிடம் குடிகொண்டுள்ள பகுத்தறிவை மேலதிகாரம் என்றும் கருதலாம்.

## லட்சிய வாழ்க்கை

அரிஸ்டாட்டில், இதுவரை, லட்சிய வாழ்க்கைக்கான அஸ்திவாரத்தையும், பின்பு அடிக்கட்டிடத்தையும் எழுப் பியதைக் கண்டோம். இப்போது, அவர் தாம் எழுப்பிய கட்டிடத்திற்குச் சிகரம் அமைக்கப் போகிருர்! கவனியுங்கள்.

''இன்பமென்பது செயலின் வடிவமாகும். ஆனல் அந்தச் செயலோ குணத்தைச் சார்ந்த செயலாகும். ஆத்

மாவின் குணச் சிறப்புகளிலிருந்து அரும்பும் தத்துவார்த்த விவேகமும், நற்பண்புகளும் ஆகும். நன்மை பயக்கவல்ல நற்பண்புகள் ஆகும்! தவம் அல்லது ஆத்ம விசாரணைக்கு தத்துவார்த்த விவேகம் வழிசெய்யும். அதனால் ஆனந்தம் ஏற்படுகிறது. மனிதனின் திறமையை எடுத்துக் காட்டுகின்ற செயல்களில் இதுதான் தலைசிறந்த செயலாகும். இதுவே எல்லாப் பொருள்களையும்விடச் சிறந்தது; மாறுதல் அற்றது; நிலையானது. அற்புதமான தூய்மையும்—நிலைத்த தன்மையும் வாய்ந்த இன்பத்தை அடைய இது வழி செய்கிறது!

இந்த இன்பமோ அல்லது இது தரும் ஆனந்தமோ இன்பத்திற்காகவே அல்லது ஆனந்தத்திற்காகவே அனுபவிக்கப்படுகிறது.

"உடலும்,—ஞானமில்லாத ஆத்மாவும்,—பகுத்தறிவும் கலந்திருப்பவனே மனிதன்! அதனால், அவனால் இந்த லட்சிய-தவ வாழ்க்கையைக் கைப்பிடிப்பது கடினம். ஆயினும், அவனிடம் "**தெய்வாம்சம்**" குடிகொண்டிருந்தால் மட்டுமே அவனால் அம் மேம்பட்ட வாழ்வைப் பின்பற்ற முடியும்.

"ராஜ தந்திரியும், வீரனும் உன்னத வாழ்க்கையை மேற்கொண்டிருக்கலாம். ஆனால், அவ்வித வாழ்க்கையை, அவர்கள், ஒழுக்கமான வாழ்க்கையாகக் கருதுவது கூடாது. அவ்வாறு கருதுவதால் அவர்கள் மடையர்களாகி விடுவர்! லட்சிய வாழ்க்கையை மேற்கொள்ள இயலாதவர்கள், சிறிய அளவில் தம்முள் குடிகொண்டிருக்கும் சிறப்பியல்புகளைக் கொண்டு வாழ்ந்தாலே போதும்! அதுவே "நித்திய வாழ்வை"த் தொடுவது போலாகும்! அவர்களே ஆனந்தங்காணும் மனிதர்களாம்!"

இரண்டாம் பட்சமான, இன்ப வாழ்வையும் அரிஸ்டாட்டில் எடுத்துரைக்கிறார். அதை, அவர் காட்டும்

"மானுட ஆனந்த நிலை" எனக் கருதலாம்! அந்த ஆனந்த வாழ்க்கை நிலையிலும், ஒழுக்க ரீதியான வாழ்வே அமைகிறது! தார்மீகக் குணச்சிறப்பும், அனுபவ விவேகமும் கலந்த வாழ்வுச் சோலையில் மலருவது இன்பமேயன்றி வேறொன்றுமில்லை! தார்மிக மனப்பண்பே-குணப்பண்பே அறிவான செயல்களுக்கு வழி செய்கிறது; ஐம்புலன்களின் உணர்ச்சிகளையும் ஆட்கொள்ளுகின்ற தனி நபர் வாழ்க்கையிலும் இன்பம் மலர்கின்றது!

உயரிய கலைகள், மதம், விஞ்ஞானம், வேதாந்த சித்தாந்தங்கள், இயற்கைத் தத்துவம்—இவை அனைத்தையும் பற்றிய தத்துவ விசாரத்தையே லட்சிய வாழ்க்கை என்கிறார் அரிஸ்டாட்டில்.

"யூடிமியன் எதிக்ஸ்" என்ற, தொகுக்கப்பட்ட அவரது ஒழுக்கவியல் நூலில், லட்சிய வாழ்க்கைக்குப் பின்வரும் இலக்கணம் கூறப்பட்டுள்ளது :—

**"ஆண்டவனை பூஜித்துச் சிந்தனை செய்து வாழ்வதுதான் லட்சிய வாழ்க்கையாகும்!"**

## ஆறும் அத்தியாயம்

# அரிஸ்டாட்டிலின் அரசியல்

முந்தைய அத்தியாயத்தில், அரிஸ்டாட்டிலின் ஒழுக்க வியலைப்பற்றி ஓரளவு தெரிந்துகொண்டோம். இப் போது அவருடைய அரசியலைப்பற்றிய ஆராய்ச்சி தொடங்குகிறது. 'அரிஸ்டாட்டிலைப் பொறுத்தமட்டில், ஒழுக்க வியல், என்பது சமூகவியலேயாகும்; அரசியல், என்பது ஒழுக்கவியலே யாகும்' என்பதை, இந்த இடத்திலும் மனதிலிருத்திக் கொண்டாக வேண்டும். இவ்விரண்டை யும் சேர்த்தே ஆராய வேண்டியிருக்கிறது. அவரது ஆட் சிக் கலையைப்பற்றிப் பூரணமாகத் தெரிந்துகொள்ள இப் படித்தான்—இரண்டையும் சேர்த்தேதான் ஆராயவேண்டி யிருக்கிறது.

இனி, அவருடைய அரசியலைப்பற்றி ஆராய்வோம்.

அரிஸ்டாட்டிலின் அரசியல், அடிப்படையான தத்து வங்களையும்—ஒழுக்க முறைகளையும் கொண்டதாக இருப் பதைக் கவனிக்கவேண்டும். அவர் கூறும் லட்சிய வாழ்க் கைக்கு ஏற்றபடியே அது அமைந்திருக்கிறது. லட்சிய வாதத்தைப் பின்பற்றும் அவர், பிரத்தியட்ச நோக்கத் தையோ அல்லது இகலோக வாழ்க்கையின் பல்வேறு அம் சங்களையோ புறக்கணித்துவிடவில்லை என்பதையும் கவ னிக்கத் தவறக்கூடாது.

அவரது அரசியல் அல்லது ஆட்சிக்கலையைப் பற்றிய ஆராய்ச்சி விவரங்களும் — முடிவுகளும் பல புத்தகங்

VERSITY EXTENSION LIBRA

களில் எழுதப்பட்டுள்ளன. தமது ஆராய்ச்சி விவரங்களையோ அல்லது முடிவுகளையோ அவர் வரிசைப்படுத்தித் தொகுக்கவில்லை என்று கருதுவாருமுண்டு. ஆயினும் நமக்கு, இங்கு அதைப்பற்றி அக்கறையில்லை.

அரிஸ்டாட்டிலின் அரசியல் கட்டுக்கோப்பில் ஐந்து நிலைகளைக் காணலாம் :

1. குடும்பம்

ராஜாங்கத்துக்குக் குடும்பமே நாற்றங்காலாகும். அதனால் குடும்பத்தைப்பற்றிச் செவ்வனே தெரிந்துகொள்வது அவசியமாகிறது. அப்போதுதான் ராஜாங்கத்தின் அமைப்பைத் தெளிவாக ஆராய்ந்தறிந்துகொள்ள இயலும். (முதலாவது புத்தகம்).

2. லட்சிய பூர்வமான காமன்வெல்த்; அல்லது பொது நல ராஜாங்கத்தை அமைப்பது பற்றிய யோசனை. இந்த அரசியல் அமைப்புகளில் மிகவும் சிறந்தது எது என்பது பற்றிய விமர்சனம் இங்கே வருகிறது. (இரண்டாவது புத்தகம்)

3. ராஜாங்கம், பிரஜை, அரசியல் அமைப்புகளின் பாகுபாடுகள். (மூன்றாவது புத்தகம்)

4. மட்டமான அரசியல் அமைப்புகள் : (நான்காவது முதல் ஆறாவது வரையுள்ள புத்தகங்கள்)

5. லட்சியபூர்வ ராஜாங்கம். (ஏழாவது, எட்டாவது புத்தகங்கள்)

இதில் இருபகுதிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. மேலும், ஏழாவது எட்டாவது புத்தகங்கள் பழைய கொள்கைகளைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளன.

நான்கு, ஐந்து, ஆருவது புத்தகங்களோ, செயல் வழியை அதிகமாக வலியுறுத்துகின்றன. இவைகளில், லட்சியக் குரல் சற்றுக் குறைவாகவே ஒலிக்கும்! மிகவும் ஒழுக்கக் கேடுகளால் சீர்குலைந்துவிடும் ராஜாங்கத்தைக் கட்டிக் காக்கும் முறை ஐந்தாவது புத்தகத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. இப் புத்தகத்தைப் படிப்பவர்களுக்கு, அரிஸ்டாட்டிலின் 'அரசன்' மாக்கியவெல்லியின் 'அரசனு'க்கு முன்னோடிபோலவே தோற்றமளிப்பான்!

அரிஸ்டாட்டில், 158 கிரேக்க அரசியல் அமைப்பு களின் வரலாறுகளைத் தொகுத்திருக்கிருர் என்று அவரது வாழ்க்கை வரலாறுபற்றிய அத்தியாயத்திலேயே குறிப் பிடப்பட்டிருக்கிறது. நகர ராஜ்யத்தின் முழு உருவ மும் எப்படியெப்படி இருக்க வேண்டும் என்பதைப்பற் றிய விவரங்களில் அவர் கரைகண்டவர் என்றே கூற வேண்டும்! அக்காலத்தில் கிரீஸ்தேசம் பூராவிலும் நகர ராஜ்யங்களே இருந்தன. அவைகள் மூலம் எவ்வளவோ படிப்பினைகளை உலகம் அறிந்துகொண்டிருக்கிறது என்ரு லும் அது மிகையன்று. ஆயினும், அவைகளேதாம் கிரேக்க நாட்டின் ஐக்கியத்தையும், செல்வாக்கையும் அழிப் பதற்குக் காரணமாக விருந்தன என்பதையும் இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும்!

அவரது அரசியல் சித்தாந்த பூர்வமான ஆட்சிக்கலை யின் முழு அம்சமும் அடிப்படைத் தத்துவங்களின் விளை வாகவே மலர்ந்திருக்கிறது; சரித்திரத்தின் வேர்க் கால் களில் இருந்து தளிர்த்திருக்கிறது; நீதி முறையைத் தழுவி யிருக்கிறது. அவர், பகுதியைவிட முழு அம்சத்தை முக் கியமாகக்கொண்டே தமது அரசியலை நிர்ணயம் செய் திருக்கிருர். மேலும், அவருடைய லட்சியத்துடன் பொருளின் தன்மை ஒன்றியுள்ளது; அவர் வர்ணிக்கும் ஆத்மாவிற்கு, உடலைவிட ஏற்றம் அதிகம்; விருப்பத்தை

விட நியாயத்திற்கே அவர் அதிகச் சிறப்பை அளிக்கிறார். தவிரவும், அவர் வரையறைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்; அவருடைய சிந்தனைப்போக்கில் நிதானம் முக்கிய ஸ்தானத்தைப் பெறுகிறது; முழு உருவத்தின் உறுப்புக் களுக்கும், சிறு நிலைமைகளுக்கும் இருக்கவேண்டிய ஏற் றத் தாழ்வுகளை நன்கு உணர்ந்தே, ஆழ்ந்த ஆலோசனைக் குப் பின்பே, அவர் தமது அரசியல் முறையை வகுத்திருக் கிறார்; நன்கு இணைக்கப்பட்ட சிந்தனைக் கோவையின் உருவகமாக அவரது அரசியல் கருத்துக்கள் அமைந்திருக் கின்றன. இது அரிஸ்டாட்டிலின் அரசியலின் தனிச் சிறப்பாகும்!

தமது அரசியல் நூலின் துவக்கத்திலேயே, '**ராஜாங்கம் வெறும் சம்பிரதாயத்தின் மீது இயங்குகிறது**' என்ற கருத்தை அரிஸ்டாட்டில் ஒப்புக்கொள்ள மறுக்கிறார். தவிரவும், '**ராஜாங்கத்திற்குப் பிரஜைகளின் விசுவாசத்தைக் கோரும் உரிமை இல்லை**' என்ற அபிப்பிராயத்தையும் கண் டிக்கிறார். அதே சமயம், சமூகங்களுக்கும், ராஜாங்கத் துக்கும் உள்ள வேறுபாட்டையும் புலப்படுத்தி, அரசிய லின் உண்மைக் குணத்தைத் தெளிவாகவும் காட்டுகிறார்.

ஒவ்வொரு சமூகமும் நன்மையை நாடியே அமைக்கப் பட்டதாகும். ஆகையால், எல்லா சமூகங்களுக்கும் உறைவிடமாகவும், **மகா சமூகமாகவும்** விளங்கும் ராஜாங் கம் உன்னத நன்மையைக் கருதியே அமைந்ததாகும். இதுதான் அரிஸ்டாட்டிலின் குறிக்கோளாகும். அவர் பின்பற்றும் நியாயவாதம், அவரது அரசியல் முறை பூராவிலுமே தனியான சிறப்பு அம்சமாகத் திகழ்வதைக் காணலாம். உயிர், சாதனம், சமூகம், இவற்றின் தன்மையை, இவற்றின் லட்சியத்திலிருந்தே அறிய வேண்டும் என்பது கோட்பாடாகும். தனி மனிதனுக்கும், மனித சமூகத்துக்கும் நியாயத்தையொட்டிய வாழ்க்கை

யும், அறநெறியும் நியதிகளாக இருக்க வேண்டும். எந்தப் பொருளின் தன்மையும் அதன் மூலாதாரத்தில் இல்லை! அப்பொருள் எந்த லட்சியத்தை நோக்கி உருவாகிறது என்பதைக் கொண்டுதான் குணம் நிர்ணயமாகிறது.

குணம், ஒருவனது பிறப்பில் இல்லை; அவனது லட்சியத்தில்தான் இருக்கிறது!

அரிஸ்டாட்டில் குறிப்பிடும் **ராஜ்யம்** என்பதற்கு, **நகரம்** என்றே பொருள் கொள்ளலாம். பிலிப்ஸ், அலெக்ஸாந்தர் இவர்களின் ஆட்சி உன்னத நிலையை எட்டியிருந்த காலத்தில் அரிஸ்டாட்டில் வாழ்ந்தார் என்றாலும், உயர்தர அரசியல் வாழ்க்கையை அவர் நகரங்களில்தான் கண்டார்! அதனால்தான், 'சிறுகக் கட்டிப் பெருக வாழும்' நிலைதான் மனித வாழ்க்கைக்கு ஏற்றதென்ற கருத்து அவருடைய மனத்தில் நிலைத்துவிட்டதுபோலும்!

சிறிய நகர ராஜ்யத்தில் பிரஜைகள் நெருக்கமாகப் பழகலாம்; ராஜ்யாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு எல்லோருக்கும் எளிதாகவும், அதிகமாகவும் ஏற்படும்; ஆளவும், ஆளப்படவும் பிரஜைக்கு நன்கு தெரிந்து கொள்ளவும் முடியும்.

**சமூகம்** என்ற கருவிலிருந்து உதித்ததே ராஜாங்கமாகும். எனினும் சமூகத்துக்கும், ராஜாங்கத்துக்கும் வேற்றுமை இருக்கலாம்; அந்த வேற்றுமையும் அவ்வளவு தெளிவாக இல்லை!

மனிதன் இருவித உணர்ச்சிகளினால் உந்தப்பட்டுக் கூட்டுச் சேருகிறான்.

அதனால்தான் ஆணும், பெண்ணும் ஒன்றாகக் கூடுகிறார்கள். உடனேயே, தங்களைக் காத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமும் ஏற்படுகிறது. அடிமையும் ஆண்டையும் சேருகிறார்கள். அறிவும் உடலுறுதியும்

துணைகொள்ளுகின்றன. இவ்விதம் குடும்பம் தோன்றுகிறது. இதில் மூவர் உறுப்பினர். மனிதனுடைய அன்ருடத் தேவைகளைப் பூர்த்தி செய்யவல்ல சங்கத்தை இயற்கை அமைத்துக் கொடுக்கிறது. இந்தச் சங்கமே குடும்பமாகும்; மூவரடங்கிய சமூகமாகும். இது முதல் நிலையாகும்.

அடுத்த நிலையில் **கிராமம்** வருகிறது. பல குடும்பங்களின் தொகுப்பே அல்லது தொகுதியே கிராமமாகும், அன்ருடத் தேவைகளைக் காட்டிலும் அதிகமானவற்றைப் பூர்த்தி செய்கிறது அந்தக் கிராமம். பல குடும்பங்களின் அங்கமே அந்தக் கிராமம். ஆயினும், கிராமத்தின் அன்ருடத் தேவைகளில் அதிகமான தேவைகளை அரிஸ்டாட்டில் ஏனோ குறிப்பிடவில்லை. "ஒரே குலத்துதித்தவர்கள் ஒன்று சேர்ந்து, இயற்கையாக அமைத்துக்கொண்டதுதான் கிராமம்" என்று அவர் கருதினுர். இத்தகைய கிராமத்தை, மனிதனுக்கும் மிரு கத்துக்குமிடையே, ஒரு அரணகவும் அவர் கருதியிருக்கக்கூடும்!

மூன்ருவது நிலையில், பல கிராமங்கள் சேர்ந்த தொகுதி வருகிறது. "வாழ்வதற்காக ஒன்று சேர்ந்து, நல்வாழ்க்கையை லட்சியமாகக் கொண்டு, இணைந்து வாழ்ந்து, அநேகமாக அல்லது போதுமான அளவு தன்னிறைவு எய்தக்கூடியதாக பெரும் அளவிற்கு முழுச் சமூகமாக அமைந்துவிடுகிறது, இந்தப் பல கிராமங்களின் சங்கம்." இதுதான் ராஜாங்கத்தின் வேற்று நிலையாகும்!

வாழ்வதற்கே இந்தத் தொகுதி ஏற்பட்டதாயினும், அந்தச் சேர்க்கையுடன் வேருெரு விருப்பமும் கூடிக் கொள்வதைக் கவனிக்கவேண்டும். நல்ல வாழ்க்கையை வாழவேண்டுமென்பதே அந்த, அதிகப்படியான விருப்பமாகும்! நல்ல வாழ்க்கையெனில், "அறிவும்—அறமும் கலந்த வாழ்க்கை யாகும்!" இது அரிஸ்டாட்டிலின்

நோக்கமாகும். குடும்பம், கிராமம் போலவே ராஜாங்க மும் இயற்கையாக அமைந்ததே.

ராஜாங்கத்தில் ஒழுக்கத்தைப் பின்பற்றுவதற்கு நிறைய வாய்ப்புகளுண்டு. பலதரப்பட்ட உறவு நிலைகள் காரணமாகப் பல்வேறு குணங்களும் வளரக்கூடும். அதே போல, மனிதனுக்கு மனிதன் நெருங்கிப் பழகுவதால், ஒருவன் மற்றவன் மனத்தில் இருப்பதைப் புரிந்து கொண் டும்—பகிர்ந்து கொண்டும் சிந்திப்பதால், அறிவு முதிர்ச் சிக்கான வாய்ப்புகளும் ஏற்படுகின்றன. ராஜாங்கம் என் பது குடும்பம், கிராமம், சமூகம் முதலியவற்றின் அமைப்பு களின் இறுதி வடிவமாகும். இந்த வடிவமும் இயற்கை யாகவே ஏற்படுவதுதான். எனவே, மனிதனும், இயற்கை யாகவே தோன்றுகின்ற ஒரு **அரசியற் பிராணியேயாவான்** !

"ராஜாங்கம், சம்பிரதாயமாக ஏற்பட்டது அல்ல; மனித சுபாவத்திலிருந்து ஏற்பட்டதாகும் !" என்ற இக் கருத்தை அரிஸ்டாட்டில் வெளியிட்டதன் மூலம், அரசி யல் சிந்தனை அல்லது ஞான வளர்ச்சிப் போக்கில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திவிட்டாரெனலாம் !

**திரேஸி மாக்கஸ்** போன்றோர் அந்தக் காலத்திலே, "சட்டமும், ராஜாங்கமும் வெறும் சம்பிரதாயப் படைப் புக்களே; இவை தனி நபர்களின் சுதந்திரத்தில் குறுக்கிடு கின்றன. இக் குறுக்கீடுகள் ஆள்பவரால் நிர்ப்பந்தமாகத் திணிக்கப்படுகின்றன. பிரஜைகள் தண்டனைக்குப் பயந்து பணிகிறார்கள். அறிஞன் என்பவன் எவனுக்கும் கட்டுப் பட்டவன் ஆகமாட்டான். அவனுக்கு அவனே அரசன். அவன் எந்தத் தனி நாட்டுக்கும் பிரஜையல்ல; அவன் உலகப் பிரஜையாவான்" என்றவரெல்லாம் வாதம் செய்தனர். நல்ல அறிவாளிகளாக இருந்தும், 'கிறுக்கர்' களாகிவிட்ட இவர்களுடைய வாதத்தையெல்லாம் அரிஸ் டாட்டில் திறம்பட எதிர்த்து நின்றார். 'இதன் மூலம்

அவர் தமது வருங்கால அரசியல் ஞான வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றினர்' என்றே பல ஆசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள் !

ராஜாங்கத்தின் தோற்றுவாயைப்பற்றி அரிஸ்டாட்டில் பின்வருமாறு கூறுகிறார்.

"ராஜாங்கம், மனிதனுடைய சுபாவத்திலிருந்தே எழுந்ததாகும் ; அது இயற்கையான ஸ்தாபனமே. மனித வாழ்க்கையின் மூலாதாரத்திலிருந்து அது தோன்றவில்லை; அவனுடைய லட்சியத்திலிருந்தே அது உருவெடுத்தது! காட்டுமிராண்டியின் வாழ்க்கையிலிருந்து நாகரிகமான வாழ்க்கை பிறப்பதில்லை! ராஜாங்கம், சுதந்திரத்தைச் செயற்கை முறையில் கட்டுப்படுத்துவதற்காகத் தோன்றியதல்ல; ஆனால், சுதந்திரத்தை அனுபவிப்பதற்கே ராஜாங்கம் ஒரு சாதனமாகத் தோன்றியிருக்கிறது" ராஜாங்கத்திற்கு அரிஸ்டாட்டில் இந்த இலக்கணத்தையே வகுத்திருக்கிறார்!

ராஜாங்கம், மனிதனுடைய விருப்பத்திலிருந்து பிறந்ததாயினும், அது இயற்கை நியதியின்படியே தோன்றியிருக்கிறது. அவனுடைய இதய பூர்வமான விருப்பத்திலிருந்து உருவாகி, சமுதாயத்தை நிர்வகித்து வரும் ஸ்தாபனமே ராஜாங்கமாகும்.

ராஜாங்கத்துக்காகவே உருகும் அரிஸ்டாட்டில், குடும்பத்தின் முக்கியத்தைப் புறக்கணிக்கவில்லை. ராஜாங்கத்தைப் பல சமூகங்களின் மகா சமூகமாகவே அவர் மதித்தார். தருமநெறி அல்லது ஒழுக்கத்தைப் புகட்டுவது மதத்தின் கடமைதான் என்று அவர் நினைக்கவில்லை. "மக்களின் சீலத்திற்கு ராஜாங்கமே பொறுப்பேற்க வேண்டும்" என்பது அவருடைய கோட்பாடு. அது மட்டுமின்றி, "சமுதாயத்திலுள்ள மற்றெல்லா சேவா ஸ்தாபனங்களும் ராஜாங்கத்திற்குக் கட்டுப்பட்டே, சார்ந்தே இயங்க

வேண்டும்'' என்றும் அவர் கருதினர். மனிதன் அரசியற் பிராணி என்பதுடன் சமூகப் பிராணியுமாவான்!

'வெறும் வாழ்க்கை'தான் எல்லாவற்றிற்கும் மேலானது என்கிற நோக்கம் தலைதூக்கி, மனிதனுக்கு அதைவிட உயர்ந்த லட்சியமே இல்லையென்ற நிலை ஏற்பட்டுவிடுமானல், மனித வர்க்கத்திற்கு அதைவிட வேறு துரதிருஷ்டம் தேவையில்லை! அந்த நிலை ஏற்படுவதை அரிஸ்டாட்டில் விரும்பவில்லை. அதனுல், மனிதனுடைய பண்பாட்டின் வளர்ச்சிக்கான பொறுப்பையும் அவர் ராஜாங்கத்திடமே ஒப்படைத்திருக்கிருர்.

## அடிமைத்தனம்

குடும்பத்தில் பிறந்ததே ராஜாங்கம் எனக் கொண்ட அரிஸ்டாட்டில், குடும்ப நிர்வாகத்தின் பல பிரிவுகளை ஆராய்ந்திருக்கிருர். அடிமைக்கும்—ஆண்டைக்கும் இருக்க வேண்டிய உறவு முறைகளை எடுத்துக் கூறியிருக்கிருர். இரண்டாவதாக, செல்வம் திரட்டுவதை அல்லது சேர்ப்பதைப்பற்றியும் விவரித்திருக்கிருர்.

அடிமையை, வாழ்க்கையை நடத்துவதற்குரிய கருவியென்றும், "உயிருள்ள உடமை'' என்றும் அரிஸ்டாட்டில் கருதுகிருர்! "மனிதனின்றித் தானுகவே நெய்து கொள்ளும் திறனைத்தறி பெற்றுவிடுவதானுல், அடிமைகள் வேண்டியிராது'' என்று அரிஸ்டாட்டில் சொல்கிருர். வாழ்க்கை நடத்துவதில் உதவியாகவுள்ள வேலைக்காரனைப் பற்றியதே—அடிமையைப் பற்றியே அவருடைய இந்த வியாக்யான உவமையென்பதை நாம் கவனிக்க வேண்டும்.

"இயற்கை நியதிப்படியே மேலானவன்—கீழானவன் என்ற இருநிலைகள் மனிதரிடையே தோன்றியது. ஆத்மா-உடல், அறிவு-பசி, மனிதன்-மிருகம், ஆண்-பெண் என

வேற்றுமைகள் இருப்பதுபோன்றே இந்த இரு நிலைகளுக்கும் இடையே வேற்றுமை இயற்கையாகவே அமைந்திருக்கிறது" என்று சுட்டிக் காட்டிவிட்டு, அவரே, " ஒருவன் ஆள்வதும், மற்றவன் ஆளப்படுவதும் பரஸ்பரம் நன்மையையே தரும் " என்றும் சாதிக்கிறார் !

மனிதனையும், இயற்கை இரு கூறுகளாகப் பிரித்திருக்கிறது. **சரீர வலிமை பெற்றவன் உழைப்பதும், மற்றவன் அரசியல் வாழ்க்கையில் புகுவதும் இயற்கையிட்ட கட்டளைப்படிதான் நடைபெறுகிறது! அதாவது, ஒரு சாரார் அடிமைகளாகவும், மற்றொரு சாரார் சுதந்திர புருஷர்களாகவும் பிரிந்திருப்பது இயற்கையின் விளைவேயாகும் !**

கிரேக்கரின் சமுதாய வாழ்வில் முக்கிய அம்சமாக இருந்துவந்த அடிமைமுறையை அரிஸ்டாட்டில் அப்படியே ஏற்றுக்கொண்டார் என்று நாம் முடிவுகட்டிவிடக்கூடாது ! சில நிபந்தனைகளுக்குட்பட்ட அடிமை முறையையே அவர் ஏற்கிறார்! "பிறப்பிலேயே அடிமை" என்ற ஏற்பாட்டை அவர் நிராகரிக்கிறார் !

அவரது சில நிபந்தனைகளுக்குட்பட்ட அடிமை முறையை ஆராய்வோம் :

1. இயற்கையான சுதந்திரன், இயற்கையான அடிமை என்று தெளிவாகப் பாகுபாடு செய்ய முடியாது; இயற்கையான அடிமையின் குழந்தையும் இயற்கையான அடிமையாகவே வாழ்ந்தாக வேண்டும் என்ற நியதியில்லை.
2. யுத்தத்தில் ஏற்படும் வெற்றியால் அடிமையாக்கும் உரிமை வந்து விடுவதில்லை. பலம் பெருகுவதால்மட்டும் சிறப்பும் வலுத்து விடுவதில்லை. **ஒரு கிரேக்கன் மற்றொரு கிரேக்கனை அடிமைப்படுத்தக்கூடாது !**

3. ஆண்டை, அடிமை—இவ்விரு சாராரின் நலனும் ஒன்றேயாகும். எஜமானன் தன் அதிகாரத்தைக் கொடுமையாக உபயோகிக்கக்கூடாது. அடிமையையும் தன் நண்பனாக நடத்தவேண்டும்.

4. எல்லா அடிமைகளுக்கும் வருங்காலத்தில் விடுதலை பெறும் நம்பிக்கையை அளிக்கவேண்டும்.

இந்த இடத்தில், அரிஸ்டாட்டிலின் சித்தாந்தத்தில் தெரிகின்ற பிற்போக்கான அம்சத்தை நாம் கவனிக்கத் தவறக்கூடாது!

'கிரேக்கனை கிரேக்கன் அடிமையாகக் கொள்ளக் கூடாது என்று அவர் விதிக்கும் நிபந்தனை பிற்போக்கானது' என்று கூறுகின்றவர்கள் பின் வருமாறு அபிப்பிராயப்படுகிறார்கள் :

"மனித வர்க்கத்தை, இரண்டாக, நிரந்தரமாகப் பிரிக்கும் அரிஸ்டாட்டிலின் வாதம் ஒப்புக்கொள்ளக் கூடியதன்று; மனித வர்க்கத்தை ஒழுக்கம்–அறிவைக்கொண்டு இரண்டாகப் பிரித்துவிட்டால், அப்படிப்பட்ட பிரிவினை அடிமை முறையை நிரந்தரமாக்கிவிடும். 'அடிமை என்பவன் வெறும் உடலோடுமட்டும் இருப்பவன் அல்ல; தன்னுடைய எஜமானின் ஆணைக்கு அவன் பணிவதோடு, அவரது நியாயவாதத்தையும் பின்பற்றுகிற அறிவும் அந்த அடிமைக்கு இருக்கிறது; அடிமை என்ற ரீதியில் அவனால் நண்பனாக இருக்க முடியாவிட்டாலும், மனிதன் என்ற ரீதியில் நண்பனாக இருக்க முடியும்' என்று அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார். ஆனால், அவரே, மனிதரை மேலவர்-கீழவர் என்று பிரித்தும் பேசுகிறார். இப்படிப் பொருத்தமில்லாமல் அவர் பேசுவதில்தான் அவருடைய பிற்போக்குத்தனம் வெளியாகிறது!"

## செல்வம் திரட்டல் அல்லது சேர்த்தல்

அரிஸ்டாட்டிலுடைய அரசியலின் பொருளாதாரப் பகுதியைக் கவனிப்போம்.

செல்வம் சேர்ப்பதுபற்றிய அவருடைய விரிவுரையில் தான் இந்தப் பொருளாதார அம்சம் இருக்கிறது.

செல்வம் சேர்ப்பதில் இரண்டுவகையுண்டு. முதல்வழி, இயற்கையானதாகும். வாழ்க்கைக்குத் தேவையான இயற்கைப் பொருள்களைச் சேகரிப்பதுதான் இந்த இயற்கை வழியாகும். ஆடு, மாடு மேய்த்தல்—வேட்டையாடுதல், விவசாயம் செய்தல் ஆகிய வழிகளில் இப் பொருள்களைப் பெறும் விதத்தைப் பற்றியும் அவர் விவரிக்கிறார். மனிதனுடைய உணவு, உடைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் இவ்வழி நின்றுவிடுகிறது. குடும்ப நிர்வாகம் ராஜ்ய பரிபாலனம் ஆகிய துறைகளின் ஒரு பகுதியாகவே, அவர் இவ்வழியை விதித்திருக்கிறார்.

இவ்வழிக்கும்,இரண்டாவதுவழியானசெல்வம்திரட்டு வழிக்கும், பண்டமாற்று முறையை ஓரளவிற்கே அரிஸ்டாட்டில் வற்புறுத்துகிறார்! உபயோகத்திலுள்ள பொருளின் மதிப்புக்கும், பண்டமாற்றத்தின்போது அப் பொருளுக்கு ஏற்படும் மதிப்புக்கும், அரிஸ்டாட்டில் கற்பிக்கும் வேற்றுமை சிறப்புடையதாகும். பாதரட்சையைக் காலில் அணியலாம்; அல்லது அதை, வேறு பொருள் ஒன்றுக்காக, பண்டமாற்று செய்யலாம். இந்த இரண்டு நிலைகளிலும் ஒரே பொருள்தான் உபயோகிக்கப்படுகிறது. 'பாதரட்சையைக் காலில் அணிவதுதான் சிறந்தது' என்பது அரிஸ்டாட்டிலின் கட்சி! வாழ்க்கைக்கு அவசியமான அளவிற்கே பண்டமாற்று செய்யவேண்டும்; அப்படிப் பட்ட பண்டமாற்றே இயற்கையானதாகும்!

சரக்குகளைக் கொடுத்து, பதிலுக்குப் பணம் பெறுவது என்பதும் இரண்டாவது வழியைச் சார்ந்த முறையே

யாகும். "இவ்வழியில் செல்வம் சேர்ப்பது இயற்கையான செல்வத்திரட்டு ஆகாது. சரக்குகளைவிடச் சுலபமாக நாணயத்தையே எடுத்துச் செல்லமுடியும். எனவே, நாணயத்தையே பயன்படுத்திக்கொள்ளலாம்." அரிஸ்டாட்டில் வர்த்தகத்தை இயற்கைக்கு மாறுபட்டதாகவே கருதுவது சிலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது.

அரிஸ்டாட்டில், ஒழுக்கக் கண்ணோட்டத்தில் வர்த்தகத்தைப் பார்த்து, அதைத் "தவறு" என்று கூறுகிறார். வாழ்க்கைக்கு அவசியமாகத் தேவைப்படுவதற்கு மேல், "வரம்பின்றிச் செல்வம் திரட்டுவதை" அரிஸ்டாட்டில் வெறுக்கிறார்!

வர்த்தகத் தொழிலை, இயற்கைக்கு விரோதமானதென்று கருதும் அரிஸ்டாட்டில், பணத்தை வட்டிக்குத் தரும் லேவாதேவித் தொழிலையும் கண்டிப்பதில் வியப்பொன்றுமில்லை.

"இயற்கைக்கு விரோதமான பணம் திரட்டும் தொழில்களுக்குள்ளேயே மிகவும் மோசமான தொழிலே இந்த லேவாதேவித் தொழில்"—இது அவருடைய கண்டிப்பான கருத்தாகும்!

மேலும் அவர் அதுபற்றிக் கூறுவதைப் பாருங்கள்:

"பணம் என்பதே இயற்கையானதல்ல. ஆதியில் அது, நாணயமாற்றுக்காக ஏற்பட்டதாகும். அதைவிட, இன்னும் அதிகமாக இயற்கைக்கு மாறுபட்ட காரியத்துக்கு அப்பணத்தைப் பயன்படுத்தி, வட்டிக்குவிடுவது அநியாயமாகும்."

வர்த்தகம், வட்டிவாங்குதல் முதலிய செயல்களை அவர், ஒழுக்கமற்ற செயல்களாகக் கருதியதால்தான் இவ்வாறு கூறியிருக்கிறார்.

'கடன் கொடுத்தும் பொருளாதார வகையில் சேவை புரியும் நிலையைக் கவனிக்காமல், தொழிலுக்கு ஊக்க மூட்டும் முதலீட்டு உதவியைக் குறிப்பிடாமல், அவர், கடன் கொடுப்பவனுக்கு அடிமையாகி அவதியுறும் ஏழையின் பரிதாப நிலையைக் கண்டு மட்டும் இரங்குவது' சிலருக்குப் பிடிக்கவில்லை!

குடும்ப நிர்வாகக் கலையே, அரிஸ்டாட்டிலின் அரசியல் கலையாக அல்லது ஆட்சிக் கலையாகப் பரிணமிக்கிறது. ஒரு குடும்பத்தில் நிலவவேண்டிய விதிமுறைமையைப் பற்றி அவர், இப்பகுதியின் கடைசியிலேயே சொல்லி யிருக்கிறார். குணத்தை முதலில் வற்புறுத்திவிட்டு, பிறகு விதியை வகுப்பது அவருடைய அரிய அரசியல் முறை போலும்!

"அடிமைக்கு விவாதிக்கும் திறனில்லை; பெண்ணுக் குத் திறனுண்டு; அதிகாரமில்லை; குழந்தைக்கு விவா திக்கும் திறமையிருக்கிறது; ஆயினும், அது முதிர்ந்து பக்குவமடையவில்லை."—இந்தச் சுபாவ அடிப்படையில் தான் அவர் ஆட்சிமுறையை வகுக்கிறார்.

"அடிமைமீது எஜமானன் யதேச்சாதிகாரத்தைச் செலுத்தவேண்டும்; மனைவியைச் சட்டப்படி கணவன் ஆளவேண்டும்; குழந்தைக்குத் தந்தை மன்னன் போன்றிருக்க வேண்டும்." இவ்வாறு, அரிஸ்டாட்டில், குடும்ப நிர்வாகக் கலையிலே மூன்று முக்கியமான ஆட்சி முறைகளை வகுத்திருக்கிறார். இந்த மூவகை ஆட்சிமுறை களான,

1. யதேச்சாதிகாரம்
2. சட்டநியதி
3. முடியரசு — இவைகளுக்கெல்லாம் குடும்பமே தாயகம்!

## லட்சிய பூர்வமான பொதுநல ராஜாங்கங்கள்

லட்சிய பூர்வமான பொதுநல ராஜாங்கங்களைப்பற்றி (Ideal Commonwealth) எழுதப்புகும் அரிஸ்டாட்டில் தம் குருநாதன் பிளேட்டோவின், "குடியரசை" (Rebublic) ஒப்புக்கொள்ளவில்லை என்பதைக் காண் கிறோம். அவருடைய குடியரசு எதிர்ப்பை நாம் முக்கிய மாகக் கவனிக்க வேண்டும்.

1. மாதரும், பாலரும் கொண்ட சமுதாய அமைப்பை ஆதரிக்கிறார் பிளேட்டோ; ராஜாங்கத்தின் கட்டுக்கோப்பில் எவ்வளவுக் கெவ்வளவு ஒற்றுமை நிலவுகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு நல்ல தாகும் என்றும் அவர் நினைக்கிறார். ஆனால், அரிஸ்டாட்டில் இதற்கு நேர்மாறாக அபிப்பிராயப் படுகிறார். "ராஜாங்கமே வேறுபாடுகளின்மீது, இயற்கையாகவே அமைவதாகும். நாடு வேறு; ராஜாங்கம் வேறு" என்பது அவருடைய வாதம். "ஒரேமாதிரியாக இல்லாத பல வகையினரைக் கொண்டது ராஜாங்கமாகும்; ஆனால், நாடோ வெனில் பாகுபடுத்தப்படாத—பிரிக்கப்படாத மொத்த உருவகமாகும்" என்பது அவருடைய கருத்து.

ராஜாங்கத்தின் கடமைகள் பிரிக்கப்பட்டுள் ளன. இங்கே ஆள்பவர் கடமை வேறு; ஆளப் படுபவர் கடமை வேறு. பிளேட்டோவும் அரிஸ் டாட்டிலின் இந்தக் கருத்தை ஒட்டியே சிந்தித் திருக்கிறார்.

பிளேட்டோவும் மூவகைப் பிரிவைப்பற்றிக் கூறுகிறார். ஆயினும், அவர் அளவுக்குமீறிய ஒற்றுமையை எதிர்பார்ப்பதாக அரிஸ்டாட்டில் அவரைக் குறை கூறுகிறார்.

2. ஒற்றுமையே ராஜாங்கத்தின் உன்னத லட்சிய மென்றால், பிளேட்டோவின் ஏற்பாட்டில் அதை அமுல் செய்ய முடியாது என்பது அரிஸ்டாட்டி லின் இரண்டாவது வாதம்.

3. பிளேட்டோவின் ராஜாங்க அமைப்பில், குழந் தையை ஸ்வீகாரம் செய்துகொள்ள பிரஜைகள் அனுமதிக்கப்படுகிறார்கள். எல்லாப் பிரஜை களுக்கும் குழந்தை இருக்க வேண்டும் என்பதே அவர் வகுத்த ஐதீகத்தின் நோக்கமாகும். இந்த ஏற்பாட்டையும் அரிஸ்டாட்டில் எதிர்க்கிறார். அவர் இந்த எதிர்ப்புக்குக் கூறும் காரணம் இதுதான்.

"தான் பெற்ற குழந்தைக்குக் கொடுக்கும் செல்லத் தைப் போல, தான் ஸ்வீகாரம் எடுத்து வளர்க்கும் குழந் தைக்குச் 'செல்லம்' கொடுக்க முடியாது. எல்லோரும் ஒரு முகமான வாஞ்சையை ஸ்வீகாரக் குழந்தைகளிடம் செலுத்தமாட்டார்கள். இத்தகைய ஒரு முகமான குழந்தை வாஞ்சை, தியாக சிந்தையைப் பரவலாக அமைத் துக்கொள்ளும் பரிபக்குவம் இருந்தால்தான், ஏற்படும்."

இங்கே, பிளேட்டோவைக் காட்டிலும் அரிஸ்டாட் டில் அதிக லட்சியவாதியாகக் காட்சியளிக்கிறார்.

சொத்துரிமைகள் விஷயத்தில், அரிஸ்டாட்டில் மூன்று வகைகள் சாத்தியமென்று கருதுகிறார்!

1. நிலம் தனியாரின் சொத்துரிமையாயிருந்தாலும், அதிலிருந்து கிடைக்கும் கண்டுமுதலைப் பொது வாக உபயோகித்துக்கொள்வது.

2. பொதுவுடமை; ஆயினும், அதில் தனியார் உபயோகம்.

3. பொதுவுடமை; பொது உபயோகம்.

நிலத்தைத் தனியார் சொத்துரிமையாகவே விட்டு, அதில் விளைகின்ற பொருள்களை மட்டும் பொதுவாக உபயோகித்துக்கொள்ளும் முறையே, மற்ற இரண்டையும் விடச் சாலச் சிறந்த முறையென்று அரிஸ்டாட்டில் கருதுகிறார்.

'பொதுச் சொத்துரிமையில், கடுமையாக உழைத்துக் குறைவான பலன் பெறுபவன், குறைவாக உழைத்து அதிகமான பலன் பெறுபவனைக் கண்டு பொருமுவான்! பொதுச் சொத்துரிமையில் சண்டை சச்சரவுகளே மலியும். சொந்தச் சொத்துரிமை ஏற்பாட்டிலோவெனில், வேலை செய்யும் தனிச் சொத்துரிமையாளன் தனது முழுத் திறமையையும் காட்டுகிறான். இது மனித சுபாவம். இங்கே இன்பம் ஏற்படும். நண்பருக்கு உதவும்போது ஒருவித மகிழ்ச்சி உண்டாகும். இங்கே, உதவி புரியும், குணப்பண்பைக் காட்டுவதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது. இன்பத்தின் காவலர்களான தனிச் சொத்துரிமையாளர்களின் உரிமையைப் பறித்துவிட்டு, ராஜாங்கம் ஆனந்தமாக இருந்தால் போதும்' என்று சொல்வதில் எவ்வித சாரமுமில்லை. தனி மனிதர்கள்தாம் இன்பத்தை அனுபவிக்க இயலும். அதனால், நிலத்தைத் தனியார் உரிமையாகவே விட்டு, அதில் விளைவதை மட்டும் பொதுவாக உபயோகித்துக்கொள்வதுதான் நல்லமுறை' இதுதான் அரிஸ்டாட்டிலின் கருத்தாகும்.

பொருளாதாரத் துறையில் ராஜாங்கத்தின் தலையீடு இருக்கவே கூடாது என்பது தீவிரமான தனித் தன்மை வாதத்தின் கோட்பாடாகும்! ஆனால், அரிஸ்டாட்டில் ராஜாங்கத்தின் கடமைகளைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கொள்பவராக இருப்பதால், ஆக்க முறையில் எதையும் சிந்திப்பவராக இருப்பதால், அவருடைய தனித் தன்மை வாதம் பகுத்தறிவுடன் கூடிய சித்தாந்தமாகவே இருக்கிறது!

முதலாளித்துவத்துக்குத் துணைபுரிபவராக அரிஸ்டாட்டிலைக் கருதிவிடுவதற்கில்லை! ஏனெனில், அவர், செல்வத்தைக் குவிப்பதைக் கடுமையாக எதிர்க்கிறார் என்பதை முன்னமேயே கண்டோம். வட்டி வாங்குவதை அவர் எதிர்க்கவில்லையா? ஏன், வர்த்தகத் தொழிலையே அவர் கண்டிக்கவில்லையா?.........

அரிஸ்டாட்டிலோ இயற்கைவாதியாவார். குடும்பமும், சொத்துடைமையும், அவருக்கு இயற்கையானவையே. "செல்வத்தைப் பொதுநிதியாக மாற்ற நினைப்பது அல்லது முயலுவது, சுயநல உணர்ச்சியைச் சட்டம் போட்டுத் தடை செய்வதாகும்" என்கிறார் அரிஸ்டாட்டில். அதனால், அவர், சுயநல உணர்ச்சிக்கு ஆதரவு தருகிறார் என்று அவசரப்பட்டு முடிவு செய்துவிடுவது தவறாகும். "மனிதனுடைய சுயநலம் அவனுடைய தீயகுணத்தின் ஆழத்தில் வேரூன்றியிருக்கிறது. இதைச் சட்டத்தின் மூலம் அகற்றுவதென்பது இயலாத காரியம்!" என்று அரிஸ்டாட்டில் கூறுவதைக் கவனித்தால்தான், அவர் சுயநல உணர்ச்சியைப்பற்றி எவ்வாறு நினைக்கிறார் என்பது சரியாகப் புலப்படும்.

சுயநலத்தை அகற்றுவதற்கு ஒரே வழிதான் உண்டு. செல்வத்தைத் தன் விருப்பப்படி, உபயோகிக்கும் குணத்தையும், தனக்குச் சொந்தமான உடைமையைப் பொது உபயோகத்துக்குச் சுயேச்சையாக விடுகின்ற தன்மையையும் புகட்டவல்ல **கல்விமுறையே** முக்கியமென்பது அவருடைய சித்தாந்தமாகும். ("பணக்காரர்கள் தருமகர்த்தாக்கள் போல நடக்கவேண்டும்" என்ற காந்திஜியின் கொள்கைக்கு இதை ஒப்பிடலாம்!) சொத்துரிமையில் சமத்துவம் பற்றியும் அரிஸ்டாட்டில் சிந்திக்கத் தவறிவிடவில்லை!

"சொத்துக்களைச் சமமாகப் பங்கிட்டு, அதையே ஸ்தாபித்துவிட்டால், ஜனத்தொகை பெருகப் பெருக

அப்படி ஸ்தாபிக்கப்பட்ட சொத்துரிமை சம பங்கீட்டால் சமத்வமே சிதறுண்டுபோகும். ஆகையால், சொத்துக்களைச் சமமாகப் பங்கிடுவதைக் காட்டிலும், மனிதர்களின் தேவைகளைச் சமனப்படுத்த முற்படுவதே சரியான செயலாகும்" என்று அவர் கூறுகிருர். மேலும் அவர், "மேலானவர்கள் அதிக ஆசைப்படாமலிருக்கவும், கீழ் நிலையில் இருப்பவர்கள் அதிகமாகப் பெறுவதைத் தடுக்கவும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்" என்று முடிவாகக் கூறிவிட்டார். இதனுல், மேல்நிலை மக்கள் தம் ஆசைகளைத் துறக்கத் தலைப்பட்டால், கீழ்நிலை மக்களும் ஆசைப்படமாட்டார்கள்; தேவைகள் தாமாகவே சமமான நிலைக்கு வந்துவிடும்! ஜனத்தொகை ஏறினுலும், இறங்கினுலும் இந்தச் "**சம—தேவை ஏற்பாடு**" மாருது.

## ராஜாங்கமும் பிரஜையும்

ராஜாங்கம் என்பது எது? பிரஜைகள் என்பவர் எவர்? இக் கேள்விகளின் பதில்களில்தாம் அரிஸ்டாட்டிலின் அரசியல் அடிப்படை முழுதுமே அமைந்திருக்கிறது. அவரது ராஜாங்க தத்துவம்—பிரஜா தத்துவம்—இவ்விரண்டையும் சேர்த்துப் படித்தாராய்ந்தால்தான் ஒரு முக்கியமான உண்மையைக் காணமுடியும்; '**பிரஜையை நடமாடும் ராஜாங்கமாக மதிக்கவேண்டும்**' என்பதுதான் அந்த உண்மையாகும்!

"ஒவ்வொரு பிரஜையும், உண்மையிலேயே ஆட்சி புரிபவனுக இருக்கவேண்டும். அவன் நிர்வாகத்தின் உறுப்பாக இருப்பதோடு, சட்டம் இயற்றுபவனுகவுமிருக்க வேண்டும்."—இவ்வாறு அரிஸ்டாட்டில் கருதுகிருர். ஆகையால், அவரது ராஜாங்கம் பிரஜையினுடைய உரிமையிலிருந்து மட்டுமின்றி, கடமையிலிருந்தும் ஆரம்பமாகிறது.

ராஜாங்கம் பிரஜைகளைக் கொண்டிருக்கிறது. அப்படியானால் அந்தப் பிரஜை என்போன் எவன்? அவனுடைய தன்மை என்ன? ஒரு நாட்டில் ஒருவன் வசிப்பதாலேயே அவன் அந்நாட்டுப் பிரஜையாகிவிடுவதில்லை! அந்நியரும், அடிமைகளும் கூடத்தான் வசிக்கிறார்கள்! வழக்குத் தொடுக்கவோ அல்லது தொடுக்கப்படவோ உரிமை இருப்பதாலேயே ஒருவன் பிரஜையாகிவிடுவதில்லை. அந்நியர்கூட உடன்படிக்கை மூலம், இந்த உரிமையைப் பெறமுடியும். பிரஜைக்குப் பிறப்பதின் மூலம் மட்டுமே பிரஜையாகிவிட முடியாது. நீதி நிர்வாகத்திலும், ஆட்சிமன்றத்திலும் பங்குள்ளவனே பிரஜை என்று மதிக்கப்படுகிறான். ஆயினும், ராஜாங்க உருவமாற்றத்துக்கேற்ப பிரஜா உரிமையும், இலக்கணமும் மாறுகின்றன!

அரிஸ்டாட்டிலின் அரசியலின்படி, பிரஜை என்போன் பிரதிநிதித்துவ உரிமை படைத்தவனாகும். அவனை, "ராஜாங்கத்தின் ஆதாரம்" என்று அரிஸ்டாட்டில் கருதுகிறார். தன்னை ஆளும் பிரதிநிதியை நியமிப்பதுடன், அரிஸ்டாட்டிலின் பிரஜை நின்றுவிடுவதில்லை. அவனும் ஆள்கிறான்; நிர்வாகத்தில் பங்கு கொள்ளுகிறான்; சட்டமியற்ற உதவுகிறான்.

அரிஸ்டாட்டிலின் இந்த உன்னத பிரஜாதத்துவத்தில் ஒரு குறையும் இருக்கிறது. தொழிலாளிகள், விவசாயிகள்—இவர்களுக்கு ஆளும் திறமையில்லை என்று கூறி, அவர்களைமட்டும், பிரஜை அந்தஸ்தில்லாதவர்களாக அவர் புறக்கணித்துவிடுகிறார்; அவர்களுக்கு வாக்குரிமையைக்கூட அவர் மறுத்துவிடுகிறார்!....இதனால் பெரும்பாலான மக்களுக்கு அரசியல் அறிவுபெறும் வாய்ப்பு இல்லாமல் போவதுடன், இதன் விளைவாக ராஜாங்கத்தின் பலத்திற்கும் ஊனம் ஏற்படுகிறது. இந்தக் குறையை அவரே படைத்திருக்கிறார்போலும்!

"ஆள்பவனுக்கு இருக்கவேண்டிய குணங்கள் வேறு; பிரஜைக்கு இருக்கவேண்டிய குணங்கள் வேறு என்ற எண்ணம் இருக்கக்கூடாது. பிரஜைக்கு இருக்கவேண்டிய குணங்கள் யாவும் ஆள்பவனுக்கும் வேண்டியவையே. ஒரு சுதந்திரபுருஷனை மற்றொரு சுதந்திரபுருஷன் ஆள்வது எப்படி என்பது தெரிந்திருக்கவேண்டும். கட்டளையிடும் விவேகம் ஒன்றுதான் ஆள்பவனுக்குள்ள தனியான குணச் சிறப்பாகும். மற்ற குணங்கள் யாவும் பிரஜைக்கு இருக்க வேண்டியவை போலத்தான்!

"பிரஜை என்பவனுக்குக் கடமைகளைச் செய்வதற்கான ஆற்றல் இருக்கவேண்டும். அதொன்றுதான் பிரஜையின் தனியான தகுதியாகும். பிரஜையின் குறைந்த பட்சக் கடமைகள் எவை?—அவன் நீதிபரிபாலனங்களுக்காகவும் இருக்கவேண்டும்; சட்டம் இயற்றுபவனுகவும் இருக்கவேண்டும்." இப்படிக் கூறும் அரிஸ்டாட்டில், வருங்காலத்தில் பிரதிநிதித்துவ ராஜாங்கங்கள் தோன்றக் கூடும் என்பதை யோசித்துப் பார்க்கவில்லை போலும்! சட்டசபை அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கவல்ல வாக்குரிமையில்தான், பிரஜா அந்தஸ்துக்கான குறைந்தபட்ச உரிமை இருக்கிறது என்பதையும் அவர் அறியவில்லை போலும்! இது பெரும் வியப்பையே தருகிறது!

தொழிலாளி வர்க்கத்தினரை, அவர் பிரஜா வர்க்கத்தில் சேர்க்காததும் ஆச்சரியத்தைக் கொடுக்கிறது!

சரீர உழைப்பினுல், ஆராய்ந்தறியும் தன்மையை ஆத்மா இழந்துவிடுகிறது; அதனுல் அவர்களுடைய அறிவு—குணத்தைப் பயன்படுத்த இயலாது என்று அவர்களை அரிஸ்டாட்டில் ஒதுக்கிவிடுகிருர். தொழிலாளி வர்க்கத்தை அவர் ராஜாங்கத்தின் அம்சமாகக் கருதவில்லை; ஆயினும், அவர்களை ராஜாங்கத்தை நிலைக்கவைக்க உழைக்க வல்லதொரு சாதனமாகவே கருதுகிருர்!

## அரசியல் அமைப்புக்களின் பாகுபாடுகள்

பிரஜா தத்துவத்தின் அடிப்படையிலேயே, அரிஸ்டாட்டில், அரசியல் அமைப்புக்களைத் தரவாரியாகப் பாகுபடுத்த முற்படுகிறார்.

ராஜாங்கத்தில் உயர் அதிகாரப் பதவிகளை வரிசைப்படுத்தி அமைப்பதுதான் அரசியலின் ஆதார இலக்கணமாகும். அதிகாரப் பதவிகளின் குணத்தின்படியே அரசியல் அமைப்பு உருவாகிறது. ஆகையால் பொதுநல உரிமைகளை லட்சியமாகக் கொள்ளும் ராஜாங்கங்களே நல்ல ராஜாங்கங்களென மதிக்கப்படுகின்றன. ஆளுவோரின் நலன்களைமட்டும் கருத்திற்கொள்ளும் ராஜாங்கங்கள் யாவுமே கெட்ட ராஜாங்கங்களாம். அவைகளின் நோக்கத்திலிருந்தே ராஜாங்கங்களின் வகைகளை ஒருவாறு கணித்துவிடலாம்:

அரிஸ்டாட்டில் தரவாரியாகப் பாகுபாடு செய்திருக்கும் ராஜாங்க வகைகள் வருமாறு:

| முறையான ராஜாங்கங்கள் | முறைகெட்ட ராஜாங்கங்கள் |
|---|---|
| 1. முடியாட்சி (Royalty) | *1. முறைபிறழ்ந்தாட்சி (Tyranny) |

* "டிரனி" (Tyranny) என்ற இந்த ஆங்கிலப் பதத்திற்குப் பொதுவாகக் "கொடுங்கோல்" என்பதுதான் தமிழ்ப் பொருளாகும். ஆயினும், இந்த இடத்தில் அதற்கு "முறைபிறழ்ந்தாட்சி" என்று குறிப்பிடப்பட்டிருப்பதை வாசகர்கள் கவனிக்கவேண்டும். கிரேக்கர்கள் இம்மாதிரிதான் பொருள் கொண்டிருந்திருக்கிறார்கள்! வாரிசு வழியாகவோ அல்லது நேரான முறையிலோ ஆட்சி அதிகாரத்திற்கு வராமல், முறைபிறழ்ந்து வருகின்றவர்களின் ஆட்சியை அவர்கள் "டிரனி" (Tyranny) என்று கூறுகிறார்கள். இந்த "டிரனி"யிலும் மிகச் சிறந்த அரசர்கள் இருந்திருக்கிறார்கள்; நல்லாட்சி நடத்தியிருக்கிறார்கள் என்பதால்தான் கிரேக்கர்கள் இந்த "டிரனி"க்கு "கொடுங்கோல்" என்று பொருள்கொள்ளவில்லை போலும்!

| | |
|---|---|
| 2. பிரபுத்துவாட்சி (Aristocracy) | 2. சுயநலக் கும்பலாட்சி (Oligarchy) |
| 3. அரசியல் ஸ்தாபன அல்லது திட்டபூர்வமான ஆட்சி (Polity) | 3. ஜனநாயக ஆட்சி (Democracy) |

அரிஸ்டாட்டிலின், இந்தப் பாகுபடுத்தும் முறை, **பிளேட்டோவின்** முறையை ஒட்டியே இருக்கிறது! ஆயினும், அரிஸ்டாட்டிலின் தரம்பிரிக்கும் முறை வேருனதாகும்.

சட்டத்துக்கு உட்படுவதையோ அல்லது சட்டத்தை மீறுவதையோதான், அரிஸ்டாட்டில் அளவுகோலாகக் கொள்கிருர். அவர் முறைகெட்ட ராஜாங்கங்கள் எனக் கருதும் ஜனநாயக ஆட்சியின் உட்பிரிவுகளையும் சுயநலக் கும்பலாட்சியின் உட்பிரிவுகளையும் எடுத்துக் காட்டுவதற்கும், இவ்விரண்டையுமே வேறுபடுத்திக் காட்டுவதற்குமே இந்த அளவுகோலைப் பயன்படுத்துகிருர். பிளேட்டோ அரிஸ்டாட்டில் குறிப்பிடும் இரண்டுவித ஆட்சி முறைகள் ஒவ்வொன்றிலும் மூன்றுவகைகள் இருப்பதாகக் குறிப்பிடுகிருர். ஆனல், அரிஸ்டாட்டிலுக்கு ஒவ்வொன்றின் குணம் அல்லது தரந்தான் முக்கியமாகப்படுகிறது. அவருக்கு எண்ணிக்கையைக் காட்டிலும் தரமே முக்கியமாகப்படுகிறது. பணக்காரரைப் பெரும்பான்மையினராகக்கொண்டு விடுவதால், அந்த ராஜாங்கம், ஜனநாயக ஆட்சியாகிவிடாது; ஏழைகளைச் சிறுபான்மையினராகக்கொண்ட ராஜாங்கம், சுயநலக் கும்பலாட்சியாகவும் ஆகிவிடாது. பணக்காரரின் ஆட்சி, சுயநலக் கும்பலாட்சியாகவும் ஏழைகளின் ஆட்சி ஜனநாயக ஆட்சியாக இருக்கவுங்கூடும்! இந்தவித ஆட்சிமுறைகளில், அரசியல் ஸ்தாபனம் அல்லது திட்டபூர்வமான ஆட்சிமுறையை **நடுத்**

தரவர்க்கத்தின் ஆட்சியெனக் கருதலாம். பிரபு—ஏழை—நடுத்தரத்தவன்—இவர்களைக்கொண்டே, அரசியல் அமைப்புகளின் பாகுபாட்டை, அரிஸ்டாட்டில் நிர்ணயிக்கிறார்.

அரிஸ்டாட்டில், மற்றொரு இடத்தில், கலப்பட அரசியல் அமைப்பொன்றையும் பற்றிக் குறிப்பிடுகிறார். சுயநலக் கும்பலாட்சியின் சில அம்சங்களையும்—ஜனநாயக ஆட்சியின் சில அம்சங்களையும் கூட்டித் தயாரிக்கப்பட்டதே இந்தக் கலப்பட அரசியல் அமைப்பாகும்.

ஏழைகளின் பெரும்பான்மை பலத்தால் இயங்குகின்ற ராஜாங்கத்தை ஜனநாயக ஆட்சியென்றும், பணக்காரரின் சிறுபான்மை பலத்தால் இயங்குகின்ற ராஜாங்கத்தை சுயநலக் கும்பலாட்சியென்றுங் கூட, ஒரு இடத்தில் அவர் பாகுபடுத்தி நிர்ணயிக்கிறார். இன்னும் ஓரிடத்தில் அவரே, சுயநலக் கும்பலாட்சியில், ஆள்பவர்கள் நற்குடியிற் பிறந்தவர்களாகவும், சொல்வன்மையும், செல்வச் சிறப்பும் உள்ளவர்களாகவும் இருக்கக்கூடும் என்றும், ஜனநாயக ஆட்சியில், கீழ்க்குடிப் பிறந்தவர்களும் ஏழைகளும், இழிவான சேவகத் தொழில் புரிகிறவர்களுமான மட்டரகப் பேர்வழிகள் ஆள்பவராக வந்துவிடக் கூடும் என்றும் கூறுகிறார்!

அரசியல் அமைப்புகளின் தன்மை வேறு விதத்திலும் தரம் பிரிக்கப் படுவதைக் கவனிக்க வேண்டும்.

முடியாட்சி அல்லது பிரபுத்துவாட்சி முறையில் ஒருவரே ஆள்பவராக (மன்னராக) இருக்கிறார் என்பதால் அதிகாரம் அவரிடம் ஒப்படைக்கப் படுவதில்லை; ஆள்பவரின் (மன்னரின்) அரிய குணம் அல்லது ஆளும் வர்க்கத்தின் அரிய குணம் பார்த்தே அதிகாரம் ஒப்படைக்கப் படுகிறது.

அரசியல் ஸ்தாபன அல்லது திட்ட பூர்வமான ஆட்சியிலும், செல்வம்-எண்ணிக்கை இவ்விரண்டையும் கொண்டுதான் அதிகாரம் ஆள்பவரிடம் வழங்கப்படுகிறது.

பிரஜைகளின், சேனையின் அடக்கமான குணப்பண்பின் அடிப்படையில் அதிகாரத்தை ஒப்படைக்கலாமென்றும், அரிஸ்டாட்டில் சொல்கிருர்.

"மோசடி—பலாத்காரத்தில்தான் கொடுங்கோலனின் அதிகாரங்கள் எல்லாம் பிறக்கின்றன" என்று, அரிஸ்டாட்டில் கூறுகிருர்.

ராஜாங்கத்தின் பல்வேறு அங்கங்களின் பட்டியலையும் பின்வருமாறு அவர் தயாரித்திருக்கிருர் :

1. உணவு தானியங்களை உற்பத்தி செய்கிற விவசாயிகள்.
2. கொல்லர்கள்.
3. வர்த்தகர்கள்.
4. அடிமைகள்.
5. போர்வீரர்கள்.
6. நீதிபதிகள்.
7. உயர்ந்த பொதுநல சேவை செய்பவர்கள்.
8. அதிகாரவர்க்கம்.
9. சட்டமியற்றும் ஸ்தாபனம்.

பல்வேறு அரசியல் அமைப்புகளை ஒப்பிட்டு ஆராய்வதற்கு உதவியாக சூத்திரமாக இருப்பது அரிஸ்டாட்டிலின் கொள்கை முறைதான், அவரது முறையே ஆதாரமாக எடுத்துக் காட்டப்படுகின்றன.

ஏறக்குறைய, அரிஸ்டாட்டிலின் குணக் கொள்கை அடிப்படையிலேயே, சட்ட பூர்வ அரசியல் முறைக்கும்

யதேச்சாதிகார முறைக்கும் உள்ள வேற்றுமைகளை, தற்கால அரசியல் நிபுணர்கள் விமரிசனம் செய்வதைக் காணலாம்.

முடியாட்சி, பிரபுத்துவாட்சி, சுயநலக் கும்பலாட்சி இவற்றையெல்லாம் வேறுபடுத்திக் காட்டவும் அரிஸ்டாட்டிலின் இதே குண அடிப்படைக் கொள்கையே பெரிதும் உபயோகப்படுத்தப்படுகிறது.

ஆதார ராஜாங்கம், பிரதிநிதித்துவ ஆட்சி, ஒரே ராஜாங்கம், சமஷ்டி முறை, சாம்ராஜ்ய முறை யென்னும் பல ராஜாங்க முறைகளைப்பற்றியும் அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார். ஆனால், இவைகளை அவர் விவரிக்கவில்லை.

அரிஸ்டாட்டிலின் அரசியலில், நீதியைப் பற்றிய விளக்கப் பகுதியே மிகச் சிறந்த பகுதியாகும்.

தார்மிகப் பண்பில்லாத ராஜாங்கம் வெறும் சாரமற்ற கூட்டுறவு ஆகிவிடும்! அத்தகைய ராஜாங்கத்திற்கு லட்சியமே இல்லையென்று சொல்லிவிடலாம். அங்கே சட்டமும் வெறும் சம்பிரதாயமாகவே யிருக்கும்; மனிதர்களை நற்குணப் பண்புள்ளவர்களாக உருவாக்க இயலாதவாறு, அதிகாரம், தனது ஆக்கத் தன்மையை இழந்துவிடுகிறது; அநீதியை எதிர்க்க வல்ல சக்தியையும் இழந்துவிடுகிறது.

பரிபூரண வாழ்க்கைக்காக, தன் தேவைகளையெல்லாம் தானாகவே பூர்த்திசெய்துகொள்ள வல்லதும், சுயதேவைப் பூர்த்தி வாழ்க்கைக்காகவும், க்ஷேம நலனுக்காகவும் ஒன்று சேர்ந்தியங்கும் மகா சமூகமே ராஜாங்கமாகும். உன்னத செயல்களைச் செய்யவே ராஜாங்கம் உள்ளதென்றால், அதிகாரம் எவர் கையில் இருக்கவேண்டும்? சுதந்திரமானவன் அல்லது நற்குலத்தவன் கையில் இந்த அதிகாரம் இருக்க வேண்டியதில்லை. **நல்லவர் கையில்தான் இத்தகைய அதிகாரம் இருக்கவேண்டும்!**

நல்ல குணத்திற்குக் குறைவான எதுவும் நீதியின் ஒரு அம்சமேயன்றி, முழு நீதியாகாது! 'ராஜாங்கத்துக்கு இதைவிடச் சிறந்த லட்சியத்தை வேறு யாரும், அரிஸ்டாட்டிலைத் தவிர, வகுத்துக் கொடுத்ததில்லை' எனப் பெருமிதத்துடன் பேசுவாருமுண்டு.

ஹக்ஸ்லி, "நிர்வாக சாஸ்திரம்" பற்றிக் குறிப்பிடுகையில் தனி நபர், மற்றவர்களின் சுதந்திரத்தில் தலையிடும்போது, ராஜாங்கம் அந்தத் தனி நபரின் சுதந்திரத்தில் குறுக்கிட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்! இதைப் "போலீஸ்கார சித்தாந்தம்" என்று வர்ணிக்கலாம்! ஆனால், "சட்டத்தின் மூலம்ஒருவனை நல்லவனாக்க முடியாது" என்பது அரிஸ்டாட்டிலின் வாதமாகும். பரிசுகள், தண்டனைகள் மூலம், நன்மையை நாடவும் தீமைகளை விலக்கவும் மக்களைப் பழக்கப்படுத்த முடியும் என்பதை அரிஸ்டாட்டிலும் ஒப்புக்கொள்கிறார். ஆனால், இந்த நிலையை, ஒழுக்கத்தின் பூர்வாங்க நிலையாகவே மதிக்கிறாரேயன்றி, ஒழுக்கமாகவே மதிக்கவில்லை!

பலர் கூடி ஆட்சிபுரிவதை மேலெனத் தாம் கருதுவற்கு அவர் நான்கு காரணங்களைக் காட்டியிருக்கிறார்:

1. ஒரு சில நல்லவர்களின் சேர்க்கையை விடப் பல சாதாரண மனிதர்களின் சேர்க்கையில் கூட்டாக நல்ல குணம் இருக்கக்கூடும்.
2. பெருந்திரளான மக்களுக்கு, அதிகாரத்தில் நிரந்தரமாகப் பங்கு தராவிடில், அதிருப்தி பரவும்; அதனால் அபாயம் ஏற்படும்.
3. ஆள்பவரை நீக்கவோ நியமிக்கவோ, மீண்டும் தேர்ந்தெடுக்கவோ வேண்டுமெனில் அப்பணியைப் பொதுமக்களிடம் விடுவதே நலமாகும். வீடும்விருந்தும்பற்றி அனுபவிப்பவனுக்குத்தான்

நன்ருகத் தெரியும் ; வீட்டைக் கட்டிய கொத்த னுக்கோ, அல்லது சமைத்த நளபாகிக்கோ தெரியாது! எனவே, ஆட்சியின் நன்மை - தீமைகளை அனுபவித்தவனுக்கே தெரியும் ; அதைக் கொள்ளவும் அல்லது தள்ளவும் திறமையிருக்கும்!

4. தனி நபர், ஆசாபாசங்களுக்குக் கட்டுப்பட்டவன் ஆதலால், அவன் கோபதாபம் கொள்பவனுக இருக்கிருன் ; மக்கள், ஒரு கூட்டமாக ஆத்திரங் கொள்வது இயலாது! (ஜனத்திரளின் வெகுண்டெழும் மனோநிலையை, அரிஸ்டாட்டில் தெரிந்து கொள்ளவில்லையோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது!)

அரிஸ்டாட்டில், நிறைந்த - உன்னதமான பண்புள்ள மனிதனின் முடியாட்சிதான் லட்சிய பூர்வமான அரசியல் முறையெனக் கருதுகிருர். தனிப்பட்ட முறையில், தலைசிறந்த மனிதனுகவும், மக்களுக்குள்ளேயும் உயர்ந்து விளங்குபவனுகவும் உள்ள புருஷோத்தமனை மன்னனுக ஏற்று நடத்தப்படும் முடியாட்சியே மிகச் சிறந்தது என்று அரிஸ்டாட்டில் கருதுகிருர். (ஆனல் அத்தகைய மகாபுருஷன் எங்கே யிருக்கிருன்?)

## முடியாட்சி

முடியாட்சியை அரிஸ்டாட்டில் மிகச் சிறந்ததெனக் கருதுகிருர் என்று மேலே குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனிக்கத் தவறக்கூடாது! அதைப்பற்றி அவர் இங்கே விவரமாகப் பரிசீலிக்கிருர்.

சேனுபதியாகவும், சமயத் தலைவனுகவும் உள்ள ஒருவனை மன்னராகக்கொண்ட ஸ்பார்ட்டாவின் அரசியல் அமைப்பை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

மன்னன் முக்கியமா? அல்லது சட்டம் முக்கியமா? என்ற கேள்வி பிறக்கிறபோது, சட்டமே முக்கியம் எனலாம். ஏனெனில், சட்டமென்பது விருப்பு–வெறுப்பில்லாத விவேகத்திலிருந்து பிறக்கிறது. ஆயினும் குறைமிகுந்த ராஜாங்கம் இயற்றுகின்ற சட்டமும் குறையுள்ளதாகவே இருக்கும். அதனால், சட்டத்தைப் பொதுவாகப் பயன்படுத்திக் கொள்ளலாமென்றும், சட்டம் பயன்படாத விவகாரங்களில் தனியாரின் அறிவைப் பயன்படுத்திக் கொள்ளலாமென்றும் முடிவுக்கு வந்தார் அரிஸ்டாட்டில்!

'சட்டத்தை நிரந்தரமாக்கிவிட வேண்டும்; அதற்கு உதவியாக விதிகளைப் பார்லிமெண்டு அல்லது சட்டசபை இயற்ற வேண்டும்' என்றும் அரிஸ்டாட்டில் சொல்கிறார்.

சாத்திரத்தை மாற்றக்கூடாதென்கிற 'வைதிக தரும'த்தைப் போன்றதே அரிஸ்டாட்டிலின் கருத்தும்! அசாதாரண நிலைமைகளில்தான் சட்டத்தை மாற்றலாமேயொழிய, மற்ற வேளைகளில் அதன் அமுலில் தலையிடக்கூடாது என்றும் அவர் கூறுகிறார்.

"ஆண்டைக்கும் - அடிமைக்கும் உள்ள உறவுமுறை இயற்கையானது. அதேபோல, பிரஜைக்கும் - மன்னனுக்கும் உள்ள உறவு முறையும் இயற்கையானது" என்கிறார் அரிஸ்டாட்டில். மன்னன் எப்போதும் தன் குடிமக்களின் நலனையே கோரவேண்டும்; அவர்களைவிடச் சிறந்தும் விளங்கவேண்டும். "மாந்தருள் தெய்வம்" இருப்பின், முடியாட்சியே சிறந்ததென அவர் கூறுகிறார்.

கிரேக்க ராஜாங்கத்துக்கு அனுபவ சாத்தியமான லட்சியத்தை அவரே வகுத்துக்கொடுத்தார். நடுத்தர வர்க்கத்தின் திடகாத்திரமான ராணுவ குணத்தை ஆட்சி புரிவதற்கான தகுதியாக நிர்ணயித்தார். அவரது சீடரான அலெக்ஸாந்தர் தலைசிறந்த ராணுவ வீரனாக

விளங்கியதை நினைவூட்டிக்கொண்டால், அரிஸ்டாட்டில் மக்கள் தலைமைக்கு இத்தகைய தகுதியை ஏற்படுத்திய தன் உண்மை புலப்படும்.

## ராஜாங்கத்தின் உடலமைப்பு

அரிஸ்டாட்டில் ஐந்துவித ஜனநாயகங்களைப் பற்றிச் சொல்லுகிறார்.

1. சமத்துவ அடிப்படையில் எழுந்த ஜனநாயகம். இதில் ஏழை - பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வில்லை.
2. குறைந்தபட்ச எழுத்தறிவுத் தகுதியைப் பெற்றவர்கள் ஜில்லா அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பது. இந்த முறை விவசாயிகளுக்கு ஏற்றதென அவர் நினைக்கிறார்.

மூன்றாவது – நான்காவது முறைகள் நடுவாந்தரமான முறைகளாம். ஐந்தாவதோ, முறைபிறழ்ந்த ஆட்சியைச் சார்ந்த முறையாகும். இந்த ஐந்தாவது முறையை அவர் அரசியல் முறையாகவே கருதவில்லை! ஏனெனில் அவர் கூறுகிறபடி, 'இங்கே சட்டசபை சேவைக்குச் சம்பளம் இருக்கும்; சட்டத்தை மீற அவசரச் சட்டப் பிரகடனங்கள் இருக்கும்; பணக்காரர் பழிவாங்கப்படுவர்; ஜில்லா அதிகாரிகளின் அதிகாரத்துக்கு மதிப்பு இராது; உழைப்பாளரே மேலோங்கி நிற்பர்; பின், பெரும்பாலான ராஜாங்கங்களுக்குத் தலைசிறந்த அரசியல் வடிவத்தைத் தரவல்லது எது என்பதை ஆராய்கிறார்.

நிதான வாழ்வே இன்பவாழ்வு என்பதை அவர் **ஒழுக்கவியலில்** கூறியிருப்பதை நாம் முன்னமேயே தெரிந்து கொண்டிருக்கிறோம்.

"அளவுக்கு மீறிய பலாத்காரத் தன்மையுள்ளவர்களுக்குப் பணிகின்ற பழக்கம் இருக்காது. சிறிதுகூட முரட்டு சுபாவம் இல்லாதவர்கள் அடிமைகளாக இருக்கத் தான் லாயக்குள்ளவர்கள்! எனவே, இவ்விரு சாராருக்கும் மையமாக இருக்கின்றவர்கள் அதிகமாக உள்ள நகரங்களில்தான் ஆனந்தம் பொங்கமுடியும். இத்தகைய நடுத்தர வர்க்கத்தினர் நிறைந்துள்ள ராஜாங்கத்துக்கு ஜனநாயக வடிவமே ஏற்றது; பத்திரமானது."

பின்பு, அரிஸ்டாட்டில் ஒவ்வொரு அரசியல் அமைப்புக்கும் ஏற்ற நிர்வாக முறையையும் வகுத்துக் கொடுக்கிறார். தேர்வுமுறையிலும் பல ரகங்களை எடுத்துக் கூறியிருக்கிறார். அவைகளில் முக்கியமானவை வருமாறு:

1. எல்லா பிரஜைகளுமோ அல்லது சிலர்மட்டுமோ தேர்வு செய்வதில் ஈடுபடுதல்:
2. எல்லா பிரஜைகளுமோ அல்லது ஒரு குறிப்பிட்ட வர்க்கம் மட்டுமோ (அவர்களின் அந்தஸ்தையொட்டி) தேர்வு செய்வதில் ஈடுபடுதல். (சொத்துடமை - குடிப்பிறப்பு - திறமை முதலியவையே அத்தகுதிகள்)
3. வாக்குரிமை அல்லது திருவுளச் சீட்டுமூலம் தேர்வு செய்தல்.

ஜனநாயக ஆட்சியை ஒழுங்காக நிறுவி, நிர்வகிக்கும் வழிகளைப்பற்றியும் அரிஸ்டாட்டில் விரிவாக வரையறுத்திருக்கிறார். திறமையில் நிலவுகின்ற ஏற்றத் தாழ்வுகளைக் கவனிக்காமலேயே சமத்துவத்தைக் கோருவதும், விருப்பப்படி நடப்பதற்கான பட்டயமாகச் சுதந்திரத்தைக் கருதுவதுமான போக்குகள் ஜனநாயகத்தில் மேலோங்கியிருப்பதைக் காண, அரிஸ்டாட்டில் தவறவில்லை. ஒருவனும் தன்னை ஆளக்கூடாது என்று

கோருவதற்கும் அல்லது தானே ஆளுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்று கோருவதற்கும் ஜனநாயகத்தில் இடம் உண்டாகிவிடுகிறது. இக்கோரிக்கைகளிலிருந்தே அரசியல் அமைப்பை வகுப்பதற்கு வழி பிறக்கிறது என்ற பிரத்தியட்ச அரசியல் உண்மையைக் கவனிக்கத் தவறக்கூடாது. ஜனநாயகத்தை அதன் மிகவும் சிறந்த உருவத்தில் அமைப்பதற்காக எடுத்துக் கொள்ளப்படும் நடவடிக்கைகளோ மிக உண்மையான ஜனநாயக நடவடிக்கைகள் எனக் கருதுவது தவறு என்ற மற்றொரு அரசியல் உண்மையையும் புரிந்து கொள்ள வேண்டும்.

ராஜாங்கம் நீடித்துச் செயல்பட வல்ல ரீதியில்தான் எந்த நடவடிக்கையும் இருக்கவேண்டும். ராஜாங்கத்தை எதிர்க்கும் வர்க்கத்தைப் பழிவாங்காமல், எதிர்க் கட்சியைத் தாராளச் சிந்தையுடன், பெருந்தன்மையுடன் நடத்துவதுதான் சீரிய விவேகமாகும்.

விவேகிகள் ராஜாங்கத்தைப் "பாப்பர் சமஸ்தான"மாக்கிவிடும் அளவிற்குப் போய்விடமாட்டார்கள். அவர்கள், நாட்டை ஏழ்மையில் ஆழ்த்திவிடுவதற்காக ஆளுகையைப் பயன்படுத்த மாட்டார்கள்!

விவேகமுள்ள ஜனநாயகவாதி மக்களை மக்களாக மதிப்பான். ஏழைப் பிரஜைகளைப் பண்ணைகளில் அல்லது தொழில்களில் அமர்த்தி, அவர்களுடைய சுபீட்ச வாழ்விற்கும், சுயமரியாதை வாழ்விற்கும், சுயதேவைப் பூர்த்திக்கும் வழிசெய்து தருவான். அரிஸ்டாட்டில் பல்வேறு அரசியல் அமைப்புகளைப்பற்றி ஆராய்ந்திருப்பதைக் கவனித்தோம். அவ்வித ஆராய்ச்சியில் அவர் பல கருத்துக்களை எடுத்துரைத்திருப்பதையும் கண்டோம். அக்கருத்துக்களையெல்லாம் கூடியவரை தொகுத்துப் பார்த்தால் கீழ்க்கண்ட தரவாரி ராஜாங்க வரிசை முறையை வகுக்கமுடிகிறது.

மேலிருந்து கீழ்வரையில் உள்ள இந்தத் தரவரிசை, மிக உயர்ந்த அரசியல் அமைப்பிலிருந்து ஆரம்பமாகி பிறகு படிப்படியாக இறங்கி, கடைசியாக மிகக் கீழ்த்தரமான அரசியல் அமைப்பில் முடிகிறது. இந்த வரிசையின் ஒவ்வொரு கட்டமும் ஒரு அரசியல் அமைப்பைக் குறிக்கிறது. அந்தத் தரவாரி வரிசைக் கிரமம் அவருடைய கருத்துக்களின் பிரதிபலிப்பேயாகும்! இதோ, அந்தத் தரவாரி வரிசைக் கிரமம் :

1. லட்சிய முடியாட்சி (Ideal Royalty)
2. கலப்பற்ற பிரபுத்துவஆட்சி (Pure Aristocracy)
3. கலப்பட பிரபுத்துவ ஆட்சி (Mixed Aristocracy)
4. அரசியல் ஸ்தாபன அல்லது திட்ட பூர்வமான ஆட்சி (Polity)
5. மிகுந்த மிதவாத ஜனநாயக ஆட்சி (Most moderate Democracy)
6. மிகுந்த மிதவாத சுயநலக் கும்பலாட்சி (Most moderate Oligarchy)
7. நடுத்தர ஜனநாயக ஆட்சி (Intermediate variety of democracy)
8. நடுத்தர சுயநலக் கும்பலாட்சி (Intermediate variety of Oligarchy) (இவைகளில் முந்தைய ஆட்சி முறையையே அரிஸ்டாட்டில் வரவேற்கிறார்.)
9. அதி தீவிர ஜனநாயக ஆட்சி (Extreme democracy)
10. அதி தீவிர சுயநலக் கும்பலாட்சி (Extreme Oligarchy)
11. முறை பிறழ்ந்த ஆட்சி (Tyranny)

## ராஜாங்கத்துக்கு ஏற்படுகின்ற 'நோய்'களும்— அவற்றிற்கான 'சிகிச்சை' முறைகளும்

"ராஜாங்கத்துக்கு ஏற்படுகின்ற 'நோய்கள்', அதை எதிர்ப்பதற்காக எழுகின்ற புரட்சியின் காரணங்களே!" இந்த நோய்களைத் தீர்க்கும் சிகிச்சை முறைகளை அரிஸ்டாட்டில் கூறுகிறார். இங்கே, அவருடைய முதிர்ந்த அரசியல் விவேகமும், அனுபவ ஞானமும் மிகத் தெளிவாகத் தெரிகின்றதைக் காணலாம்.

ராஜாங்கத்திற்குப் 'புறை' வைக்கும் புரட்சிக்கான காரணங்களையும், புரட்சியின் இயக்க வேகத்தையும், அதைத் தடுக்கும் வழிகளையும் பற்றி அவர் விரிவாக ஆராய்ந்திருக்கிறார்.

புரட்சிக்கான பொதுப்படையான காரணங்களை அரிஸ்டாட்டில் ஆராய்ந்துரைக்கிறார்.

நீதியைப் பற்றி மனிதர்களின் மனத்தில் ஒருதலைப் பட்சமான கருத்து ஏற்படுகிறது. அதுமட்டுமா? அக் கருத்து அவர்களை 'வக்கிர'மாகச் சிந்தித்துச் செயலாற்றவும் தூண்டுகிறது. இத்தகைய வக்கிரப் புத்திதான் புரட்சியின் ஊற்றாகும்!

**'மனிதர்கள் யாவரும் சரிநிகர் சமானமானவர்கள்'** என்பது ஜனநாயகவாதிகளின் கோட்பாடு. **'மனிதர்கள் யாவரும் ஒரே சமமான செல்வம் படைத்தவர்களல்லர்; இந்தப் பொருளாதார ஏற்றத் தாழ்வு காரணமாக அவர்கள் யாவரும் சரிநிகர் சமானமானவர்களல்லர்'** என்பது சுயநலக் கும்பலாட்சி வாதிகளின் எண்ணம். புரட்சியாளனின் மனோநிலையும் இப்படித்தானிருக்கும். அவனது நோக்கமெல்லாம் லாபத்திலும், பதவியிலுமே நிலைத்திருக்கும். அல்லது நஷ்டத்தையும், அவமானத்தையும் எப்படித் தவிர்க்கலாம் என்பதிலேயே ஆழ்ந்திருக்கும்.

பிறருக்குப் பணமும், புகழும் கிடைப்பதைக் கண்டு ஏற்படும் ஆத்திரம், பயம், தனிநபர்களின் ஆணவப் பிரசித்தி, அருவெறுப்பு, தேர்தல் பித்தலாட்டங்கள், விசுவாசமில்லாதவர்களையும் யோக்கியதையில்லாதவர்களையும் அதிகாரத்தில் அமர்த்தும் போக்கு, சிறு மாறுதல்களில் கூடக் காட்டப்படும் அலட்சியம், ராஜாங்கத்தில் காணப்படும் வேற்றுமைகள் முதலியவைகளே புரட்சி மனோநிலை தோன்றுவதற்கான காரணங்களாம். சரித்திர ஞானத்திற் சிறந்து விளங்கிய அரிஸ்டாட்டிலுக்கு, இக் காரணங்களைக் கண்டறிவதில் எவ்விதச் சிரமமும் இல்லை.

ஜனநாயகத்தில், மக்களாட்சிவாதிகளின் மிதமிஞ்சிய கொடுமைகள் காரணமாகவும் புரட்சி தோன்றும். ஜனநாயக ராஜாங்கத்தைக் கவிழ்க்கப் பணக்காரர்கள் ஒன்று கூடுவார்கள்; அல்லது மக்களாட்சிவாதிகள் கொடுங்கோன்மையை நிறுவவுங்கூடும். சுயநலக் கும்பலாட்சியும் அதன் அடக்குமுறையின் காரணமாகக் கவிழ்க்கப் படலாம். பிரபுத்துவஆட்சியில் ஒரு சிலரிடமே எல்லா உரிமைகள், பதவிகள், அதிகாரங்களும் குவிந்து விடுவதால், அதை ஏற்காதவர்களின் புரட்சி ஏற்படலாம். ஜனநாயக ஆட்சியின் சில அம்சங்களும், சுயநலக் கும்பலாட்சியின் சில அம்சங்களும் தவறான முறையில் கலந்துவிடுவதன் காரணமாக அத்தகைய கலப்பட ஆட்சியை எதிர்க்கும் புரட்சியும் தோன்றலாம். அந்நியர் தூண்டுதலாலும் புரட்சி தோன்றலாம்.

இந்தப் 'புரட்சி நோய்'களைத் தடுப்பதற்கான முறைகளை, மிக அழகாக, அரிஸ்டாட்டில் எடுத்துக் காட்டியிருக்கிறார்:

1. "சட்டத்துக்குப் பணிந்து நடந்தாக வேண்டும் — இது மிகவும் முக்கியமானது."

அவர் விதிக்கும்முதல் விதியாகும் இது! "சிறு விவகாரங்களில்கூடச் சட்டத்துக்குப் பணிந்து நடந்தாக வேண்டும்" என்கிறார் அவர்.

2. மக்களை ஏமாற்றும் தந்திரங்களைப் பின்பற்றக் கூடாது; இதனால் பலனொன்றும் கிடைக்காது.

3. பிரஜைகளுடன் நல்லுறவு கொள்ளவேண்டும். ஆசைப்படுகிறவர்களைக் கௌரவிக்க வேண்டும். பண விஷயத்தில், சாதாரண மக்களுக்குத் தவறு இழைக்கக் கூடாது. மக்களின் தலைவர்களாயிருப்பவர்களுக்கு ஆட்சிப் பொறுப்பில் பங்கு தரவேண்டும். அதாவது, ஓரளவு ஜனநாயக ஸ்தாபனங்களை நிறுவவேண்டும்.

4. எப்போதும், அயல்நாட்டுப் படையெடுப்பு அபாயம் இருப்பதாக, மக்களிடம் தெரிவித்துக்கொண்டேயிருக்கவேண்டும்.

5. ஆளும் வர்க்கம், எப்பாடு பட்டாயினும், தங்களுடைய கட்டுப்பாடுகள் சீர்குலைந்து விடாமலிருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

6. செல்வ வினியோகத்தால் ஏற்படும் மாறுதல்களின் விளைவாகத் தோன்றுகின்ற அரசியல் விளைவுகளைக் கூர்ந்து கவனித்து வர வேண்டும். இவ் விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையுடனிருக்க வேண்டுவது அவசியமாகும்.

7. எந்தத் தனிநபரும் அல்லது வர்க்கமும் அதிக பலம் பெறும் ரீதியில் ஓங்கிவிட அனுமதிக்கக் கூடாது. ஏழைகளும்—பணக்காரர்களும், ஒருவரைக் காட்டிலும் மற்றவர் ஓங்கிப் பலமுள்ளவர்களாக மாறிவிடும் நிலைமையை எப்படியும் தடுத்துவிட வழி செய்யவேண்டும்.

இல்லையேல்,

8. அதிகாரத்தை நடுத்தரவர்க்கத்தினர் வசம் ஒப்படைத்துவிட வேண்டும்.

ஆட்சியாளர்கள், தங்களுடைய அரசியல், அதிகாரப் பதவிகள் காரணமாகப் பணம் திரட்டுவதற்கு ஆசைப்படுகிறார்கள். அப்படிப் பட்டவர்களின் இந்த ஆசைப் பூர்த்திக்கு எவ்வித வாய்ப்பும் இருக்கக்கூடாது. இதை, அரிஸ்டாட்டில் கண்டிப்பான அரசியல் நீதியாகக் கருதுகிறார்

"ஆளப்படுவோரிடம் ஆளும் வர்க்கத்தினர் சிறிதும் தவறின்றி நடந்துகொள்ளவேண்டியது மிக முக்கியமாகும்" என்று அரிஸ்டாட்டில் பெரிதும் வற்புறுத்திச் சொல்லியிருப்பதைக் கவனிக்கவேண்டும்!

உயர்ந்த பதவிகளுக்கு நியமனங்களைச் செய்வதற்கு அரிஸ்டாட்டில் அடிப்படையான கொள்கைகளை வகுக்கிறார்; மூன்று தகுதிகளையும் நிர்ணயிக்கிறார்.

நீதிமுறையை ஒரு கொள்கையாக அவர் கொள்கிறார். "பதவி என்பது குணத்திற்கான பரிசு" என்பது அவரது இரண்டாவது கொள்கையாகும். நீதியும்-குணமுமே பதவியைப் பெறுவதற்கான அடிப்படைப் பண்புகள்.

**விசுவாசம், திறமை, நேர்மை** - இம்மூன்றுமே அவர் விதிக்கும் பதவிக்குரிய தகுதிகளாம்.

"தளபதியை நியமிக்க, நாணயப் பொறுப்பைவிடத் திறமையையே அதிகமாகக் கவனிக்கவேண்டும். ஏனெனில், ராணுவத்துறைப் பதவிக்கு திறமைதான் முக்கியமாகும். நிதி இலாகா அதிகாரியைப் பொறுக்கியெடுக்க நாணயப் பொறுப்பே முக்கிய அளவுகோலாக இருக்க வேண்டும்."

அரிஸ்டாட்டிலின் "குணம்" என்ற சொல்லின் பொருளிலே, குணச்சிறப்புடன், அறிவுச் செறிவும் அடங்கியிருக்கிறது!

"கல்வி கற்றவர்கள், அவரவர் எம்மாதிரி அரசியல் முறையின் கீழ் வாழ்கிறார்களோ அதற்கேற்ப தங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்" என்கிறார் அரிஸ்டாட்டில்.

மேலும், அவர், "அரசியல் அமைப்பின் விதிக்குக் கட்டுப்பட்டு நடப்பதை அடிமைத்தனம் என்று நினைக்கக் கூடாது. ஏனெனில், அதுதான் அவர்களுக்குக் கதி மோட்சம்" என்று கூறுகிறார்.

அரிஸ்டாட்டில், முடியாட்சியிலும் - முறைபிறழ்ந்த ஆட்சியிலும் ஏற்படுகின்ற புரட்சிகளை அடக்குவதற்கும் தடுப்பதற்கும் பின்பற்றக் கூடிய முறைகளைப்பற்றிக் கூறாது விட்டுவிட்டார்! ஒருகால், பிரபுத்துவ ஆட்சிக்கும் அதிதீவிர ஜனநாயக ஆட்சி - அதிதீவிர சுயநலக் கும்பலாட்சி கலந்த முறைபிறழ்ந்த ஆட்சிக்கும் சொல்லப்பட்ட அதே முறைகள், முடியாட்சிக்கும், முறைபிறழ்ந்த ஆட்சிக்கும் பொருந்தியவையே என்று அவர் நினைத்திருக்கக் கூடும்!

## லட்சிய ராஜாங்கம்

லட்சிய ராஜாங்கத்திற்கான தனியான சிறப்புத் தன்மையைக் கூறுவதற்கு முன், மிகவும் தகுதியான வாழ்க்கை யாது என்பதைப்பற்றி, அரிஸ்டாட்டில், சில நல்லியல்புகளைக் குறிப்பிடுவதன்மூலம், நிர்ணயித்து விடுகிறார்.

மனிதன் இன்பத்துடன் வாழ்வதற்காக, புறப் பொருள்கள், உடலுக்கான பொருள்கள், ஆத்மாவுக்

கான பொருள்கள் ஆகிய இம்மூன்றுமே வேண்டும். குணம் தனி நபருக்கு மட்டுமின்றி ராஜாங்கத்துக்கும் வேண்டும். மேன்மையான வாழ்க்கை, "தெய்வீக" வாழ்க்கையாகும். இதுவே, அவர் குறிப்பிடுகின்ற, தகுதியான வாழ்க்கையை விளக்கவல்ல நல்லியல்புகள்.

லட்சிய ராஜாங்கத்துக்கு இன்றியமையாத நல்ல அம்சங்களாவன:

1. ஜனத்தொகையே முதன்மையானதாகும். ஜனத்தொகையின் அவசியத்தை அதன் எண்ணிக்கையைக் கொண்டுமட்டும், முடிவு கட்டிவிடக்கூடாது. நகரத்திற்கு ஏற்ற வேலைகளையெல்லாம் செவ்வனே செய்யவல்ல திறமை கொண்ட திறமையற்ற ஜனத்தொகையே முக்கியமானதென்று அவர் கருதுகிறார். மேலும், ராஜாங்கம் தன்னிறைவுடன் இயங்குவதற்கு உதவியாக எவ்வளவு, குறைந்தபட்சம் போதுமான மக்கள் இருக்கவேண்டுமோ அவ்வளவு இருந்தாலே போதும். ஜனத்தொகை அளவுக்கு மீறி அதிகரித்து விட்டால், ராஜாங்கத்தில் நல்லாட்சியும் இராது; ஒழுங்குமிராது. தவிரவும், அங்கே, விவரங்கள் கண்டவாறு அதிகரித்துவிடும். பிரஜைகள், விவேகமான முடிவுகளைச் செய்யக் கூடியவர்களாகவும், தகுதி பார்த்து உத்தியோகத் தேர்வைச் செய்பவர்களாகவும் இருக்க வேண்டும்; குணத்தையறிந்து நடப்பவர்களாக இருக்கவேண்டும். "ஒரே சமயத்தில் எளிதில் பார்க்கக் கூடியவாறு, ராஜாங்கம் அடக்கமாக அமைந்திருக்க வேண்டும். ஒரு வரையறுக்கப் பட்டகட்டுக் கோப்பான ராஜாங்கம் அமைந்தால்தான், அங்கே, பூரண பக்குவம் நிலவமுடி

யும், என்று அரிஸ்டாட்டில் குறிப்பிடும்போது, பெரிய சாம்ராஜ்யத்தைக் கட்டியாள வேண்டு மென்ற ஆசைக்கு எதிரிடையாக, அவர் உறுதி யாக நிற்பவர்போலத் தோற்றுகிறது.

2. இரண்டாவது அம்சமே, **பிரதேசமாகும்.** சுயேச் சையாக வாழ்வதற்கு வேண்டிய அளவு பிர தேசம் இருந்தாலே போதும். படாடோபத்தை வளர்க்கும் ரீதியில் அது பெரியதாக இருக்கக் கூடாது. எதிரி நுழைய முடியாதவாறும், நகர மக்கள் எளிதில் சென்று-திரும்பக்கூடியவாறும் இருக்க வேண்டும். நகரம், அதற்குரிய மக்க ளுக்கு வேண்டிய பண்டங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. **பிரஜைகளின் நற்குணமே** மூன்ருவது அம்சமாகும். மக்களின் உன்னதமான உணர்ச்சியும் செம்மை அறிவும் கலந்திருக்க வேண்டும். சுதந்திரத் தையும் நல்லாட்சியையும் பொருத்தக்கூடிய சக்தி, உன்னத உணர்ச்சி, செம்மை அறிவின் சேர்க்கையிலிருந்து உதயமாகிறது. ராஜாங்கத் தின் நிறைந்த பிரஜையிடம், நல்லுணர்வும் தேர்ந்த ஞானமும் கலந்திருக்க வேண்டும்.

ராஜாங்கத்தின் உறுப்புகளையும், அதன் முக்கிய மான பல்வேறு நிலைகளையும், பிரித்துக் காண்பதற்கு அதன் கடமைகளைக் கணக்கிட வேண்டும்.

1. விவசாயிகள்.
2. கொல்லர்கள்.
3. படைவீரர்கள்.
4. பணக்காரர்கள்.
5. குருக்கள்.

6. எது நியாயம்? எது அவசியம்? என்பதை ஆராய்ந்தறிய வல்லவர்கள் - ஆகிய ஆறு வகையினருமே ராஜாங்கத்தில் இருக்க வேண்டும்.

ஒரே மனிதனிடம் இந்த ஆறுவகைக் கடமைகளையும் காணமுடியுமா? அரசியல் கடமைகளைச் செய்வதற்கான குணமோ அல்லது ஆற்றலோ தொல்லருக்கில்லை; இதைப் பற்றி நினைப்பதற்கே உழவருக்கு நேரமில்லை; படை வீரரிடம் இருக்கவேண்டிய குணம் வேறு; நீதிபதிகள் அல்லது மந்திரிகளிடம் இருக்கவேண்டிய குணம் வேறு. படை வீரனுக்குப் போதிய சரீர பலம் வேண்டும்; நீதிபதி அல்லது மந்திரிக்குப் போதிய ஞான விவேகம் வேண்டும். பலம் அதிகமாகக் கொண்டவர்கள் ஆட்சி புரிவதற்கான சந்தர்ப்பத்தை இழக்க விரும்பமாட்டார்கள்; அதனால், ஒருவனே தனது இளமையில் படை வீரனாகவும், தகுந்த வயதில் ஆள்பவனாகவும், முதுமையில் குருவாகவும் இருக்கலாம்.

நிலவுடைமை உழவரிடம் இருக்கக் கூடாது; ஆளும் வர்க்கத்திடமே இருத்தல் வேண்டும். ஏனெனில், உழவரும் தொல்லரும் பிரஜைகள் அல்ல; அடிமைகளே! இதன் மூலம், மேலே குறிப்பிடப்பட்ட ஆறு வகையினர், அரிஸ்டாட்டிலின் கருத்துப்படி, படைவீரர், ஆள்பவர், குருமார் ஆகியோராக, மூவகையினராகி விடுகிறார்கள். இந்த மூவகை இத்தவரைக் கொண்ட ஆளும் வர்க்கத்தினரே அரிஸ்டாட்டிலின் லட்சிய ராஜாங்கத்தின் உறுப்பினராகும்.

அரிஸ்டாட்டில் பொது நிலவுடைமையை எதிர்ப்பவராயினும், நிலத்தில் ஒரு பகுதியை ராஜாங்க உடைமையாக்குவதை ஆதரிக்கிறார். பொது பூஜைக்கும், பொது உணவு அளிப்பதற்கு நிலம் ஒதுக்கக் கோருகிறார்.

ஒவ்வொரு பிரஜைக்கும் நகர எல்லையோரத்தில் துண்டு நிலமும், நகரத்திற்குள் துண்டு நிலமும் இருக்க வேண்டும். நாட்டின் பந்தோபஸ்தில் ஒவ்வொரு பிரஜைக்கும் அக்கறை இருக்க வேண்டும் என்பதற்கே எல்லையோரத்தில் பிரஜைகளுக்கு நிலமிருக்க வேண்டுமென்பதை அவர் வற்புறுத்துகிறார்.

தலை சிறந்த ராஜாங்க அமைப்பு எது? இன்பமான வாழ்க்கை வாழக் கணிசமான அளவுக்கு வாய்ப்பளிக்கும் ராஜாங்கமே தலை சிறந்ததாகும். அந்த இன்ப வாழ்வும் நற்குணத்தின் ஆதாரத்தில் இயங்கவேண்டும். அக்குணமோ மூவகை அம்சங்களைக் கொண்டதாகும். முதல் அம்சம் இயற்கையானது; மற்ற இரண்டும் பழக்கத்தினாலும், நியாயமான வாழ்க்கை நியதியாலும் அமைகின்றன. நற்பழக்கமும், நல்லுணர்ச்சியும் கல்வியின் மூலமே ஏற்படுகின்றன.

குடிமக்களை நல்ல பிரஜைகளாக்க, அவர்களுக்குச் சரியான பயிற்சியளிக்கவேண்டும். ஒரு லட்சியத்தை நாடிச் செயல் புரிகின்ற போக்கிலேதான் மனிதனுடைய நல்லதும், கெட்டதுமான உணர்ச்சிகள் வெளிப்படுகின்றன. அரசியல் சாஸனத்திற்குப் பணிந்து நடப்பதில் அவமானம் ஏதுமில்லை. நல்ல பிரஜைதான், நல்ல ஆட்சியாளனாகத் தகுதியுள்ளவன்.

மனிதனுடைய லட்சிய அறிவு, விதி செய்வதற்கு லாயக்குள்ள குணத்திலிருந்தே தோன்றுகிறது; வெறும் நியாயத்தை மட்டும் பின்பற்றுவதாலேயே இது தோன்றி விடுவதில்லை. இந்த நியாயமோ இருவகைப்படும். ஒன்று, காரியத் திறனுள்ள நியாயமாகும்; மற்றொன்று சிந்தனையைத் தூண்டுகின்ற நியாயமாகும். இந்தச் சிந்தனையைத் தூண்டவல்ல நியாயமே சாலச் சிறந்ததாகும், ஏனெனில், சிந்திக்கிற மனிதனிடமிருந்தே அமைதியொளி

வீசுகின்றது. யுத்தம், வர்த்தகத் தொழில் முதலிய விவகாரங்களுக்குக் காரியத் திறனுள்ள நியாயமே பயன்படும். ஆகையால்தான், யுத்தமும்ஆதிக்கமுமே வாழ்வின் ஆதியும் அந்தமும் என்றுகருதுவதை அரிஸ்டாட்டில் கண்டிக்கிருர்.

மனிதன் அடிமைப் படுவதிலிருந்து தன்னைத் தடுத்துக் கொள்ள வழி செய்வதை அவனுடைய முதல் வேலையாக்குகிருர் அரிஸ்டாட்டில்.

'ஒழுக்கத்தைவிட ராஜாங்கம் உயர்ந்தது' என்ற மாயை, அவருடைய கண்ணையோ, அறிவையோ மறைத்துவிடவில்லை.

ஆத்மாவை விட உடல் விரைவில் முதுமையை எய்துகிறது; பசி, காரணத்தைவிட வேகமாக வளர்ந்து விடுகிறது. கல்விப் பயிற்சி உடலில் தொடங்கி, பசியுடன் வளரும்; கடைசியில்தான் நியாயத்தைக் கவனிக்கும். ஆயினும், அது ஆத்மாவுக்காக உடலுக்குப் பயிற்சியூட்டும்; காரணத்துக்காகப் பசியை வளர்க்கும். அதனுல்தான் "குழந்தையின் பிறப்பு முதலே அதன் கல்விக்கான சகல பொறுப்புகளையும் ராஜாங்கம் ஏற்கவேண்டும்" என்கிருர் அரிஸ்டாட்டில்.

அரிஸ்டாட்டிலின் கல்வி முறையை, அதன் கொள்கையளவில் அறிந்துகொள்வது அவசியமாகும்.

அவரது கல்வி முறை, வெறும் உபயோகத்தை மட்டும் குறிக்கின்றதல்ல; நல்லொழுக்கத்தை வலியுறுத்துகின்ற ஏற்பாடேயாகும். அவரது கல்வி முறையில், தொழிற் கல்வி பற்றிய அம்சம் ஏதுமில்லை. ராஜாங்கத்தின் உறுப்புக்கள் என்று அவரால் கருதப்படாத தொழிலாளி வர்க்கத்தின் கல்வியைப் பற்றி அவர் கவலைப்படவேயில்லை.

சிறந்த படை வீரராகவும், நல்ல பிரஜைகளாகவும், முடிவில் ஆட்சியாளராகவும் பிரஜைகளை உருவாக்கவேண்டும் என்பதே அவரது கல்வி முறையின் நோக்கமாகும்.

அரிஸ்டாட்டிலின் ராஜாங்கம் சன்மார்க்கத்தின் பிரதிநிதி; ஒழுக்கத்தின் உருவே அவருடைய ராஜாங்கம் என்று சொன்னால் அது மிகையன்று. நல்ல வாழ்க்கைக்குத் தடையாயிருக்கும் தடங்கலை மட்டும் அகற்றுவதற்காக ஏற்பட்ட பணியாளனல்ல. அதனால்தான் அவர் ஒழுக்கம் சேர்ந்த கல்வியை அதிகமாக வற்புறுத்துகிறார்.

லட்சிய ராஜாங்க தத்துவத்தைப்பற்றியும், கல்விமுறைக் கொள்கையைப் பற்றியும் அவர் அரைகுறையாகவே சொல்லிப்போய் விட்டார்.

லட்சிய ராஜாங்கத்தை நிறுவும் முறை, சட்டசபைகளின் நடைமுறை விதிகள், நிர்வாக யந்திரம், நீதி பரிபாலனம் பற்றிய பூரா விவரங்களையும்—கருத்துக்களையும் இப்போதுள்ள அரிஸ்டாட்டிலின் ஏடுகளிலிருந்து பெற இயலவில்லை.

நல்ல கல்விமுறை மட்டும் இருந்து விட்டால் மற்ற அம்சங்கள் எல்லாம் தாமாகவே – இயற்கையாகவே தோன்றி, வளரும், வளம்பெறும் என்று அவர் இருந்து விட்டாரா? அல்லது அவர் எழுதிவைத்தவைகளில் சில காணமற் போய்விட்டனவா? அல்லது அவரது கற்பனை தான் மரத்துப்போய்விட்டதா? இந்தக் கேள்விக்கு எல்லாம், வாசகர்களின் கற்பனையோ அல்லது என்னுடைய கற்பனையோ சரியான பதில்களை அளிக்கமுடியா.

கடைசியாக, அவரது மற்றுமொரு கோட்பாட்டை மட்டும் கூறிவிட்டு, அவருடைய அரசியல் அல்லது ஆட்சிக் கலையைப்பற்றிய இவ்வத்தியாயத்தை முடித்து விடுகிறேன்.

குடிமக்களின் தனிப்பட்ட குணச் சிறப்பிலிருந்து தான் ராஜாங்கத்தின் உருவம் அமைகிறது. அத் தனிக் குணப் பண்பாடு, ராஜாங்கத்துக்கு வளத்தைத் தந்து,

அதை வளர்க்கவும் செய்கிறது. ஆகையால், ராஜாங்கத்துக்கு ஊட்டமளிக்கும் இப் பண்பாட்டைக் கல்வியின் மூலம் வளர்ப்பது ராஜாங்கத்தின் பொறுப்பாகும். கல்வியளிப்பது பெற்றோரின் சொந்தக் கடமையல்ல. இது ராஜாங்கத்தின் பொதுப் பொறுப்பாகும். பிரஜை எவனும் அவனுக்கே உரியவனல்ல; எல்லோரும் ராஜாங்கத்தின் உடமைகளே! ராஜாங்கமே அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்கவேண்டும்.

**"பிரஜா தருமமே ராஜாங்கமாக மலருகிறது; ராஜாங்க தருமமே பிரஜைகளைக் காக்கிறது!"**

ஏழாம் அத்தியாயம்

# பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும்

அரிஸ்டாட்டிலின் குருநாதனுன பிளேட்டோ தத்துவ ஞானியாவார்; தற்செயலாக அரசியல் பற்றுக்கொண்டு விட்டார்! "அறிவேகுணம்" என்ற சூத்திரத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்த சாக்ரடீஸ் என்ற தமது குருவிடம் பயிற்சி பெற்றவர்; அவரிடமிருந்த ஆதர்சம் கண்டவர்!

பிளேட்டோ தத்துவஞானி மட்டுமல்ல; லட்சிய வாதியுங்கூட. சமூகச் சீரமைப்பில் மனிதன் எய்த வேண்டிய நிலை யாது என்பதை விளக்குங்கால், அவர் "மனிதன் பரிபூரண உத்தம நிலையை ஏறத்தாழ எட்ட வேண்டுமெனில், அவன் லட்சியங்களை உணர்ந்தறிந்திருக்க வேண்டும் என்று உறுதிப்படுத்துகிருர்.

தத்துவத்திலும்–அரசியலிலும் பிளேட்டோ, பொதுப்படையாகக் காரண-காரிய நியாயத்தைப் பின்பற்றி வந்தார். அவரது அரசியல் கருத்துக்களும் ஒழுக்கவியல் கோட்பாடுகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. அதுமட்டுமல்ல; மனிதனுடைய ஆத்மாவை அவர், அறிவியல் - ஆத்மீகம், புலனுணர்ச்சிகள் என்றவாறு மூன்று குணங்களாகப் பிரித்து, இம்மூன்று குணங்களாகவே ஆத்மா இயங்குகிறது என்று கூறினுர். பிளேட்டோவின் அரசியல் கருத்துக்களில் இந்த மனோ தத்துவ ஆராய்ச்சியின் சாயலையே முழுதுமாகக் காண்கிருேம்.

திறமையில் உறுதியான நம்பிக்கை உள்ள பிளேட்டோ, அறியாமை எந்த உருவத்திலிருந்தாலும் அதை அடியோடு வெறுத்தார். "ராஜாங்கம் திறமையுடன் இயங்க வேண்டும். ராஜாங்கம் திறம்பட இயங்குவதற்குத் தத்துவஞானமுள்ள மன்னர்களே வழிகாட்டும் தலைவர்களாக இருக்க வேண்டும்" என்பது பிளேட்டோவின் அரசியல் சித்தாந்தமாகும். "மன்னருக்கு, சாதாரண மனிதர்களுக்குள்ள குறைபாடுகள் இருக்கலாகா. பணத்தில் மன்னர் பற்றுதல் வைக்கக்கூடாது. இணையற்ற விவேகம் உள்ளவராக அவர் இருக்க வேண்டும்" என்ற இந்த ராஜாங்க தத்துவத்தையே பிளேட்டோ தமது "ரிபப்ளிக்" (குடியரசு) என்ற அரசியல் சிந்தாந்த நூலில் விவரித்திருக்கிறார்.

பிளேட்டோ சமூகத்தை, பின்வருமாறு மூன்று வர்க்கங்களாகப் பிரித்திருக்கிறார் :

1. போஷகர்கள்,
2. போர்வீரர்கள்,
3. வாழ்க்கைக்குரிய பண்ட உற்பத்தியாளர்கள்.

இவர்களுக்கு வெவ்வேறு விதமான வாழ்க்கைக் கடமைகளையும் வகுத்துள்ளார்.

போஷகர்களுக்கு ஒருவகை ஒழுக்கவியல் "கம்யூனிஸ"த்தைத் தீர்மானித்திருக்கிறார். அவர்கள் பொது உணவுச் சாலையில்தான் உண்ண வேண்டும். அவர்களுக்குச் சொந்தச் சொத்துரிமை கூடாது.

பிளேட்டோவின் "கம்யூனிஸ"த்துக்கும் காரல் மார்க்ஸின் "கம்யூனிஸ"த்துக்கும் ஆழ்ந்த வேற்றுமையுண்டு. பிளேட்டோவின் "கம்யூனிஸ"த்திற்குப் பொருளாதார அடிப்படையே கிடையாது! அவரது "கம்யூனிஸம்"

ஒழுக்கவியல் கருத்திலிருந்து உதித்ததாகும்; அரசியல் நோக்கங் கொண்டதாகும்; ராஜாங்கத்தின் ஐக்கியத்தை நிலைநாட்டும் உறுதியை அதில் காண்கிறோம். அவர், ராஜாங்கத்தின் மற்ற வர்க்கங்களுக்குச் சற்றுத் தாராள மான சொத்துரிமையை அளிக்கிறார். பிளேட்டோவின் கொள்கை பூராவையும் அவரது ஒரே வாக்கியத்தில் அடக்கிவிடலாம். தமது அரசியல் நூலின் ஏழாவது அத்தியாயத்தில் அவர் அந்த வாக்கியத்தைப் பின்வருமாறு கூறியிருப்பதைக் கவனிக்கவேண்டும்:

**" தத்துவஞானிகள் மன்னர்களாகும் வரையிலும், மன்னர் கள் தத்துவஞானிகளாகும் வரையிலும் நாம் எவ்வித விமோ சனத்தையும் காண முடியாது!"**

பிளேட்டோ கல்விமுறையைப் பெரும் அம்சமாக மதிக்கிறார். அவரது நூலில் பெரும்பாலான பகுதியைக் கல்விக்கென்றே அர்ப்பணித்திருக்கிறார். நல்ல கல்வி முறை, ஏற்ற கல்விமுறை மக்களுக்காக இருக்கவேண்டும் என்பது அவருடைய கருத்தாகும். அவருடைய கல்வி முறையும் ராஜாங்கத்தினால் திணிக்கப் படுவதேயாகும். குழந்தைகள்மீது ஆரம்பத்திலிருந்தே ராஜாங்கத்தின் தணிக்கை முறையும், கட்டுப்பாடும் இருந்து வரும்.

நிர்வாகத் திறமையும், அரசியல் நேர்மையும், பொறுப் பும் உள்ள அரசியல் நியதியை அவர் அதிகமாக வற்புறுத் தினார்.

**" சட்டங்கள் "** என்ற தமது நூலில், பிளேட்டோ அவ்வளவு கடுமையான கொள்கைவாதியாகக் காட்சி யளிக்கவில்லை. இங்கே அவர் காரிய சித்தாந்தியாக ஆகி விடுகிறார். மனிதனுடைய குறைபாடுகளை ஏற்றுக் கொண்டு, சலுகைகள் காட்டுபவராக இருக்கிறார்.

அவரது கவனம் முழுவதும் ராஜாங்கத்திலும் அதன் நிர்மாணப் போக்கிலுமே ஈடுபட்டுவிடுகிறது. அவர் ஒரு வகைக் கலப்பட அரசியல் அமைப்பு முறையை எடுத்துரைக்கிறார். மிதமான சொத்துரிமை உள்ளவர்களிடம் ஆளும் பொறுப்பை விடலாமென்றும் கூறுகிறார்! இது வரை, எவ்வளவு சுருக்கமாக பிளேட்டோவின் கருத்துக்களை ஆராயமுடியுமோ அவ்வளவு சுருக்கமாக ஆராய்ந்தோம். இனி, இந்தத் தத்துவ ஞானியான பிளேட்டோவை அவரது சீடரான அரிஸ்டாட்டிலுடன் ஒப்பிட்டு நோக்குவோம்.

பிளேட்டோ காரண-காரிய நியாயத்தைப் பின்பற்றும் சிந்தனையாளர்; அரிஸ்டாட்டிலோ லட்சிய நியாயத்தைப் பின்பற்றும் சிந்தனையாளர். பிளேட்டோ தமது அரசியல் நூலைத் தயாரிப்பதற்கு முன்பு, 154 அரசியல் அமைப்புகளின் விவரங்களை ஆராய்ந்ததாக அறிகிறோம்; ஆனால், நடைமுறை அனுபவத்தைக் கொண்டே தமது அரசியல் சித்தாந்தத்தை அரிஸ்டாட்டில் உருவாக்கினார்; இவருக்கு முன்கூட்டியே முடிவுசெய்யப்பட்ட கருத்துக்கள் கிடையாது.

பிளேட்டோவைப் போலன்றி, அரிஸ்டாட்டில் ஒழுக்கத்தை அதிகமாக வற்புறுத்துகிறார். மனிதனுடைய கற்பனைக்கு எட்டாததும், மனிதனால் அடையமுடியாததுமானது லட்சியக் கனவுகளை பிளேட்டோ காண்கிறார்; ஆனால் அரிஸ்டாட்டிலோ, பிரத்தியட்ச உண்மைகளை நேருக்கு நேராகக் காண்கிறார்.

பிளேட்டோவைப் போலவே அரிஸ்டாட்டிலும் ராஜாங்கத்தைச் சமூகத்துக்கு இன்றியமையாத ஸ்தாபனம் என மதிப்பவர்தாம். ராஜாங்கத்தின் லட்சியமான ஐக்கியத்தை முக்கியமானதெனக் கருதுபவர்தாம். ஆயினும், சர்வாதிகார முறையைக் கொண்டுதான் ஐக்கியத்தை நிலை

நாட்ட முடியும் என்கின்ற பிளேட்டோவின் கருத்தை அரிஸ்டாட்டில் ஏற்கவில்லை. சமூகத்தைப் பாகுபடுத்துவதற்கு பிளேட்டோ பின்பற்றும் வழியால் அச் சமூகமே அழிந்துவிடும் என்றும், அவரது "கம்யூனிஸம்" அநுபவ சாத்தியமானதல்ல என்றும் அரிஸ்டாட்டில் கருதுகிருர். பிளேட்டோவின் "கம்யூனிஸ"த்தை அரிஸ்டாட்டில் 'சுத்த அபத்தக் களஞ்சியம்' என நினைக்கிருர். "ஒவ்வொருவருடைய விவகாரமும் எவருடைய விவகாரமுமல்ல" என்பது அரிஸ்டாட்டிலின் கருத்தாகும். சொந்தச் சொத்துரிமையை அரிஸ்டாட்டில் தீவிரமாக ஆதரிக்கிருர்.

"மனித சுபாவத்தையே மாற்றமுடிந்தாலன்றி நீங்கள் சொந்த சொத்துரிமையை ஒழிக்க முடியாது. மனித சுபாவத்தையோ மாற்ற இயலாது" என்கிருர் அரிஸ்டாட்டில்.

சமூகத்தின் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளதொரு ஒழுக்கவியல் சங்கமாகவே அரிஸ்டாட்டில் ராஜாங்கத்தைச் சித்திரிக்கிருர். "வாழ்க்கைக்காகத் தோன்றும் ராஜாங்கம் நல்ல வாழ்க்கைக்காகவே தொடர்ந்து உயிர் வாழ்கிறது" என்பது அரிஸ்டாட்டிலின் துணிபாகும். பகுத்தறிவு மூலம் காரிய சாத்தியமான நடவடிக்கைகளைக் கொண்டு ஒழுக்கவியல் நோக்கத்தை ஈடேற்றிக்கொள்ள ராஜாங்கம் ஒரு சாதனமேயாகும் என்று அரிஸ்டாட்டில் கருதினுர்.

சொந்த சொத்துரிமை தொன்றுதொட்டு இருந்து வருவதாலேயே அம்முறையை அரிஸ்டாட்டில் ஆதரித்தார் என்று கூறிவிட முடியாது தரும சிந்தை போன்ற சமூகக் குணப்பண்புகளின் "நாற்றங்கால்" என்றே சொந்தச் சொத்துரிமையைக் கருதினுர்.

பிளேட்டோ தமது "சட்டங்கள்" என்ற நூலில் ராஜாங்கத்தை எவ்வாறு பிரிக்கிருரோ, அதே வழியையே அரிஸ்டாட்டிலும் பின்பற்றுகிருர். நடுத்தர வர்க்கத்தினர் ஆளும் ராஜாங்கமே சிறந்ததென்பது அரிஸ்டாட்டி

லின் அபிப்பிராயமாகும் அவர், பின்வருமாறு தமது நடுத்தர வர்க்கத்தினருக்கு இலக்கணம் கூறுகிறுர்:

"பெரும் பணக்காரர்களாக இல்லாமலும், அதே சமயம் மிகவும் எளியவர்களாக இல்லாமலும் அதிக எண்ணிக்கையினராக இல்லாமலும், அதே சமயம் மிகச் சொற்பமான பேர்களாக இல்லாமலும் இருக்கின்ற வர்க்கமே நடுத்தர வர்க்கம்."

பிளேட்டோவோ, ஒருவகை **அறிவியல் பிரபுத்துவ ஆட்சி முறையை** (Intellectual Aristocracy) ஆதரிக்கிறுர்.

பிளாட்டோவைப் போலன்றி, அரிஸ்டாட்டில் ராஜாங்கத்தின் கடமைகளில் அதிகமாகக் கவனம் செலுத்தியிருக்கிறுர். சட்ட நிரூபணம், நிர்வாகம், நீதி பரிபாலனம் முதலிய துறைகளில் அரிஸ்டாட்டில் தீவிரமாகக் கவனம் செலுத்தியிருக்கிறுர். ஆனல் பிளேட்டோவோ, "எல்லாமறிந்தவரும், எல்லா நற்குணங்களும் பொருந்தியவருமான தத்துவ ஞானியான மன்னன் இருந்தாலே போதும்" என்றுமட்டும் நினைத்து விட்டார்.

மனேதத்துவ நிலைகளை நன்கு உணர்ந்த அரிஸ்டாட்டில் புரட்சி ஏற்படுவதற்கான காரணங்களை மிகத் தெளிவாக அலசிக் காட்டுகிறுர். பிளேட்டோவோ புரட்சிகளைப் பற்றிக் கவலைப்படவே இல்லை எனலாம்.

சட்டத்திற்கு மகோன்னத ஸ்தானத்தை அரிஸ்டாட்டில் அளிக்கிறுர். "ஆசையால் கெடாத பகுத்தறிவுதான் சட்டமாகும்" என்கிறுர் அரிஸ்டாட்டில். இந்த உண்மையை, பிளேட்டோவும் தமது "சட்டங்கள்" என்ற நூலில் உணர்த்தியிருக்கிறுர்.

பிளேட்டோவையும் அரிஸ்டாட்டிலையும் வெவ்வேறு அரசியல் கருத்துக்களும் உணர்ச்சிகளும் கவர்ந்துள்ளன. ஸ்பார்ட்டாவின் அறிவியல் பிரபுத்துவ ஆட்சி அமைப்பு

பிளேட்டோவின் மனத்தைக் கவர்ந்தது. ஏதென்ஸின் ஜனநாயக ராஜாங்க முறை அரிஸ்டாட்டிலின் நெஞ்சத்தைத் தொட்டது.

பிளேட்டோ, வானளாவ மறுமைத் தத்துவத்தைப் பற்றிப் பேசினாலும், அரசியல் துறையில் சர்வாதிகாரத்திற்கு ஒரு வித்தாய்த் திகழ்கின்றார் என்றே துணிவுடன் கூறலாம். ஆனால், அரிஸ்டாட்டில், மனிதனின் தனித்தன்மை உணர்ச்சி நிலைக்கும், குடும்ப வாழ்க்கைக்கும் தம் அரசியலில் ஓரளவேனும் இடம் தருகிறார். அரசியலுக்கே மனிதன் வாழ்கின்றான் அல்லது வாழ்ந்தாக வேண்டும் என்று ஒருவர் தீர்மானித்துவிட்டால் அதைவிடக் கெடுதலான நிலை வேறில்லை. மனிதனின் உயர்வுக்காக அரசியலே தவிர, அரசியல் வளர்ச்சிக்காக மனிதன் பிறந்தான் அல்லன்! ஆயினும், அரசியலுக்காக மனிதனா? அல்லது மனிதனுக்காக அரசியலா? என்ற கேள்வியை எப்பொழுதுமே எழுப்பப் பார்க்கின்றோம். இதே கேள்வியைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இயேசு நாதர் எழுப்பிவிட்டார். "ஞாயிறு சடங்குக்காக மனிதனா? அல்லது மனிதனுக்காக ஞாயிறு சடங்கா?" என்று அவர் தூண்டிய கேள்வி சிந்திப்பதற்குரியது. முறையான அரசியல் வாழ்வின்மூலம் விளைகின்ற அமைதியான சூழ்நிலையில்தான், மனிதனின் ஆத்ம வளர்ச்சி உருவாகும். அந்த அளவிற்கு அரசியல் இருந்தே தீரவேண்டும். சான்றோர்களை உருவாக்குவதே அரசியற் பணியாகும். ஆனால், எல்லோரும் சான்றோர்களாகத் திகழ்ந்து, தம் உள்ளொளி காட்டும் அறவழியில் சென்றால், அரசியலே இல்லாமற் போய்விடும். இக்காரணத்தினால்தான், 'அரசியல் எதற்காக வென்றால் அரசியலே இல்லாமல் ஆக்குதல் பொருட்டே' என்ற வாதம் எழுந்தது போலும்! இந்த வாதத்தில் ஒரு பெரிய உண்மை பொதிந்து கிடப்பதைக் காண்கிறோம். உதாரணமாக, நோயே இல்லாமற்

போனால், வைத்தியனுக்கும் வைத்தியசாலைக்கும் இடமில்லாமற் போய்விடும்; நாட்டில் சண்டை சச்சரவு அற்றுப்போகிற நிலையில் நீதிமன்றங்களுக்கும் சிறைச் சாலைகளுக்கும் இடமில்லை. அனைவரும் அறவழியில்செல்லுகின்ற பொற்காலத்தில், அரசியல்-ராஜாங்கம் முதலியனவெல்லாம் கனவாய்ப் பழங்கதையாய் மறைந்துவிடும்.

"அரசியலுக்காவே மனிதன்" என்ற விதையைப் பிளேட்டோ ஊன்றினார்; அதிலிருந்து எழுந்த நச்சு மரங்களுக்குக் கணக்கில்லை. **முசோலினி, ஹிட்லர்** போன்ற விஷக்கனிகள் அம்மரங்களில் தோன்றியதில் யாதொரு வியப்புமில்லை.

"நன்கு ஆராய்ந்து கூறுமிடத்து, பிளேட்டோவின் ஒருவகை ஒழுக்கவியல் "கம்யூனிஸம்" என்பது, **"பாசிஸ"**மேயன்றி வேறொன்றுமில்லை" என்று கூறுவாருமுண்டு. இதில் உண்மையில்லாமல் இல்லை. அவர், அறிவியல் பிரபுத்துவ ஆட்சிமுறை மூலம் சர்வாதிகார ஆட்சிக்குத் தானே வழி செய்கிறார். பிளேட்டோவின் அடிச்சுவட்டிலேதான் **ஹெகல், நீட்சே** போன்ற அரசியற் சிந்தனையாளர்கள் சென்றிருக்கின்றனர். "அரசியலில்தான் மனிதனுடைய பூரணத்துவத்தைக் காணலாம்" என்று ஹெகலும், "மனிதனின் அரசியல் வலிமையில்தான் எல்லாம் தங்கி நிற்கின்றன" என்று நீட்சேயும் முழக்கம் செய்கின்றனர். 'குருதி தோய்ந்த ஆயுத பலத்தைக் கொண்டு உலகத்தின்மீது ஆணை செலுத்தலாம், என்று பெரும் முழக்கஞ் செய்த அரசியல் வெறியர்களைத் தோற்றுவிக்கக் காரணமாயிருந்தது பிளேட்டோவின் அறிவியல் பிரபுத்துவ ஆட்சிக் கொள்கையேயாகும்' என்று கூறுகின்ற அரசியல் விமர்சகர்களுமுண்டு.

செல்வச் செருக்கில், ஆணவ மோகத்தில் ஆதிக்கமாடத் துடிக்கின்ற **'இரணியர்'**களை பிளேட்டோவின்

அரசியல் தோற்றுவிக்க இடம் தருகின்றது என்றால், அத்தகைய 'இரணியர்'களை எதிர்க்கவல்ல 'பிரகலாதர்'களை அரிஸ்டாட்டிலின் அரசியல் தோற்றுவிக்க வழி செய்கின்றது எனலாம்.

தம் கால உணர்ச்சியின் செல்வாக்கால் பாதிக்கப்பட்ட இவ்விருவருமே அடிமை முறையை ஆதரித்திருக்கின்றார்கள்.

"அடிமைகள் இல்லையெனில், பிரஜைகளுக்குப் போதிய ஓய்வு நேரம் இருக்காது; அவர்களுக்கு அவ்வித ஓய்வு நேரமில்லையெனிலோ, ஆக்க முறையில் லட்சியத்தை எய்த அவர்களால் முடியாது போய்விடும்" என்கிறார் அரிஸ்டாட்டில். இந்தக் கூற்றில் அவரது 'கிரேக்க அகங்காரம்' தொனிக்கத்தான் செய்கின்றது! ஆயினும், பிளேட்டோவைவிட அரிஸ்டாட்டில், அடிமைகளை நடத்தும் விஷயத்திலாவது சற்று முற்போக்காகவே நடந்து கொள்கிறார் என்றுதான் கூறவேண்டும்.

இலக்கியத் துறையிலும் அரிஸ்டாட்டில் பிளேட்டோ சென்ற நெறியில் செல்லவில்லை. பிளேட்டோ கவிஞர்களைப் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களைச் சிறிது ஆராய்வோம்.

கவிவாணர்களைத் தம் குடியரசிலிருந்து பிளேட்டோ அடித்து விரட்டிவிட்டார். ஆயினும், பிளேட்டோவும் கவியுள்ளம் படைத்தவர்தாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அவருடைய செறிந்த கற்பனை, சொல்லின் வன்மை, பாத்திரங்களைப் படைக்கும் இலக்கியப் பண்பாடு, உயர்ந்த சம்பாஷணைகளை அமைக்கும் ஆற்றல் இவையெல்லாம் நம்முன் எழாமலில்லை. இவ்வளவு சிறந்த விற்பன்னரான அவர், பாவலர்களுக்குத் தம் குடியரசில் ஏன் இடம் தரவில்லை என்று எவரும் கேட்கக் கூடும். இதற்கு விடை அவர் கண்ட தத்துவத்திலேயே

அடங்கியிருக்கின்றது. பிளேட்டோ பின்வருமாறு கூறுகிறார்: "உலகத்தில் தோன்றும் ஒவ்வொரு பொருளும், மூலத்தின் ஒருநிழலேயாகும் காணப்படுகின்ற மேஜை ஒரு நகலாகும்; இதன் அசல் விண்ணில் பூரணமாயிருக்கின்றது"—இந்தக் கருத்தை அரிஸ்டாட்டில் எள்ளி நகையாடுகிறார்.

"உலகம் ஒரு நிழல்; இந்த நிழலைக் காணும் பாவலனின் மனத்தில் ஒரு கருத்து அரும்புகின்றது. இந்தக் கருத்து, அந்த நிழலுக்கொரு நிழலாய்த் திகழ்கின்றது. இந்தக் கருத்துக்குக் கவிஞன் உருக்கொடுக்கின்றான், அவ்வுரு, கருத்தின் நிழலாய்ச் சமைகின்றது; உண்மையிலிருந்து மூன்று படிகளுக்கப்பால் தள்ளி நிற்கின்றது. கவிஞன் தருகிற இச்சித்திரம் உண்மையான சித்திரமன்று. இது ஒரு போலிச் சித்திரமேயாகும். இத்தகைய போலிச் சித்திரங்களைத் தருகின்ற பாவலர்கள் பொய்யர்களே. இந்தப் பொய்யர்களுக்குக் குடியரசில் இடமில்லை" என்று தர்க்க ரீதியில் வாதம் செய்கின்றார் பிளேட்டோ. ஆயினும், அவர் இசையை மிகவும் போற்றுகிறார்.

அரிஸ்டாட்டிலோவெனில் வேறு சுருதியில் இசைப்பதைப் பார்க்கிறோம். அணி இலக்கணம், பாவியலைப் பற்றி அவர் மிக அழகாகச் சர்ச்சை செய்திருக்கிறார்.

கிரேக்கர்கள், அரசியல் துறையிலும், சட்ட வழக்குகளிலும் திளைக்கின்ற மனப்பண்புடையவர்கள் என்பதை அவர்களின் சரித்திரம் கூறுகிறது. பேச்சுக்கலையை வளர்ப்பதில் அவர்கள் பெரிதும் ஆர்வம் காட்டியிருக்கிறார்கள். உண்மையான பேச்சுக்கலை மூலந்தான் அரசியல் பிரச்னைகளின் சிக்கல்களை அறுக்கமுடியும் என்று அவர்கள் நினைத்தார்கள். எனவே, பேச்சுக்கலையைப் பற்றிக் கிரேக்க நாட்டுப் பெரியோர்கள் பல நூல்களை எழுதியிருக்கிறார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள

வேண்டும். அரிஸ்டாட்டிலும் இந்நூல்களில் காணப்படும் குற்றங்குறைகளை மிகத்திறமையுடன் ஆராய்ந்திருக்கின்றார். "வெறும் உணர்ச்சியை மட்டும் தூண்டினால் போதாது. அறிவுச் சுடரை அணையாவண்ணம் காப்பாற்ற வேண்டும். பழுத்த அறிவைக்கொண்டு, தர்க்கரீதியாக, எல்லாவற்றையும் அலசிப்பார்க்க வேண்டும்" என்று அரிஸ்டாட்டில் மொழிகின்றார். சங்கிலிப்பிணைபோன்று, விவகாரம் ஒழுங்காய்ச் செல்லவேண்டும் என்பது அவருடைய கருத்தாகும். 'வெறும் உணர்ச்சியைமட்டும் கிளப்பினேமானால், அது தக்க நிலையை மாசுறச் செய்யும்...நடையில் தெளிவுதோன்ற வேண்டும்.பொருத்தமாய் அது திகழவேண்டும். அது நீசமாய்க் காட்சியளிக்கக் கூடாது. வெறும் ஆடம்பரமான ஒளிஜாலமாக அது தோன்றக்கூடாது நடையிலும் ஒரு மிதம் வேண்டும்.' எந்தத்துறையிலும் ஒரு மிதத்தையே கிரேக்கர்கள் கண்டார்கள்.

**யுரிபிடீஸ்** என்ற மிகச் சிறந்த கிரேக்க நாடகாசிரியர் தான் அரிஸ்டாட்டிலுக்கு ஒரு லட்சிய புருஷராய்த் தோன்றுகின்றார். சாதாரணமாக வாழ்க்கையில் நடமாடுகின்ற சொற்களைத்தான் சொற்பொழிவாளர்கள் வழங்க வேண்டும். கவிவாணர்கள் புதிது புதிதாக சொற்களை மொழிந்தால், அவைகள் மாந்தர்களின் உள்ளங்களைத் தொடா. பொறுக்கியெடுத்த மிகச் சாதாரண வழக்குச் சொற்களை வைத்துக்கொண்டேதான் கவிதை உணர்ச்சியை எழுப்பிவிடுகிறார் யுரிபிடீஸ். "கவிதைக்கென்று தனிமொழி கிடையாது" என்று ஆங்கிலக் கவிஞர் **வேட்ஸ்வொர்த்தும்** கூறுவதை நாம் கவனிக்கவேண்டும். இதைப்பற்றியெல்லாம் அரிஸ்டாட்டில் தமது பாவியலில் ஆராய்ந்திருக்கிறார். அவருடைய பாவியல் இப்பொழுதும் இலக்கிய உலகத்தில் தக்க இடம் பெறுகின்றது. உலகத்தை ஒரு நிழல் என்று கருதிய பிளேட்டோ,

அதன் போக்கிற்கும், அனுபவத்திற்கும், செயல்களுக்கும் உருக் கொடுப்பதெல்லாம் 'பொய் புதைந்தவைகள்' என்று கூறியிருக்கிறார் என்பது ஏற்கனவேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு நேர்மாறாக அரிஸ்டாட்டில், "உலகம் நித்தியம்; அதைப்பற்றி நுணுக்கமாக, மிகக் கவின்பெற ஆராய்ச்சி செய்யவேண்டும்" என்று கூறுகிறார்.

கலை என்பது வாழ்க்கையின் பிம்பம்; நிழல் அல்லது 'இமிடேஷன்'. 'இமிடேஷன்' என்ற ஆங்கிலச் சொல்லிற்குத் தகுந்த தமிழ்ச் சொல் இல்லை! 'அனுகரணம்' என்ற வடமொழியைச் சார்ந்த ஒரு சொல்தான் உண்டு.

'இமிடேஷன்' என்றால் அப்படியே பிரபஞ்சத்தை வரைதல் அன்று; அவ்வாறு வரையப்படுவது பிரபஞ்சத்தின் வெறும் நிழலாகவே இருக்கும். கவி பிரபஞ்சத்தைக் கவிதைக் கண்ணோடு நோக்குகின்றான். அந்தப் பிரபஞ்சம் அவன் மனத்திற்கு ஒரு தனிக்காட்சி தருகிறது. அந்தக் காட்சிக்கு அவன் தகுந்த உருக் கொடுக்கிறான். அப்படிச் செய்வதற்கே 'இமிடேஷன்' என்று பெயர். கவியின் கற்பனையின் சாயம் பொருள்மீது படர்வதால் அதற்கு ஒரு புதிய வண்ணம், ஒளி, முதலியன ஏற்படுகின்றன. இதுதான் 'இமிடேஷன்' என்ற சொல்லிற்குப் பொருள் என்று ஆபர்கிராம்பி என்ற ஆங்கில ஆசிரியர் செப்புகின்றார். கவி தரும் சொற்களை வைத்துக்கொண்டு நாமும் நோக்குவோமானால், கவிக்கு எத்தகைய அனுபவம் ஏற்படுகிறதோ அதே அனுபவம் நமக்கும் ஏற்படுகிறது. இதற்கும் 'இமிடேஷன்' என்றுதான் பெயர். கவிதை வாழ்க்கையின் வெறும் நிழலாயிருக்குமாயின் அது நன்மையை நல்காது. வாழ்க்கையை வளமுறைச் செய்வதற்கே கவிதை தோன்ற வேண்டும். வாழ்க்கையின்பால் நின்று, அதனை வளர்க்க உதவாத கவிதையை அரிஸ்டாட்டில் உதறித்தள்ளி விடு

கிறுர். "நமது கற்பனையைக் கவிதை விரியச் செய்ய வேண்டும். வாழ்விற்கு அது ஒரு உயர்ந்த லட்சியத்தை வகுத்துத் தரவேண்டும்." வாழ்வைத் தூய்மைப் படுத்து கின்ற கவிதைக்கு அரிஸ்டாட்டில் தமது அரசியலில் தக்க இடத்தைத் தரத்தான் செய்கிறுர். கவிதையை, வாழ்க்கை மரத்தின்மீது பழுத்த "செவி நுகர் கனிகள்" என்று சொன்னுல் அது மிகையாகாது! ஒன்றைப் பார்த்து ஒன் றைச் செய்கின்ற, இயற்கையாய் அமைகின்ற மனித இயல் பில்தான் கவிதை தோன்றுகிறது. இப்படிப் படைக்கின்ற கலைஞர்களுடைய சிருஷ்டிகளில் திளைக்கின்ற இயல்பும் மனிதனின் ரத்தத்தில் ஊறினதன்ருே? வண்ணப் பொலி விலும், ஓசையிலும், ஓசைக்கட்டிலும், சந்தத்திலும், நடனத்திலும் மனிதன் இன்புறுகின்ருன். அவல நாடகமும் (Tragedy) நடனத்தில்தான் பிறந்ததென்று கூற லாம். பெருங் காப்பியமும், நாடகமுமே வாழ்க்கையின் வடிவங்களாகும். இவை இரண்டும் ஆழ்ந்த பொருள் களைச் சித்திரிக்க வேண்டும். உயர்ந்த, கம்பீரமான நடை இவைகளுக்கு அமைய வேண்டும். செஞ் சொற்களில் இவைகள் கோயில் கொள்ளுவது சாலச் சிறந்ததாகும். ஒரு பெருங் காப்பியம், கம்பீரமாய்த் திகழ்கின்ற தொடர் நிலைச் செய்யுளில்தான் அமைக்கப்பட வேண்டும். இதற் குக் கால வரம்பு கிடையாது. ஆனுல் அவல நாடகமோ வென்ருல், ஒரு நாளுக்குள் முடிந்துவிடுவதாக அது அமைவதுதான் போற்றுவதற்குரியது. கால வரம்பு—தேச வரம்பு—செயல் வரம்பு (unity of time, unity of place, unity of action) இம்மூன்று வரம்புகளும் நாடகத் தில் தோன்றவேண்டும். அந்தக் காலத்தில் இலக்கியப் பூம்பொழிலில் மலர்ந்த நாடகங்களைக் கண்டுதான் இத்தகைய வரம்புகளை அரிஸ்டாட்டில் நிர்ணயித்திருக்க வேண்டும், 'எந்தக் கவிதையும், எந்தக் காப்பியமும், எந்த நாடகமும் நம்மை உணர்ச்சி வலையில் சிக்கவைப்

பதற்காகத் தோன்றுவதன்று. நம்மை அவை அச்சத்திலிருந்தும், கொடிய உணர்ச்சிகளிலிருந்தும் விடுதலை செய்ய வல்லனவாக இருக்க வேண்டும்' என்று கவிதை நியாயத்தில் நம்பிக்கை வைக்கும் அரிஸ்டாட்டில் உறுதியாகக் கூறுகிறார். "ஒரு நல்லவன் துன்பத்தை அடையக்கூடாது; அவனுக்கு இறுதியில் இன்பமே ஏற்படவேண்டும். ஒரு கெட்டவனுக்கு இன்பமே தோன்றக் கூடாது—இதுதான் நியாயம்; இதுதான் தருமம்; இதுதான் முறை. இத்தகைய நெறியைத்தான் இலக்கியம் பேணிக் காக்க வேண்டும்" என்கிறார் அரிஸ்டாட்டில். நல்ல பாத்திரங்களையே கலைஞன் படைக்க வேண்டும். கெடுதலான பாத்திரங்களுக்கு அவர்கள் தங்கள் இலக்கியப் படைப்புகளிலே சிறப்பான இடத்தைத் தரவே கூடாது என்பதை அரிஸ்டாட்டில் வற்புறுத்திக் கூறினார். **மாக்பத், சாத்தான்** போன்ற பாத்திரங்களை அரிஸ்டாடில் சிந்தித்திருக்க முடியாது! ஆனால், 'கலைஞனின் கற்பனை வட்டத்திற்குள் வராத பாத்திரங்களில்லை; இது நல்லது, இது கெட்டது என்ற கட்டுப்பாடு அவனுக்கில்லை. எடுத்துக்கொண்ட விஷயத்திற்குத் தக்க உருக் கொடுப்பதே அவன் கடமையாகும்' என்று கூறுவோரும் உளர்.

**"கலைக்காகவே கலை"** என்ற கொள்கையை அரிஸ்டாட்டில் ஆதரிக்கவில்லை. இதைப்பற்றியும் அவர் சிந்தித்திருக்க முடியாது. இதே கொள்கையைப் பேராசிரியர் **பெர்னார்டுஷாவும்** ஒப்புக் கொள்ளவில்லை. மனிதர்களுக்குக் கலைமூலம் ஏதாவது உபதேசம் செய்ய வேண்டும் என்பதே அரிஸ்டாட்டிலின் நோக்கமாகும். "கசப்பான மருந்தைத் தேனில் கலந்து குழந்தைகளுக்குத் தரப் பார்க்கின்றோம். அதுபோல, இலக்கிய விருந்துமூலம் நல்ல உபதேசத்தைக் செய்யவேண்டும். நம் நாட்டுச் சான்றோர்களும் இதே விதமாய்த்தான் சிந்தித்திருக்கின்றார்கள். மக்களை நல்

வழிப்படுத்தவே கலைகளை வளர்க்க வேண்டும். ஆதலால் கலைகளுக்குத் தக்க இடம் அரசியலில் தரப்பட வேண்டும்'' என்று அரிஸ்டாட்டில் வற்புறுத்துகிறார்.

கவிதை தீங்கை விளைவித்து விடுமோ என்று பிளேட்டோ அஞ்சுகிறார். ஆனால், அரிஸ்டாட்டிலோ வெனில், கவிதை மூலம் மாந்தர்களின் உள்ளத்தை மாசறக் கழுவ முடியும் என்று கருதுகிறார். ஆங்கிலக் கவிஞன் ஷெல்லியும்கூட, கவிவாணர்களை, "நியமிக்கப் படாத சட்ட நிபுணர்கள்'' என்று புகழ்ந்து போற்றுகின்றான். கவிஞன் தூய கனவுகளைக் காண்கின்றான். இக்கனவுகள் மெல்ல மெல்லச் சமுதாயத்தில் பரவுகின்றன. இவை மக்களின் சிந்தனையைத் தூண்டுகின்றன. இதன் விளை வாய், அவர்கள் அரசியலில் நற்பாதைகளை அமைத்துக் கொள்ள வழி யேற்படுகின்றது. இதன் பயனாய் நாட்டில் ஊழல்கள் மறைகின்றன. இத்தகைய கவிதையின் பேராற்றலை அரிஸ்டாட்டில் நன்கு உணர்ந்திருக்கிறார் என்பதை அவருடைய கவிதை இயலைப் படிப்பவர்கள் காண்பார்கள். அரிஸ்டாட்டிலின் இத்தகைய கருத்துக் கள் யாவுமே, நல்லவராய் மக்கள் வாழ்கின்ற இக லோகத் தன்மையுள்ள அரசியலுக்கே இலக்கணமாக அமைந் துள்ளன என்பதால்தான், அக் கருத்துக்கள் இங்கே ஆராயப்பட்டன.

'பிளேட்டோ, அரிஸ்டாட்டில் இவ்விருவருமே சீரிய சிந்தனையாளர்களாவர். இவ் விரு அழியாச் சுடர்களும் காலப் பனி யிருளுக்கு அப்பால் நின்று, ஒளி வீசி நிற் கிறார்கள்' என்கின்றவர்களின் கூற்றை முற்றிலுமாக மறுக்க முடியாதெனினும், இவ்விருவரிடமும் ஓரேயொரு பொதுக்குறை மட்டும் இருந்தது என்பதையும் மறந்துவிடக் கூடாது. அந்நாளைய கிரேக்கச் சூழ்நிலையே தங்கள் எண்ணங்களைப் பெரிதும் பாதிக்கும்படியாக இவ்விரு

வருமே இடங்கொடுத்து விட்டனர் என்பதே அப் பொதுக் குறையாகும்.

பிளேட்டோவின் கொள்கைப் பிடிவாதத்தை அரிஸ் டாட்டிலிடம் காணமுடியாது. அரிஸ்டாட்டிலிடம் நிதான உணர்ச்சியை நெடுகிலும் காணலாம்.

அரசியல் அல்லது ஆட்சிக் கலை என்பது "உத்வேக முள்ள விஞ்ஞானம்" என்றே அரிஸ்டாட்டில் உறுதி செய்து விட்டார்.

எட்டாம் அத்தியாயம்

# அரிஸ்டாட்டிலை கண்டிப்பவர்-ஆதரிப்பவரின் சில முக்கிய வாதங்கள்

முந்தைய அத்தியாயங்களில் அரிஸ்டாட்டிலின் பல வகைக் கருத்துக்களும் ஆராயப்பட்டிருக்கின்றன. எவ்வளவு சீரிய சிந்தனையாளராய் ஒருவர் இருப்பினும் அவரை வானளாவப் புகழ்கிறவர்களோடு, அதிதீவிரமாக அவரைக் கண்டிப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவ்வாறு புகழ்கிறவர்களும் சரி, கண்டனம், செய்கிறவர்களும் சரி, அச் சிந்தனையாளரின் கருத்துக்களை ஆழ்ந்து நோக்க நமக்கு உதவியே செய்கிறார்கள்! அதன் காரணமாய் நாம் **விருப்பு-வெறுப்பின்றியோ** அல்லது ஒரு **தலைப்பட்சமாகவோ** அவரது கருத்துக்களை விமர்சனம் செய்யப் பார்க்கிறோம். அரசியல் ஞான வளர்ச்சிப் போக்கில் இத்தகைய விமர்சனம் மக்களின் உணர்ச்சியை, ஏதாவது ஒரு வழியில் உருவகப்படுத்த பெரிதும் உதவிசெய்கிறது. எனவேதான், அரிஸ்டாட்டிலைப் புகழ்கிறவர்கள்-கண்டிப்பவர்களுடைய சில முக்கிய வாதங்கள் இங்கே திரட்டித் தரப்பட்டிருக்கின்றன.

இந்தப் பகுதியில் தரப்படும் வாதங்கள் வாசகர்களின் சிந்தனையைத் தூண்டவும், அவர்களின் அரசியல்

எண்ணங்களைத் தெளிவுறச் செய்யவும் அல்லது விரிவடையச் செய்யவும் பெரிதும் உதவி செய்யும்.

அரிஸ்டாட்டிலைக் கண்டிப்பவர்கள் கூறுகிறார்கள் :

1. "மனித சுபாவத்தைப் பற்றிய அரிஸ்டாட்டிலின் ஆராய்ச்சி சரியானதன்று. மனிதனை 'அரசியற் பிராணி' அல்லது 'பகுத்தறிவுள்ள பிராணி' என்று அவர் கூறுவதை ஏற்பதற்கில்லை" என்று கிரஹாம், ரஸ்ஸல் போன்ற பிரபல நூலாசிரியர்கள் கூறுகிறார்கள்.

2. "அடிமை முறையை அரிஸ்டாட்டில் ஆதரிப்பதை இந்தக் காலத்து அரசியல் உணர்ச்சி ஏற்றுக் கொள்ளவே கொள்ளாது."

3. "ஆதரிக்கப்படவே அருகதையற்ற சொத்துரிமைப் பிரச்னைமீது அவர் அதிகம் அனுதாபம் காட்டுகிறார். அவருடைய சொத்துரிமை-ஆதரிப்புப் போக்கில்கூட அவரின் தர்க்கவாதத் திறமை மட்டும் தெரிகிறதேயொழிய அதில் உண்மையில்லை."

4. "'ஆண்களைவிடப் பெண்கள் மட்டமானவர்கள்; ஆண்களுக்குக் கீழ்ப்பட்டு வாழ்வதற்கே பெண்கள் இருக்கிறார்கள்' என்ற அரிஸ்டாட்டிலின் வாதம் பிற்போக்கான வாதமாகும்; 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக இருக்க வேண்டும்' என்ற இன்றைய ஜனநாயக சகாப்தத்தின் எண்ணத்திற்கு இது முற்றிலும் விரோதமான கூற்றாகும்."

5. "புரட்சியைப் பற்றிய அரிஸ்டாட்டிலின் ஆராய்ச்சியில் மெய்மறந்து ஈடுபடுகிறவர்களுக்கும், அந்த ஆராய்ச்சியின் உண்மையை, 'அழியாதது'

என்று ஏற்றுக் கொள்ளுகிறவர்களுக்கும் ஒரு வார்த்தை! சொத்துரிமை பற்றிய அவரது கருத்தின் விளைவாக சமூகத்தில் வர்க்கபேதம் ஏற்பட்டு விடுகின்றது. அதன் விளைவாகத் தோன்ற வல்ல துவேஷமே புரட்சிக்கு வித்திடுகிறது. இந்த உண்மையை அவர்கள் புரிந்துகொள்ளத்தவறிவிடுகிறார்கள். "அவர்கள் மட்டுமா?...தம்முடைய சொத்துரிமை-ஆதரிப்பு வாதக் கருத்தின்படியானபொருளாதார அமைப்புத்தோன்றுமானால், அந்த அமைப்பே புரட்சிக்கு வழி செய்யும் என்பதை அரிஸ்டாட்டிலின் மனோ நிலையே மறந்துவிட்டது!"

6. "பொதுப் பரிபாலனத் துறையில் அவர் எடுத்துக் காட்டியிருக்கும் அதிகாரப் பிரிவினை ஏற்பாடு, நிர்வாக இயந்திரத்தை நகரவிடாமல் செய்து விடும்."

7. "'கல்விமுறைக்கு சர்க்காரே முழுக்க முழுக்கப் பொறுப்பேற்க வேண்டும்' என்ற அரிஸ்டாட்டிலின் கருத்து சுதந்திர வளர்ச்சிக்கு ஏற்றதன்று. அவருடைய கல்வித்திட்டத்தால், தொட்டிலிலேயே சர்வாதிகார ராஜாங்கத் தத்துவம் தோன்றிவிடும்!"

8. "கிரேக்கச் சூழ்நிலைமை மட்டுமே தமது எண்ணங்களை உருவகப்படுத்த அரிஸ்டாட்டில்இடம் கொடுத்து விட்டார். அதனால்தான் அவருடைய எண்ணங்களில் 'உலக திருஷ்டி' இல்லை. அதன் விளைவாக, பல நூற்றாண்டுகளாக அவரைப் பற்றிச் சிந்திப்பாரற்று அவர் 'மறைந்தி'ருந்தார்! மத்திய காலத்தில்தான் அவர் மீண்டும் 'கண்டு பிடிக்க'ப்பட்டார்!"

9. "அரிஸ்டாட்டிலே, மாறுதல் வேண்டாதவர் என்றே குறிப்பிடவேண்டும். அவருக்குச் சட்டத்தில் இருந்த ஆழ்ந்த நம்பிக்கையை 'மதவெறி'க்கு ஒப்பிடலாம். 'சட்டத்திற்கு, கேள்வி கேட்காமல் பணிந்து நடக்கின்ற பிரஜைகளைக் கொண்டே ராஜாங்கம் இயங்கவேண்டும்' என்ற அவரின் வாதத்தில் ஒருவகை 'மதவெறி' தொனிப்பதைப் பார்க்கலாம்."

10. "பண்டைய ஸ்தாபனங்களை அவர் பெரிதும் மதித்தார். அதனுல்தான், அவர் நெடுகிலுமாக இருந்து வந்த தனிச் சொத்துரிமையைத் தீவிரமாக ஆதரிக்கிருர். ஒரு ஸ்தாபனம், அதன் தொன்மையின் காரணமாக, நல்லதாகத்தானிருக்க வேண்டும் என்று அரிஸ்டாட்டில், ஐதீக விசுவாச உணர்ச்சியில், முடிவுகட்டி விட்டார்! அரிஸ்டாட்டிலின் 'சரித்திரக் கண்ணேட்டம்' இந்த இடத்தில் மட்டும் இருண்டுவிட்டது போலும்! சலுகைக்காரர்களின் தனி உரிமை நிலம், கொஞ்சங் கொஞ்சமாக அரிக்கப்படுகின்ற போக்கினையே சரித்திரம் நிரூபணம்செய்து கொண்டிருக்கிறது என்பதுவும், தொன்மையானது என்ற காரணத்தால் தனிச் சொத்துரிமை இனி நீடித்து நிற்கமுடியாது என்ற போக்கிற்கு நாளுக்கு நாள் அதிக பலம் ஏற்பட்டு வருகிறது என்ற உண்மையைச் சரித்திரம் நிரூபணம்செய்து கொண்டிருக்கிறது என்பதுவும் அரிஸ்டாட்டிலின் சரித்திர திருஷ்டியில் படவில்லை! தொன்மையானது என்றகாரணத்தால் எதுவுமே நல்லதாகத் தானிருக்கவேண்டும் என்ற அரிஸ்டாட்டிலின் கருத்து, மனிதனின் பகுத்தறிவுக்கு விடப்படும்

ஒரு சவால் என்றே கொள்ளவேண்டும்! இந்தக் கருத்தின் விளைவாக, சமுதாயமே தேக்கமுற்று விடும். நாமறிந்த மட்டில், சமுதாயம் மாறிக் கொண்டேயிருக்கிறது. இதுதான் இயற்கையின் பரிணாம நியதியுமாகும்.

"நிச்சயமாக மாறுதல் அடையவல்லதொன்றே சமுதாயத்தின் நிரந்தரமான போக்காகும்" என்று **பேராசிரியர் லாஸ்கி** இயற்கையின் பரிணாமப் போக்கினைச் சரியாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். சரித்திரத்தின் இந்த ஆதார அம்சத்தை அரிஸ்டாட்டில் ஏனோ அலட்சியம் செய்துவிட்டார்! அவருடைய இந்தப் போக்கு நமக்கு ஆச்சரியத்தையே தருகிறது. கால உணர்ச்சிக்கும், சூழ்நிலைக்கும், சமுதாயத்தின் தேவைக்கும் முரண்பாடாகத் தெரிகின்ற பழைய ஸ்தாபனங்களை, அவைகளின் தொன்மைச் சிறப்புக்காக, எப்படி, அப்படியே வைத்துக்கொள்ள இயலும்? அவ்வாறு அவைகளை வைத்துக்கொள்ளவே முடியாது. ஏனெனில், அவ்விதம் செய்வோமானால், சமூகத்தின் அமைதிதான் பாதிக்கப்படும்."

**11.** "தம்முடைய பிரஜையின் அந்தஸ்தையும், உரிமையையும் தெளிவுற நிர்ணயிப்பதற்காக, அரிஸ்டாட்டிலும், பிளேட்டோவின் அடிச்சுவட்டிலேயே, அடிமை முறையை ஆதரிக்கிறார்; "அடிமைகளை மிகவும் மனிதாபிமானத்துடன் நடத்த வேண்டும்" என்று கூறும் அதே அரிஸ்டாட்டில், அவர்களுடைய அரசியல் உரிமைகள் யாவையும் பறித்துவிடுகிறார்! 'இயற்கையாகவே சிலர் அடிமைகளாக இருக்கிறார்கள்'

என்ற அரிஸ்டாட்டிலின் வாதத்தை, அன்றைய கிரேக்கச் சூழ்நிலையை யொட்டி எழுந்த வாதந் தான் என்று சிலர் அதற்குச் சமாதானம் கூறுகிறார்கள்! இந்தச் சமாதானம், அவருடைய நாட்டிலேயே, அவர் மரணத்திற்குப்பின் நிலைக்க வில்லை! கிரேக்க நாட்டிலேயே அவருக்குப் பின்னர் எழுந்த குரல் சமத்துவக் குரலேயாகும். **ஸ்டோயிக்குகளும், எபிகூரியன்களுமே** இந்தச் சமத்துவச் சங்கநாதத்தை அரிஸ்டாட்டிலுக்குப் பின் கிரேக்க நாட்டிலேயே எழுப்பியவர்களாவர். தவிரவும், ஐரோப்பிய கண்டத்தில், மத்திய காலத்தில் வாழ்ந்த கிறிஸ்துவப் பாதிரிமார்களும் இதே குரலைத்தான் எழுப்பினார்கள்.''

இந்த மத்திய காலத்தில் தோன்றிய பின்வரும் ஆங்கில ஈரடிக் கவிதையிலும் இந்தச் சமத்துவக் குரல் ஒலிப்பதைப் பார்க்கலாம். ஆங்கிலக் கவிதை வருமாறு :

"When Adam delved and Eve span
who was then the gentleman?"

இந்தக் கவிதையின் தமிழ் அர்த்தம் வருமாறு :

"**ஆதாம்** உழுதான், அன்னை **ஏவாள்**
உள்ளம் உவந்தே நூல்தனை நூற்றாள்;
ஆதலால்,
பிரபு வென்ற பெயருடன் எவனுமிலையே!''

12. "இந்தக் காலத்து ஜனநாயகக் கோட்பாட்டின் ஆதார அம்சமே சமத்துவந்தான். இந்த அடிப்படையில், அரிஸ்டாட்டிலின் இயற்கையான

அடிமை முறையை நோக்குவோமானால்தான், அவருடைய பிற்போக்குத்தனம் விளக்கமாகத் தெரியவரும்.''

13. ''ஒரு சிலரைமட்டும் எஜமானர்களாக்கி, மற்ற பெரும்பாலோரை அடிமைகளாக்கும் அரிஸ்டாட்டிலின் தத்துவத்தின் மூலம், ஒருகாலும் நீதி வழுவாச் சமுதாயமோ அல்லது ராஜாங்கமோ ஏற்பட முடியாது.''

14. ''மனிதனுடைய ஆக்கத்திறனுக்கு அதிக முக்கியத்துவம் தரும் அரிஸ்டாட்டில் முதல்தர அரசியல் சிந்தனையாளராகக் காட்சியளிக்கிறார்; ஆயினும், இந்த ஆக்கத்திறனும் ஒரு சிலரிடையேதான் இருக்க முடியும் என்று சொல்லி அதை அச் சிலரின் ஏகபோக உரிமையாக்கிவிடும் போதுதான், அவர் தமது அரியாசனத்திலிருந்து சரிந்து வீழ்ந்துவிடுகிறார்!''

15. ''தனிச்சொத்துரிமை பெற்ற ஒரு சிலருக்கே அரிஸ்டாட்டில் பிரஜா அந்தஸ்தை வழங்கியதன் மூலம், சமுதாய ஐக்கியத்தை அழிக்கவல்ல வர்க்க வேற்றுமையைத் தோற்றுவித்துவிட்டார். அவருடைய இந்த ஏற்பாட்டால், ஏழைமையிற் பிறந்தோருக்கு அநீதி வழங்கப்படுகிறது.''

16. ''அரிஸ்டாட்டிலுக்குப் பதில் அளிக்கும் ரீதியில் மேடிஸன் என்ற அமெரிக்க ராஜதந்திரி ஒருவர் பின் வருமாறு கூறியிருக்கிறார்:

''சண்டை சச்சரவுகளை மூட்டிவிட முற்றிலும் தகுந்த காரணமாயிருப்பது சொத்துரிமைப் பிரச்னையேயாகும்.''

17. "'தன்னுள்ளேயே பிரிந்து நிற்கின்ற வீடு பலமாய் இருக்கமுடியாது' என்று பைபிளில் கூறப்பட்டிருக்கிறது. அதுபோல, ஏழை - பணக்காரர் என்ற ரீதியில் பிரிந்து கிடக்கும் சமுதாயமும் பலமாய் நிற்க முடியாது." (அரிஸ்டாட்டிலின் சொத்துரிமை ஆதரிப்புக் கொள்கையை இந்த வாதம் கண்டிக்கிறது.)

அரிஸ்டாட்டிலை ஆதரிப்பவர்கள் கூறுகிறார்கள் :

1. "அரசியல் பிரச்னைகளைத் தீர ஆராய்ந்த முதல்வர் அரிஸ்டாட்டிலேயாகும். மனிதவர்க்கத்தின் பண்டைய சரித்திரம், சமூகவியல், மனோதத்துவம், இவற்றையெல்லாம் இணைத்து அரசியலை சித்தாந்தப்படுத்திய பெருமை அவரையே சாரும்."

2. "அதிகாரத்தின் (Power) இயந்திர நுணுக்க சாத்திரத்தையும், அதைச் செலுத்துகின்ற மனிதன்மீது, அது எத்தகைய அல்லது எந்த அளவில் ஆதிக்கம் செலுத்துகின்றது என்பதையும் அரிஸ்டாட்டில் நன்கு அறிந்திருந்தார். அரசியல் மனோநிலைமையை அவர் மிகவும் நன்றாகப் புரிந்து கொண்டிருந்தார்."

3. "தம் காலத்திய ஸ்தாபனங்களைப்பற்றி அவர் நன்றாக ஆராய்ச்சி செய்த பின்னரே, எந்த முடிவுக்கும் வந்தார்."

4. "'ராஜாங்கம் என்பது இயற்கையாக ஏற்பட்ட ஒரு ஸதாபனமேயன்றி, '**கடவுள் அருளால்**' தோன்றியதன்று' என்று கூறியதன் மூலம், அரிஸடாட்டில் '**மன்னன் தெய்வத்தின் பிரதிநிதி**' என்ற சித்தாந்தத்தை எதிர்த்திருக்கிறார்."

5. "'மதத்திற்கும் ராஜாங்கத்திற்கும் எவ்விதச் சம்பந்தமும் இருக்கக் கூடாது' என்று கூறியதன் மூலம், அரிஸ்டாட்டில் மதச்சார்பற்ற ராஜாங்கத் தத்துவத்திற்கு முதன் முதலாக வித்திட்டார்."

6. "'சரித்திரமும், சமூகமும் மனிதனுலும் இயற்கையின் பரிணும நியதியாலுமே ஏற்பட்டவை' என்று கூறியதன்மூலம், அரிஸ்டாட்டில் மாபெரும் பிரத்தியட்ச அரசியல் சிந்தனையாளராக ஆகிவிட்டார்."

7. "'வாழ்வதற்காகவே ராஜாங்கம் அமைகிறது; நல்வாழ்வு வாழ்வதற்காகவே அது தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறது' என்று கூறுகின்ற அரிஸ்டாட்டிலின் உணர்ச்சியில் அவரது ஒழுக்கவியல் போதம் நிறைந்திருக்கிறது. நல்லவர்களைக் கொண்ட நல்லாட்சிக்காகவே அவர் முழுக்க முழுக்க வாதாடியிருக்கிருர்."

8. "'ராஜாங்கம் வேறு; ஆட்சிவேறு' என்பதை முதன் முதலாக வரையறுத்துக் கூறியவர் அரிஸ்டாட்டிலேயாகும். ஆட்சியின் நிர்வாக நடைமுறை அம்சங்களையும் அவர் மூன்ருகப் பிரித்து நன்கு ஆராய்ந்திருக்கிருர். நிர்வாக அதிகார வர்க்கம், சட்டமியற்றும் சபை, நீதி பரிபாலனம் என்று அவர் மூன்ருகப் பிரித்தார். நீதி – நிர்வாகப் பிரிவினை வேண்டுமென்று இன்று பல அரசியல் வாதிகள் பேசப் பார்க்கிருேம். இந்த நவீன அரசியல் கருத்துக்கு ஆதார உணர்ச்சியாகத் திகழ்பவர் அரிஸ்டாட்டிலேயாவார்!"

9. "புரட்சியின் காரணங்களையும், அது நேராதிருக்கச் செய்யப்படவேண்டிய பரிகாரங்களையும் விரிவாக ஆராய்ச்சி செய்திருப்பவர் அரிஸ்டாட்டிலே

யாகும். அவரது இந்த ஆராய்ச்சி இன்றைய நிலைக்கும் ஏற்றதாகவே இருக்கிறது! 'நாம் நிலைத்திருக்க வேண்டுமானால் நமது எண்ணங்கள் போக்குகளில் சீர்திருத்தம் ஏற்படவேண்டும் என்பதையே மகத்தான சரித்திர சம்பவங்கள் ஒலிக்கின்றன' என்று மெகாலே போன்ற நூலாசிரியர்கள் எழுதத் துணிவதற்கு அரிஸ்டாட்டிலின் புரட்சிபற்றிய அரிய ஆராய்ச்சியே காரணமாய் இருக்கிறது."

10. "'தனிச் சொத்துரிமை இருப்பதாலேயே செயல் ஆர்வம் மனிதனுக்கு ஏற்படமுடியும்' என்ற அரிஸ்டாடிலின் கருத்து முற்றிலும் பொருளாதார சுபீட்சத்திற்கு ஏற்றதேயாகும்."

11. "பொருளாதாரத்திற்கும் அரசியலுக்கும் உள்ள உறவு முறைகளை முதன் முதலாக ஆராய்ந்தவர் அரிஸ்டாட்டிலேயாவார்."

12. "பிரஜைகளின் ஆக்கத்திறமைகளுக்கு முதலிடம் தந்தவர் அரிஸ்டாட்டிலே யாகும்."

13. "ஓய்வு நேரத்தை ஆக்கமுறையில் எப்படிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனபதற்கு வழிவகுத்த சிந்தனையாளர் வரிசையில் அரிஸ்டாட்டிலே முதலிடம் பெறுகிறார்."

14. "அரிஸ்டாட்டிலின் எண்ணங்கள் உலகப் போக்கை ஒட்டி யிருக்கின்றன."

15. "ஒரு மாதிரி அல்லது லட்சிய ராஜாங்கத்தை உருவகப்படுத்தவல்ல—இன்றியமையாத உலகாயதத்தேவைகளை அரிஸ்டாட்டில் ஆராயும்போது, அவர் சந்தர்ப்பங்களைத் தழுவியே போகிறார்."

16. "ஏற்கனவே உள்ளதும், நன்கு பரிசீலனை செய்யப்பட்டதும், நன்ருகப் புரிந்துகொள்ளப் பட்டதுமான விஷயங்களின் கோர்வையான இழைத் தன்மையை அரிஸ்டாட்டிலின் ராஜாங்க தத்துவத்தில் காணமுடிகின்றது."

17. "பிளேட்டோ, அரிஸ்டாட்டில் இவ்விருவரிடமுமே ஒழுக்கவியல் உணர்ச்சியின் தீவிரத்தைக் காணலாம். அமைதியான சூழ்நிலை நிலவ வேண்டுமென்பதில் இருவருக்குமிடையே எவ்வித அபிப்பிராய பேதமுமில்லை. இருவருமே மிதத்தன்மையைப் பின்பற்றுகிருர்கள். இருவரும் ஒரே குரலில் நீதி, விவேகத்தின் சிறப்புகளை வலியுறுத்திப் பேசுகிருர்கள். தகுந்த கல்வி முறையின் அவசியத்தை இருவருமே வற்புறுத்திக் கூறுகிருர்கள்! நல்லவர்களைக் கொண்ட நல்லாட்சி, நல்வாழ்வைப்பற்றியும் இவ்விரு கிரேக்க ஞானிகளிடையே சிறிதுகூட அபிப்பிராய வேற்றுமையில்லை. ஆயினும், மனித சுபாவத்தைப் பொறுத்தமட்டில், இவ்விருவரும் அதிதீவிரமான அபிப்பிராய வேற்றுமை கொண்டிருந்தனர்.

"மனித சுபாவத்தின் குழைவு எல்லையற்றது; இதைச் செம்மைப்படுத்தும் செயல்களுக்கும் ஒரு எல்லையில்லை" என்கிருர் பிளேட்டோ. ஆனுல் அரிஸ்டாட்டிலோவெனில், இயற்கையாகவே தனக்குள்ள வலிமையைப் பொருத்தே மனித சுபாவத்தின் குழைவுத் தன்மை யிருக்கின்றது என்றும், அதன் நிர்மாணத்திறனைப் பொறுத்தே அக்குழைவைச் செம்மைப்படுத்த இயலும் என்றும் கருதுகிருர். அரிஸ்டாட்டில் அதி மனிதனை வெறுமனே கற்பனை செய்யாது, விஞ்ஞான

ரீதியில், பிரத்தியட்ச திருஷ்டியுடன், கூடிய மட்டிலும் சாதிக்கவல்லதொரு ராஜாங்கத்தையே அமைக்க விரும்புகிறார்.''

18. "அடிமை முறையைப்பற்றிய அரிஸ்டாட்டிலுடைய கருத்தை ஆதரிக்க முடியாதெனினும், அவரைக் கொடுமையான இதயம் படைத்தவர் என்று சொல்லிவிட முடியாது.''

19. "பெரும்பான்மையினரின் ஆட்சியையே அரிஸ்டாட்டில் விரும்பினார். அவர் ஜனநாயக வாதியே.''

20. "பணம் அல்லது எண்ணிக்கையின் தீவிர நிலைகளை அரிஸ்டாட்டில் ஆதரிக்கவில்லை. பணம் படைத்தவர்கள் அல்லது எண்ணிக்கையில் நிறைந்தவர்களின் ஆதிக்க வெறியை அவர் ஆதரிக்கவில்லை...ராணுவ வெறிகொண்டவர்களின் ஆட்சிக்கு எதிராகவே அவர் நின்றார்... திட்டபூர்வமான ஆட்சிமுறையையே அவர் ஆதரிக்கிறார்.''

21. "அரிஸ்டாட்டில் ஒரு மிதவாதியே. தனிச் சொத்துரிமையை அவர் ஆதரிப்பதிலிருந்து இது புலனாகின்றது. தனிச் சொத்துரிமையின் காரணமாக விளையவல்ல கேடுகளையெல்லாம் அவரும் அறிந்தேயிருந்தார். அவர் இந்த உரிமையைக் கண்மூடித்தனமாக ஆதரிப்பதாகச் சொல்லுவதற்கில்லை. தனிச் சொத்துரிமையைத் தாம் ஆதரிப்பதற்கு அவர் இரண்டு காரணங்களை உரைக்கிறார் :

(i) **சரித்திர பூர்வமான காரணம் :** தனிச் சொத்துரிமை ஸ்தாபன ரீதியான முறையாகத் தொன்றுதொட்டு

இருந்து வருகிறது; அது அதனால் உபயோககர மானது.

(ii) **மனோநிலை பூர்வமான காரணம்** : தனிச் சொத்துரிமை உணர்ச்சி மனித சுபாவத்திலேயே வேரூன்றிக் கிடக்கிறது. உடைமைப்பற்று என்பது, இக லோக வாழ்க்கையில் லயித்திருக்க நினைக்கும் மனிதனுக்குத் தனியான பலம் அளிக்கும் ஜீவா மிருதம் போன்றதாகும். இந்தத் தனிச் சொத் துரிமையை ஒழிக்க வேண்டுமானால், மனித சுபா வத்தையே மாற்றித் தீரவேண்டும். ஆனால், இது ஆகாத காரியம். 'மனிதசுபாவத்தை மாற்றவே முடியாது' என்ற அரிஸ்டாட்டிலின் வாதம் தீவிர மானதாகும். 'மனிதனுடைய சொத்து சேர்க்கும் ஆசைக்கோர் அளவில்லை; அதை ஒழிப்பதுஎன்பது எளிதானகாரியமல்ல' என்று **பெட்ரண்ட் ரஸ்ஸல்** போன்ற பேராசிரியர்களும், தத்துவ ஞானிகளும் கூடஎழுதுகிறார்கள்.சொத்துரிமையின் விளைவாக நேரிடவல்ல கேடுகளை, மற்றவர்களைப்போல, அரிஸ்டாட்டிலும் நன்றாக உணர்ந்தேயிருந்தார்.

22. "'பொருளாதாரச் சமத்துவமில்லாத வெறும் அர சியல்சமத்துவம்உண்மையானதன்று'என்று**லாஸ்கி** போன்றவர்கள் எழுதுவதற்கு ஆதார காரணமா யிருந்தவர் அரிஸ்டாட்டிலேயாவார் என்றாலும் மிகையில்லை! அரசியலுக்கும், பொருளாதாரத் திற்கும் நெருக்கமான இணைபாடு இருக்க வேண் டும் என்பதை அரிஸ்டாட்டில் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தது கவனிக்கத் தக்கது.

23. "புரட்சிபற்றிய அவரது தெளிவான ஆராய்ச்சி யின் சிறப்பை எவராலும் குறைத்துவிட முடி யாது. சமத்துவம் வேண்டுமென்ற மக்களின்

கோரிக்கையே, சங்கற்பமே புரட்சி ஏற்படுவதற்கான முக்கிய காரணமாகும். பிரெஞ்சுப் புரட்சியும், பின்னர் ருஷ்யநாட்டில் எழுந்த மாபெரும் புரட்சியும் இந்தக் காரணத்தைச் சரியென நிரூபித்திருக்கின்றன.

24. "'பயமே, புரட்சி ஏற்படுவதற்கான மற்ருெரு காரணம் என்று அரிஸ்டாட்டில் கூறியிருப்பது மிகப் பொருத்தமாயிருக்கிறது.

(லாஸ்கியும் இந்தக் கருத்தை ஆதரித்திருக்கிருர். "பயமே புரட்சிக்கு வழி விடுகிறது" என்கிருர் லாஸ்கி. மனப்பிராந்தியின் காரணமாகவே சர்வதேச நெருக்கடி ஏற்பட்டிருப்பதை நாம் இன்று காண்கிருேம். யுத்தமோ அல்லது புரட்சியோ இந்தப் பயம் அல்லது மனப்பிராந்தியின் காரணமாகவே ஏற்படுகின்றது.)

25. "புரட்சியைத் தடுக்க அரிஸ்டாட்டில் அறிவுறுத்தும் வழிகளும் சிறந்தவையாகும்:

"ஒரே மனிதனிடமோ அல்லது மக்கள் சமுதாயத்தின் ஒரு பிரிவினரிடமோ வரம்பற்ற அதிகாரம் இருக்க அனுமதிக்கக் கூடாது; எதிரிகளோ அல்லது இனம் தெரியாத வெளியாரோ அறிந்துகொள்ள முடியாதபடி, முக்கிய அரசியல் அதிகாரங்கள் வகிக்கப்பட வேண்டும்; அதிகாரத்தில் இருப்பவர்கள் லஞ்சம் முதலிய தீய வழிகள் மூலம் ஆதாயம் பெற அனுமதிக்கக் கூடாது; பொதுஜனங்கள் நிர்வாகத்தைப்பற்றிப் பகிரங்கமாக விமர்சனம் செய்ய வாய்ப்பிருக்க வேண்டும். இவ்வாருக அரிஸ்டாட்டில், புரட்சியைத் தடுக்கப் பல வழிகளை ஆராய்கிருர்.

மக்கள் மனம், அதிகாரிகளின் போக்கு எப்படி யெல்லாம் மாறக்கூடும் என்பதை அரிஸ்டாட்டில் மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டிருந்திருக்கிறார் என்பதையே அவருடைய, புரட்சி பற்றிய ஆராய்ச்சி எடுத்துக் காட்டுகிறது."

அரிஸ்டாட்டிலின் ஆட்சிக்கலையைப் பற்றிய இந்நூல் இத்துடன் முடிவடைகிறது.

வெறும் கற்பனை உலகத்தில் அரிஸ்டாட்டில் சஞ்சரிப்பவராகத் தெரியவில்லை. 'பலூனி'ல் இருந்துகொண்டு பறக்கின்ற ஒரு மனிதராக அவர் காட்சியளிக்கவில்லை! நல்லோர் வாழும் ஒரு அரசியல் 'காலனி'யை நிர்மாணிக்க விரும்பும், ஒரு அரசியல் ஊழியராகவே அவரைப் பலர் பார்க்கிறார்கள்!

UNIVERSITY EXTENSION LIBRARY
14 AUG 1960
MADURAI

# BOOKS OF REFERENCE


1. Aristotle—*By W. D. Ross, M.A.*
2. Masters of Political Thought (Vol. I) (Plato to Machiavelli)—*By Michael B. Foster, M.A. (Oxon)*
3. The Political Thought of Plato & Aristotle —*By Ernest Barker*
4. "Aristotle's Conception of the State" (An Essay) —*By A. C. Bradley*
5. Aristotle's Politics—*By W. L. Newman*
6. Aristotlelianism—*By John L. Stocks*
7. Aristotle—*By G. Grote*
8. Outlines of the Philosophy of Aristotle—*By E. Wallace*
9. Aristotle—*By C. Piat*
10. Ethics of Aristotle—*By Grant*
11. The Politics of Aristotle—*By Jowett*
12. A History of Political Theories —*By W. A. Dunning, Ph.D.*
13. Plato & Aristotle—*By J. A. K. Thomson*
14. History of the Science of Politics—*By Pollock*
15. Story of the Political Philosophers—*By Catlin*
16. Dangers of Obedience & Other Essays —*By Prof. Harold Laski*
17. Reflections on the Revolutions of Our Times —*By Prof. Harold Laski*
18. Political Philosophies—*By Chester Maxey*
19. Human Society in Ethics & Politics—*By Betrand Russel*